
சிவனு மனோஹரனின்



# கோடாங்கி

## Check Mate

# கோடாங்கி

சிவனு மனோஹரன்

**வெளியீடு: டிசைன் லப்**

190, ஜோர்ஜ் ஆர்.டி. சில்வா மாவத்தை

கொட்டாஞ்சேனை, கொழும்பு 13

நூல் : கோடாங்கி (சிறுகதை)
ஆசிரியர் : சிவனு மனோஹரன் ©
முதற்பதிப்பு : டிசெம்பர் 2010
அட்டை, பக்க அமைப்பு : எஸ்.அனுர்ஜன்
ஓவியம் : என்.எம்.தங்கேஸ்வரன்
அச்சிட்டோர் : டிசைன் லப்
190, ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தை, கொழும்பு 13.
0114 575 777, 077 53 83 139
வெளியீட்டாளர் : டிசைன் லப்
விலை : ரூபா 250
பக்கங்கள் : 124

Title : Kodangi (Story Book)
Author : Sivanu Mancgaran ©
First Edition : December, 2010
Cover Design : S.Anurjan
Grafix Layout & Printed : Design Lab - 0114 575 777, 077 53 83 13 9
# 190, George R. De. Silva Mw,
Kotahena, Colombo 13, Sri Lanka.
Publishers : Design Lab
Price : Rs. 250/=
Pages : 124
ISBN : 978-955-0634-01-9

# சமர்ப்பணம்

"எழுத்தின் ஜீவநதி
விரிந்து பெருகி
சுதந்திர வேகத்துடன் செல்ல
தன்னை நிராக்கிய
எழுத்து இலக்கிய கர்த்தாக்களுக்கு"

# முன்னுரை

வருத்தங்களின் சுமையுடன்

நாம் திரும்புகிறோம்

சிக்கல் மிகுந்த விளையாட்டு

நமக்குள் உருட்டிய தாயம்

வாசகனே!

இதயத்தின் மறுக்கப்பட்ட குரலாய்

........

நீ

திரைகளை கிழித்தெறி

# என்னிடம் வந்து சேரும் உனக்கு (என்னுரை)

மனசின் ஊடே கீழிறங்கி ஆத்மத்தை தொடும் யதார்த்தங்களின் வலிகளுக்கு வார்த்தைகளால் வடிவம் கொடுக்கும் போது அடையும் சுகானுபவத்தை வார்த்தை களில் மட்டறுத்து எனக்கு சொல்ல தெரியவில்லை. இருப்பினும் யதார்த்தத்திற்கு புறம்பான கற்பனைகளில் உழல்வதற்கு ப்ரியப்படாத மனசு சமூக இருப்புக் குறித்து சிந்திக்கும் தருணங்களில் எல்லாம் என்னுள் இருந்து கிளர்ந்தெழும் படைப்புகள் சமூகத்திற்கான கட்டியம் கூறுவதை சிரம் ஏந்தி பயணித்திருக்கிறது அவ்வாறான பயணத் தருணங்களில் தான் என்னுள் ஒரு படைப்பு பரிணமிக்கும் அவ்வாறாக கிளர்ந்தெழுந்த படைப்புகள் படைப்பாளின் தனித்த குரலாக ஒலிக்காமல் சமூகத்தின் குரலாக ஒலித்து நிசப்திக்கும். அவையே சமூகத்திற்கான குரலாய் ஒலிக்கும் கோடாங்கியாய் இன்று பரிணமித்திருக்கிறது.

இதில் சமூக மனசின் வலி மட்டுமல்லாது ஆதங்கங்களும் எதிர்பார்ப்புகளும் கலந்திருக்கின்றன. நுண்மையாக விழும் சமூகத்தின் மீதான பார்வைகள் எனக்குள் மாறுபட்ட கோணங்களை விரியச்செய்யும் அதற்கு எழுத்துருவம் கொடுக்கும் வரை மனசு அமைதியடையாது ஏனைனில் உள்ளுக்குள் கிடக்கும் குமைச்சல்களை எழுத்துக்களால் கொட்டித் தீர்க்கும் போதுதான் மனசு சமாதானமடையும் அதையும் தாண்டி அந்த படைப்பு மக்கள் மத்தியில் சென்று சேரும் போது அடையும் ஆனந் தத்திற்கு அளவென்பதே கிடையாது. அவ்வாறான எதிர்பார்ப்புடன் ஒலித்துப் பறையும் கோடாங்கி உங்களின் இதயங்களையும் எட்டும் என்ற நம்பிக்கை உள்ளுக்குள் விருட்சமாய் அடர்ந்திருக்கிறது.

"ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும்" எனும் முதல் தொகுப்பின் ஊடாக சமூக தரிசனத்தைப் பெற்ற போது அடைந்த அனுபவங்கள் அலாதியானவை அத் தொகுப்பு கற்றுத் தந்த அனுபவங்களை கொண்டே படைப்புலகில் கத்துக்குட்டியாய் சமூகத்தை அளந்த தருணங்களில் என்னை பக்குவமாய் பதப்படுத்தியவர்களில் ஞானம் சஞ்சிகையும் மரியாதைக்குரிய எழுத்தாளர் தி.ஞானசேகரன் அவர்களையும் நன்றியோடு நினைவுக் கூறுகிறேன். மேலும் என் படைப்புகள் செம்மை அடைவதற்கு அவ்வப்போது நல்ல வழிகாட்டல்களை வழங்கியவர்களில் மு.சிவலிங்கம் மரியா தைக்குரிய கவிஞர் சு.முரளிதரன் இலக்கிய ஆர்வலர் அந்தனி ஜீவா அவர்களுக்கும் நன்றி பாராட்டுகிறேன். என் படைப்புகள் குறித்த விமர்சனங்களை அவப்போது மடல்கள் ஊடாக தெரிவித்து வழிபடுத்தி இருக்கும் ஆய்வாளர் சாரல் நாடன் அவர் களுக்கும் திருவாளர் லெனின் மதிவானம் அவர்களுக்கும் நன்றிகள்.

வாழும் விழுமியம் மல்லிகை சி.குமார் அவர்களின் வழிகாட்டல்களும் என் படைப்புகளுக்கு உரம் ஊட்டியுள்ளன தென்றலாய் மலையக இலக்கிய வானில் சுகந்தத்தை அடர்த்தும் மொழிவரதன் ஐயா அவர்களுக்கும் தினகரன் ஆசிரியர் அருள் சத்திய நாதன், தினக்குரல் நிருபர் திரு ராமன் ஐயாவுக்கும், சூரியக்காந்தி ஆசிரியர் சிவலிங்கம் சிவகுமாரன் அவர்களுக்கும் தமிழாசான் எஸ்.கணபதிப்பிள்ளை, திருமதி லக்மி பிரபா ஆகியோருக்கும் நன்றிகள்

என் படைப்புகளின் உள்ளடக்கங்களை சரியாக புரிந்துக் கொண்டு அவற்றை ஓவியங்களாக தீட்டித் தந்த என் அருமை நண்பர் என்.எம் தங்கேஸ்வரனுக்கும், நேர்த்தியாய் சரவைப் பார்த்துத் தந்த பத்மநாதன் லோசனாவுக்கும் நன்றிகள் பல என் எதிர்பார்ப்புகளை சரியாகப் புரிந்துக் கொண்டு அச்சு பதிப்பினை செய்து நல்கிய எஸ்.அனுர்ஜன் அவர்களுக்கும், டிசைன் லப்பிற்கும் நன்றிகள் உரித்தாகட்டும். கனணி வடிவமைப்பு செய்து தந்த சிவரஞ்சனி, எமிலியான் நித்திய நிரஞ்சனா வுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் இலக்கிய நண்பர்களான சண்முகம் சிவகுமார், மாரிமுத்து சிவகுமார், கவிஞர் ஜெ.பபியான், திரு.எம்.அகிலன், தவச்செல்வம், திரு.சரவணக்குமார், அருணா லெட்சுமணன், வே.தினகரன். பெரியசாமி விக்னேஸ்வரன், திரு பாலா சங்குப்பிள்ளை, திரு தவராஜ் ஆகியோருக்கும் இலக்கிய ஆர்வலர்களான திருவாளர் வே.சந்திரசேகர், திருமதி தனலட்சுமி, எம்.அஜித்சிங், கே.நாகேந்திரா ஆகியோருக்கு நன்றி பாராட்டுகிறேன்.

மேலும் நூல் வெளிவருவதற்கு நிதி உதவி நல்கிய அருமை நண்பர் எஸ்.ஸ்டீவன், திருமதி மங்கலேஸ்வரி ஆகியோரின் பணியின் காத்திரமும் சேவையும் நன்றிகளோடு நினைவுக் கூறப்படுகிறது

என் ஆன்மா

காற்றோடு கலக்கும் வரை

உணர்வு பிரவாகமாய் கொட்டும்

கோடாங்கி

ஒரு போதும் நிசப்திக்காது

- சிநேகமுடன்-

சிவனு மனோஹரன்,

இல 86 சைட் வீதி, ஹட்டன்.

0712985552, 0774169303

sivanumanoharan@gmail.com

01

# ச(க்)தி கரகம்

## *Blind View*

தோட்டங்களில் திருவிழா தொடங்கிவிட்டால் பஞ்சவர்ணத்திற்கு இருப்புக்கொள்ளாது. தன்னுடைய கலைப் பயணத்தில் இந்தச் சுற்று வட்டாரத்தில் உள்ள தோட்டங்களில் அவளின் கால்படாத இடங்களே இல்லை. என்று சொல்லலாம்.

தோட்டத் திருவிழா பல்வேறு பரிமாணங்களை உள்வாங்கி மாற்றங் களைக் கண்டிருந்தாலும் இன்னுமே உயிர்ப்புடன் சற்றும் மிடுக்குக் குறை யாமல் இருக்கும் கலையென்றால் அது கரகம்தான்.

அதுவும் "பஞ்சா" என்று அழைக்கப்படும் பஞ்சவாணத்தின் கரகக்கோஷ்டி என்றால் சொல்லவே வேண்டாம். பெரிசு தொடங்கி சிறிசு வரைக்குமாய் பஞ்சாவின் கரகாட்ட நளினங்களில் ஆட்டம் காணதவாகளே இல்லை எனலாம்.

பங்குனி உத்திரத்தோடு தோட்டக்காடுகளில் திருவிழா களைகட்டிவிடும். பஞ்சாவும் கரகத்தோடு பணிக்குத் தயாராகிவிடுவாள். கரகத்தின் மீதான பக்தி, காதல், தொழிலின் மீது இழையோடியிருக்கும் பற்று என்று பஞ்சாவின் ஒவ்வொரு அசைவும் அதிர்வை ஏற்படுத்தும்.

அன்றொரு சனிக்கிழமை கொரங்குமல கோயில் கமிட்டியும் நான்கைந்து எடுபிடிகளும் பஞ்சா வீட்டை நோக்கிப் படையெடுத்திருந்தனா்.

"என்னாப்புள்ள இப்பிடி சொல்லிப்புட்ட, நீயில்லாட்டி திருவுழா கலகட்டாது புள்ள, ஊருல உள்ள வாண்டு பயலுக வாய அடைக்கணும்னா நீ வந்து ஆடணும் புள்ள!" என்று காவி படிந்த பற்களைக் காட்டி இழிக்கும் கோயில் கமிட்டி தலைவரின் வார்த்தைகளில் ஏதோ இரட்டை அர்த்தம் இருப்பதாய் உணர்ந்தாள் பஞ்சா.

"சரி ஒங்களுக்கும் வேணா எனக்கும் வேணா, ரெண்டு நாளு ஓடறு போட்டுக்கங்க. ஆனா ரேட்ல மாத்தமில்ல என்று அதிகாரமிடும் தோரணை அவளை சக்தியின் ரூபமாய்க் காட்டியது. வழமையாகவே கொரங்குமல திரு விழாவிற்கு பஞ்சாவின் கரகக் கோஷ்டிதான் ஆட்டம்போடும். ஆதானால் தானோ என்னவோ வெறுமனே ஆட்டம் போட்டு வயிறு பிழைக்கப்போன இடத்தில் சில உறவுகளையும் தேடிப் பெற்றாள் போலும்.

ஆங்காங்கே கட்டப்பட்டிருந்த கலர்க் கடதாசிகளும் தோரணங்களும் திருவிழாச் சூழலை ஏற்படுத்தி இருந்தன. மண்பாதையில் புழுதியைக் கிளப்பி ஊர்ந்து வந்த ரூட்வேன் கோயிலின் முன் பெரியதொரு சத்தத்துடன் நின்றது.

முழங்காலுக்கு மேல் கோணலும் மாணலுமாய்க் கட்டியிருந்த வேட்டி யைச் சரிசெய்தபடியே ஓடிவந்து பல் இழித்த கோயில் கமிட்டித் தலைவர் ஏதோ சம்பிரதாயத்திற்காய் மொழிந்த வார்த்தைகளை ஒலிபெருக்கி விழுங்கி ஏப்ப மிட்டிருந்தது.


தங்களுக்காக ஒதுக்கப்பட்டதாகக் கூறும் அறைக்குள் வந்ததும் இதுவரை கனத்த பையைத் தரையில் கிடத்திவிட்டு அங்கிருந்த ஒற்றை ராக்கையில் கரகத்தைப் பத்திரப்படுத்திய கையுடன் எட்டி நின்று கரகத்தின் அழகையும், மிடுக்கையும் கண்களை அகல விரித்து மீண்டுமொரு முறை தரிசித்து மகிழ்ந்தாள், பஞ்சா.

முழுமையாய் காலி செய்யப்பட்டிருந்த அறை ஒருவிதமான வெறுமை உணர்வைத் தந்தாலும் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த கண்ணாடி ஆறுதல் அளிப்பதாய் இருந்தது.

இரவுச் சாப்பாடு முடிந்த கையோடு ஒப்பனைப் பொருட்களைப் பரப்பி வேறொரு மாய உலகிற்கு தயாரானாள், பஞ்சா. அசலைக் காட்டிலும் நகல்

மேலானது என்று தொலையும் மனித வக்கிரங்களின் உளம் தெரிந்தவள் பஞ்சா.

அன்றும் பஞ்சவர்ணக்கிளியாய் ஜொலித்தாள். ஒப்பனை தீர்ந்த கையோடு மறுமுறை விம்பத்தில் பட்டுத் தெறித்த உருவம் சக்தியின் ஆயிரம் வடிவங்களாய் விரிந்தன. சொன்னதையே திருப்பிச் சொல்லும் கிளிப்பிள்ளையாய் ஒலி பெருக்கி "இன்னும் சற்று நேரத்தில் அம்மா ஆலயத்தில் இருந்து புறப்பட்டு விடுவாள். பக்த அடியார்களை ஆலயத்திற்கு அழைக்கின்றோம்" என செந்த மிழைப் புணரத்துடிக்கும் கொச்சைத் தமிழ் கலந்து அலறிக் கொண்டிருந்தது.



சுடர்விட்டுப் பிரகாசிக்கும் கற்பூர வாசனை அந்த அறையை நிறைத் திருந்தது. மேலிருந்து கீழ் நோக்கிக் கற்பூரம் ஏற்றி இறக்கப்பட்டதும் கச்சிதமாய் பஞ்சவர்ணத்தின் தலையில் ஏறி அமர்ந்து ஒருவிதமான இறுமாப்பில் திளைத் தது கரகம். தவில் ஒரு புறமும் நாதஸ்வரம் இன்னொரு புறமும் திருவிழாச் சூழலை மேலும் கலைகட்டச் செய்தது. அப்பொழுதுதான் முழு அலங்காரத்

தோடு பொட்டலில் இறங்கி ஆட்டத்தைத் தொடங்கினாள் பஞ்சா.

அனல் தெறிக்கும் விசில்கள் காதுகளைப் பதம்பார்க்க, பேண்டு வாத்தியங்களின் அசைவுகளுக்கு இசைந்து அவள் காட்டிய நளினங்கள் எல்லோரையும் மோனத்தில் ஆழ்த்தியது. அதுவரையும் கோயில் சூழலில் இருந்த சலசலப்புகள் தீர்ந்தன அப்போது ஒருவிதமான அமைதிச் சூழல் ஏற்பட்டிருந்தது.

கலை நுகர்வில் எம் சனங்களுக்கு இருந்த ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் அங்கு நிலவிய அமைதி, படம் பிடித்துக் காட்டியது.

இப்போது தேர் பணிய லயத்தை அண்மித்திருந்தது. வழமையாகவே பணிய லயத்து பூசைகள் கொஞ்சம் விமர்சையாகத்தான் இருக்கும்.

பணிய லயத்துச் சனங்கள் ஆட்டம், கூத்து கொண்டாட்டங்களில் எல்லாம் தீவிரம் காட்டுவது போலவே, திருவிழாவில் கலவரத்தை ஏற்படுத்துவதிலும் அவர்களின் பங்கு கணிசமானதாக இருக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் நேரத்தை உள்வாங்கி நின்று பிடித்துக் கூத்தாட வேண்டும். இல்லையென்றால் அதைக் காரணம் காட்டியே திருவிழாவில் கலகத்தை ஏற்படுத்துவதற்கும் அங்கொரு கூட்டமிருந்தது.

இளவட்டங்களின் மிடுக்கும் திமிரும் கலந்த கூக்குரல் ஆங்காங்கே எழுந்து மறைந்தாலும் எதையுமே பொருட்படுத்தாமல் ஆட்டத்தைத் தொடர்ந்தாள் பஞ்சவர்ணம்.

கிண்டலும் கேலியும் கலந்த ஏளனப் பேச்சுகளுக்கு எல்லாம் இசைவாக்கம் அடைந்துவிட்டன பஞ்சாவின் செவிகள். அங்கு உதிரும் பச்சை வார்த்தைகளைத் தணிக்கை செய்தபடியே ஆட்டத்தைத் தொடர்ந்தன கால்கள்.

வார்த்தைகள் வரம்பு மீறி எறியப்பட்டன. ஒவ்வொன்றும் இதயம் தைத்து உள் இறங்கினாலும் நாய் வேஷம் போட்டால் குரைத்தாக வேண்டும் என்ற பிடிமானத்தில் ஓய்வின்றி ஆடித் தொலைத்தன கால்கள்.

கொழும்பு இரத்தம் உள்ளிறங்கிய கொழுப்புகள்தான் இப்படி வார்த்தைகளாய் படம் எடுத்து ஆடுகின்றன என்ற உண்மை புரிந்து இலேசாய் பஞ்சாவின் இதழ்கள் புன்னகை அரும்பின. அது மேலும் அவளின் மோகனத்திற்குக்

கிரீடம் வைத்தாற்போல் அமைந்தது.

கலையின் மீதிருந்த பற்றுதல், தொடரும் இத்தொல்லைகளால் கொஞ்சம் கொஞ்சமாய் அவளில் இருந்து அந்நியப்பட்டு வெறுப்பை பதியமிட்டது.

ஆயிரம் கழுகுகள் தன்னைக் கொத்தி மேய்வதற்கு காத்திருப்பதால் அவளுக்கு எழுந்த பிரமையும் அங்கிருந்த நடைமுறையும் பஞ்சவர்ணத்தின் ஆட்டத்தில் இலேசாய் சோர்வு தட்டிப் போவதற்கு வழிவகுத்தது.

நளினங்களுக்காக ஆங்காங்கே செய்யப்பட்டிருந்த ஒப்பனைகள் மனிதக் கழுகுகளின் விரசப் பார்வைகளால் வலிந்து விகாரப்பட்டுப் போயிருப்பதாய் உணர்ந்தாள் அவள்.

உள்ளத்தில் ஆயிரமாயிரம் கேள்விகள், கலையின் அடையாளத்தோடு சில ஈனர்களுக்கு தீனி போடும் பணியில்தான் ஈடுபடுகிறோமா என்ற குற்ற உணர்வு ஆட்டம் தொடங்கிய போதிருந்த மனத்தெளிவையும் சந்தோஷத்தையும் முழுமையாய் காவு கொண்டிருந்தது.

நள்ளிரவைக் கடந்து பயணித்திருந்தது நேரம். சன நெரிசலும் அங்கெழுந்த கூக்குரல்களும் பேண்ட் வாத்தியக்காரர்களின் உற்சாகமும் மேலிட மீண்டும் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

உண்மையில் கலையென்பது ஆத்மத்தைத் தொடுவதாக அமைய வேண்டும் என்ற கொள்கைப் பிடிமானத்தால் கரகத்ரோடு பல்வேறு சாகசங்களை செய்யத் தொடங்கினாள் பஞ்சா.

அப்போதெல்லாம் ஆடை விலகும் தருணங்களில் கழுகுக் கூட்டங்களின் கண்களில் ஆயிரம் ஒளிக்கீற்றுக்கள் ஆனால் உடல் கூசி நாணப்பட்டுக்கொள்வதற்கு அவள் தயாரில்லை ஏனெனில் அவள்தான் சக்தியின் சொரூபமாயிற்றே.

ஒவ்வொரு வருடத் திருவிழாவும் ஒரு புது அனுபவத்தைப் பெற்றுத் தரும். ஆனால், இம்முறை அதிகமான வலிகளைத்தான் தந்துவிட்டிருந்தது.

இப்போது தேர் தோட்ட நிர்வாகிகளின் இருப்பிடங்களை நோக்கி நகர்கிறது.

அவசர அவசாரமாக ஓடிவந்த கோயில் கமிட்டித் தலைவர் மிக நெருக்கமாய் நின்று பஞ்சாவின் காதுகளில் “இனித்தான் புள்ள ஆட்டத்தப்

போட்டு அசத்தனும். ஐயாமாருகள ஆடி அசத்திப்புட்டா இனி வருசா வருசம் ஒனக்குத்தான் ஓடறு" என்று சாராய நெடி கிளம்பும் வாயை அகல விரித்துச் சொல்லிய ஏவல், அவளுக்கு நகைப்பாய் இருந்தது.

பனி இறங்கி குளிர்ந்த மேனியைச் சூடாய் உள் இறங்கிய கோப்பி கொஞ்சம் ஆசுவாசப்படுத்தியது. வழமைக்கு மாறாக கரகம் தன் திருப்தியை இழந்திருப்பதாய் பஞ்சாவுக்குள் ஒரு மெல்லிய உணர்வு, இலேசாய்ப் பயம் தட்டிப் போனது. மீண்டும் ஆட்டம் தொடங்கப்பட்டது. வழமையாகவே ஐயாமார் வீடுகளில் "அம்மா" பூசை எடுக்கும் போது பேண்ட் வாத்தியமும் தப்படியும் தூக்கலாய்த் தான் இருக்கும். பஞ்சாவும் இசைக்கு இசையும் நளினம் காட்டி எல்லோரையும் பரவசத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தாள்.

அங்கேயும் விரியும் கழுகுப் பார்வைகளின் நிலை கண்டு நொந்து மனசு வருத்தத்தில் உறைந்துபோனது. தலையில் கரகம் ஏறிவிட்டால் ஆட்டம் முடியும்வரை மிடுக்குடன் இருக்கும் நம்பிக்கை இன்று தளர்ந்திருந்தது.

கூர்ப்படையாத குழுமங்களின் பார்வைகளில் இருந்து மாறுபட்டு, ஆத்மார்த்தமாய்க் கரகாட்டம் உள்ளெடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பை அங்கிருந்த தோட்ட நிர்வாகிகளின் விரசப் பார்வைகள் வீணடித்திருந்தன. இவை எல்லாவற்றையும் கரகத்தின் உச்சியில் ஒய்யாரமாய் உட்கார்ந்திருந்த பச்சைக்கிளி உள்வாங்கி புழுங்கிக்கொண்டிருந்தது. திடீரென யாருமே எதிர்பாராத நேரத்தில் மின்சாரம் காலை வாரியது.

இதுவரையும் கலைகட்டியிருந்த திருவிழா ஒருவிதமான பரபரப்பில் உறைந்தது. அப்போதுதான் கம்பளிப் பூச்சிக் கணக்காய் உடலை மேயும் சில வலிய கரங்களின் அத்து மீறல்கள் அவளை அதிர்ச்சியில் ஆழ்த்தின. ஒருகணம் ஆடிப்போனாலும் சுகாகரித்துக்கொண்டு அத்தருணத்தைத் தவிர்க்க முயன்றாலும் காம வெறியூட்டப்பட்ட கரங்கள் எல்லை மீறிப் பயணித்தன.

தருணம் புரியாமல் கழுத்தறுப்புச் செய்த மின்சாரத்தை நொந்துகொள் வதைத் தவிர பஞ்சாவால் அத்தருணம் வேறு எந்த தீர்மானத்திற்கும் வர முடியவில்லை.

மிக நெருக்கமாய் மூச்சு முட்டும்வரை அவளைச் சூழ்ந்திருக்கும் நாலைந்து தலைகளும் இருள் அடர்ந்த அக்கணமும் அவளைப் பீதியில் ஆழ்த்தி இருந்தன.

ஆங்காங்கே எழுந்து அடங்கிய சலசலப்புகளை மேவி ஒலித்தது. பஞ்சாவின் அவலக்குரல் முடியுமான பலம்கொண்டு கத்தி ஆர்ப்பரித்தவாறு இருளைக் கிழித்து பித்துப்பிடித்தாற்போல ஓடத் தொடங்கினாள் அவள். மின்சாரம் மீண்டும் ஒளி படர்த்தியது. இருளின் பின்னரான ஒளி அங்கொரு இறுக்கத்தைப் படர்த்தி இருந்தது.

பக்தர்கள் குழப்பத்தில் உறைந்தனர். அலங்கோலப்பட்டு சிதறிக்கிடக்கிறது "சக்தி கரகம்" அலங்காரம் கலைந்து ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் கரகத்தின் எச்சசொச்சங்களில் இருந்து பஞ்சவர்ணக்கிளி மட்டும் தவறி இருந்தது.

ஒளியூட்டப்பட்ட தேரில் ஒய்யாரமாய் ஊர் சுற்றி வரும் அம்மன் மட்டும், தன் ஒப்பனை கலையாமல் உட்கார்ந்திருக்கின்றாள், **பராசக்தியின் சக்தியைப் பக்தர்களுக்குக் காவுகொடுத்த இறுமாப்பில்...**

(ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை 100ஆவது இதழ் )

02

# கோடாங்கி

## *Check Mate*

வியர்வைமுட்டி உடல் படபடப்பில் உறைந்தது கண்கள் இருண்டு உடல் முழுவதும் சோர்வுபடார்ந்தது.

நாசியை தளர்த்தி பசிய காற்றை உள்ளீர்க்க ப்ரியம் கொண்டது மனசு.

காற்றை கிழித்து அண்டவெளி எங்கும் ஓடிக் களைத்து ஆசுவாசப்பட்டால் மனசு கொஞ்சம் தெளிவடையலாம் என்றிருந்தது.

மனித சகவாசமற்ற தனிமையில் புழுக்கங்களைக் கொட்டிவிடத் துடிக்கும் என் எண்ணங்களுக்கு கடிவாளமிடும் பூசாரியின் மஞ்சள் “பை“ மீதிருக்கும் கோபத்திற்கு அளவே இல்லை.

எப்பொழுதுமே விஸ்கு பூசாரியின் தோளில் கிடக்கும் மஞ்சள் பையினுள் என்னையும் என் உணர்வுகளையும் பலமுறை தொலைத்திருக்கிறேன்.

உள்ளுக்குள் அறையப்பட்டிருக்கும் உணர்வுப் போராட்டங்களை, மஞ்சள் பையினுள் நீக்கமறக் கலந்திருக்கும் எண்ணெய் வாடை இன்னும் வழுப்படுத்தியது.

எண்ணெய் களிப்பு தொடங்கி முத்துக்கல் வரைக்கும் மட்டுமல்ல சாராயப் போத்தலுக்கும் அடைக்கலம் கொடுப்பது அந்த “மஞ்சள் பை“ தான். அதனால் தான் அப்பை எப்பொழுதுமே பூசாரியின் தோளைவிட்டு இறங்குவதில்லை.

பொய்யின் பரந்த வெளியில் நின்று ஊரை ஏய்த்துப் பிழைக்கும் பூசாரியின்

பித்தலாட்டங்களுக்குத் துணை போவதும், பறைந்து என் சமூக பச்சை மண்ணை வெறி கொள்ளச் செய்வதுமாய் ஈனப்பிறப்பை எடுத்து விட்டோமோ என்ற குற்ற உணர்வு விஸ்கு பூசாரியின் அப்பாவின் கைகளில் தவழ்ந்த காலங்களில் உணரப்படவில்லை.

ஆனால் அப்போதெல்லாம் உள்ளுக்குள் ஏற்பட்டிருக்கும் மன உழைச்சல் களை வார்த்தைகளில் சொல்லத் தெரியவில்லை. இறுமாப்பாய் என்னை கையில் ஏந்திப் பறை அறைந்து குறி சொல்லும்போதெல்லாம் பூசாரியின் கண்கள் ஒரு விதமாய் வெறியேறி இருக்கும்.

ஏதோ கடவுள் தன்னுள் அழுங்காமல் அப்படியே வந்திறங்கிவிட்டதுபோல அவர் காட்டும் சமிக்ஞை கண்டு பலமுறை அதிர்ந்திருக்கிறேன்.

என்னை சரியாக இயக்கும் வித்தை தெரிந்ததாலோ என்னவோ பூசாரியில் கரம்பட்டால் நானும் பொங்கி எழுந்திடுவேன்.

ஆவேசமாய் என்னை அடித்து பறையும் போதெல்லாம் பூசாரி புது ரத்தம் பாய்ச்சிய தெம்பைப் பெறுவார்.

என்னில் இருந்து எழும் ஓசையின் வீரியத்தால் சுற்றம் வீறு கொள்ளும் என்ற அடிப்படைக் கனவை சிதைத்து அதில் மண்ணிட்டிருக்கும் பூசாரியின் மீதான வெறுப்பு நாளுக்கு நாள் வலுத்தது.

"மகுடிக்கு மயங்கும் பாம்பாக பூசாரி கையில் முத்துக்கல்லும் கோடங்கியும் இருக்கும்வரை மக்களின் நிலை பரிதாபகரமானதுதான்"

வெயில் மங்கிய மாலை

மந்தி தோட்டத்தில் அடித்து பறைந்து பொய் புரட்டினை எடுத்துவிடத் தொடங்கினார் பூசாரி.

டுன் டுன் டுன் . . .

டுன் டுன் டுன் . . .


"ஆத்தா மகமாயி

ஆயிரங்கண் ஒடையவளே

படி எறங்கி வா தாயி வா"

டுன் டுன் டுன் . . .

டுன் டுன் டுன் . . .



கண்களை இறுக மூடிக் கொண்டபடி என்னுள் விழும் ஒவ்வொரு அடியும் பேரிடியாக விழுந்தது.

முறுக்கேறிய விரல்களைச் சுழற்றி சுழற்றி அடித்து பறையும் பூசாரியினுள் அழுங்காமல் அப்படியே ஆத்தா வந்து இறங்கிவிட்டாள்.

உடலை ஒருவிதமாய் சிலுப்பி ஆசுவாசப்படுத்திக்கொள்ளும் விஸ்கு பூசாரி பெரும் மூச்சொன்றை வெளித்தள்ளி குறி சொல்லத் தொடங்கியபோது நானும் என்னை ஆசுவாசப்படுத்திக்கொண் டேன்.

"நாலடி தூரத்தில் நாலு மணி நேரத்தில் நாண்டுகிட்ட மாஞ்ச அரசன் தான் பச்ச மண்ணு மேல பாசமழ பொழிஞ்சிருக்கான்

ச்சு . . . ச்சு . . . ச்சு . . ."

டுன் டுன் டுன் . . . .

டுன் டுன் டுன்...

"அந்தி சாயிறப்ப ஆத்தோரம்மா போவதானா கேகாத அடங்காப்பிடாரிக்கு பட்டாத்தான் புத்தி வரும்"

வெளங்குதா தாயி!

"இப்ப நா அடிச்சி வெறட்டி புட்டேன் இனிமேல அண்டாம நீ தா பாத்துக்கணும்"

டுன் டுன் டுன்...

டுன் டுன் டுன்... என தேசிக்காயை கடித்து நசுக்கி தலையில் தேய்த்துவிட்டு மலை ஏறிக்கொண்டது சாமி.

மீண்டும் அதே புழுக்கத்தோடு பையினுள் சாராயம் அடங்கலாகப் பத்திரப்படுத்தப்பட்டு போனேன் நான்.

நிலவு வெறித்த இரவொன்று யாருமற்று நீண்டு விரியும் மந்தி தோட்ட மயானப் பாதையில் தள்ளாடியபடி கண்ணதாசனின் பழைய பாடலொன்றை முணுமுணுத்தபடி பயணிக்கும் பூசாரியின் நடை சற்று தளர்வுற்றிருந்தது

அடிக்கடி தன் இருப்பை நிச்சயப்படுத்திக் கொள்ளும் விஸ்கு பூசாரி தள்ளாடியபடியே மரங்கள் அடர்ந்த சுடுகாட்டை அண்மித்தார்.

அநேகமான இரவுகளை பேய்களின் நடமாட்டத்திற்கு உரிய இடமாகக் கொள்ளப்படும் சுடுகாட்டில் கழித்திருந்தாலும் விஸ்கு பூசாரியினுள் இலேசாய் பயம் சரிந்திருந்தது.

காலை விந்தி விந்தி பூசாரி நடக்கும் அரவம் காற்றை நிறைத்தது.

அறுந்து தொய்யும் நிலையில் இருந்தும் இதுவரை காலம் கால்களுக்குள் அல்லாடிய பாட்டா செருப்பு அப்போது அறுந்து சிரித்தது.

அடையாளப்படுத்த முடியாத பிராணிகளின் ஒலி எழுப்புகை இலேசாய் பூசாரியினுள் பயத்தைப் படாத்தி இருக்க வேண்டும்.

பையினுள் சலசலத்துக் கிடந்த முத்துக்கல்லை வாரிச் சுருட்டி நெற்றிக்கு நேரே தூக்கிப் பிடித்து கண்களை இறுக மூடி எதையோ வாய் முணுமுணுத்து அடங்கிற்று.

ஊமை கொட்டான்களின் தொனி சுடுகாட்டின் இறுக்கத்தை இன்னும் இன்னும் வலுப்படுத்தியது. பூசாரியினுள் பரவிய படபடப்பு தணியவே இல்லை.

வியர்வை முட்டி உடல் தெப்பமானது. நா வரண்டு உதடுகள் காய்ந்தன. குரல்கள் அசந்து போயிருந்தன. உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் ஒய்வு தேவையாகப்பட்டது.

கால் விரல்களுக்கிடையே ஏதோ பிசுபிசுத்தது நடையைத் தளர்த்தியது. அருகில் கிடந்த பாறையில் அமர்ந்து பையினுள் பத்திரப்படுத்தியிருந்த சாராயப் போத்தலை எடுக்க முனைந்தபோது எதிர்பாராதவிதமாய் பாறை நழுவிச் சரிய மலைபோல் சரிந்தார் பூசாரி.

“கின்“ என்ற ஒலியுடன் பாறையில் விழுந்த போத்தல் உடைந்து கொட்டிற்று. ஆங்காங்கே விழுந்த சிராய்வுகளை துடைத்தபடி தூசனை வார்த்தைகளை அள்ளி வீசினார் பூசாரி.

அதுவரை தோளில் பத்திரப்பட்டிருந்த “பை“ அறுந்து நிலத்தில் கிடந்தது. முத்துக் கற்கள் எட்டுத்திக்கும் சிதறிக் கிடந்தன. எல்லாவற்றையும் ஒன்றி ணைக்க முயன்ற பூசாரியை யாரோ பலமாய்த் தள்ளிவிட்டது போல மீண்டும் குப்புற விழுந்தார். திடுமென அவரால் எழ முடியவில்லை.

அப்போது வானம் நிலவை தொலைத்திருந்தது.

பரந்த வெளியில் நாசியை தளர்த்திக் காற்றை உள்வாங்கி இன்புற்றிருந்த என்னைத் தேடித் துலாவின பூசாரியின் வலிய கரங்கள்...

இதோ என்னை நோக்கிய அவ்வலிய கரங்கள்... மீண்டும் அதே மஞ்சள் பை மூக்கை அரிக்கும் எண்ணெய் வாடை... பொய் புரட்டு...

“ஊரை ஏய்த்துப் பிழைக்கும் ஈனப் பிறப்பு” என்று மனசு ஊசலாடியது.

அப்போது அதுவரை உள்வாங்கிய பசிய காற்றும் வெப்பத்தை இறைத்தது.

அதுவரை என்னைத் தாங்கிப் பிடித்திருந்த பருக்கைகல் தன் பலமிழந்து கைவிடவே பள்ளத்தின் வழியே தடையின்றி ஓடி பூசாரியின் பார்வையில் இருந்து தூரமானேன்.

ஆங்காங்கே விழுந்த சிராய்புகள் தந்த வலியைவிட பூசாரியிடம் இருந்து அந்நியப்பட்ட சந்தோஷம் மேலோங்கி இருந்தது.

அதுவரை மேகத்திரையில் மறைந்திருந்த நிலவு மீண்டும் ஒளிபடரத் தியது.

கால்களை நீட்டி மல்லாந்து கிடந்த பூசாரியிடம் இருந்து பலமாய் வெளிக்கிளம்பியது குறட்டை, காற்றை நிறைக்கும் குறட்டை ஒலியைத் தவிர

எங்கும் நிசப்தம் அடர்ந்திருந்தது.

என் மனப் புழுக்கங்களைக் கொட்டிவிடுவதற்கான சரியான நேரமாக அத்தருணத்தைக் கருதினேன்.

டுன் டுன் டுன் . . .

டுன் டுன் டுன் . . .

“ஊரை ஏமாத்தி திங்கிற ஊம கொட்டானே!

இனி மேல ஒ ஆட்டம் பலிக்காது

இது வரைக்கு நீ நொட்டி புடுங்கி தின்ன

மாதிரி இனி மேல திங்க ஏலாது

நாலு பேரு வயித்தில அடிச்சி நக்கி திங்கிறதும்

ஒரு பொழப்பா!”

“நாலடி தூரத்தில நாலுமணி நேரத்துல

நாண்டு மாஞ்சவங்க மட்டுமில்ல

ஒன்ன மாதிரி குள்ள நரிகளும் நாண்டுக் கிட்டுத்தான்
சாகணும்”

டுன் டுன் டுன் . . .
டுன் டுன் டுன் . . .

“வெரல சுருட்டி சுருட்டி அடிச்சியே எனக்கு எவ்வளவு வலிச்சது தெரியுமா? ம்... ஒனக்குத் தா அடுத்தவங்களோட வலிய பத்தி எந்தக் கவலையு மில்லையே! ஒன்னு மட்டும் நல்லா நெனவுல வச்சிக்க இப்புடி ஊரை ஏமாத்தித் தின்னவங்க எல்லா கடைசியில கட்டிக்க கோமணம் கூட இல்லாமதான் போனாங்க. எனக்கும் மனசு இருக்கு அதுக்குள்ளேயும் சில வலி இருக்கு”

“முன்ன எல்லாம் சீவி சிங்காரிச்சு என்ன அழகுபடுத்தி பாப்பியே அப்ப எலாம் ஒன்ன நெனச்சா பெருமையா இருக்கும். இப்ப மட்டும் நீ பணத்துக்காக அலையிறதும், பொய்யச் சொல்லி ஊர ஏமாத்துறதையும் தான் என்னால பொறுத்துக்கவே முடியல.”

“பச்ச புள்ளைகளோட கனவுல நீ போடுற மண்ணு ஒ வாயில விழுகிறதுக்கு ரொம்ப நேரம் போகாது. ஒன்னோட ஈனப் பொழப்புக்கு இத்தன நாளும் ஒத்தூதி இருந்த நெனச்சாலே என்னோட ஈரக் கொல எல்லா வெட வெடக்கிது”

“ஆனானப்பட்ட பேய்களை கூட நீ அடிச்சி வெரட்டிப்புடலாம். என்னப் பொறுத்தவரைக்கும் மொத மொத வெரட்ட வேண்டிய பேய் நீ தான். ஒனக்கு சாவு மணி அடிக்கிற நாள் நெருங்கிடிச்சு”

டுன் டுன் டுன்...

டுன் டுன் டுன்...

டேய் பொய் பூசாரி!

இந்தா என்னோட கோவம்

ஒன்னோட கழுத்த நெரிக்கட்டும்.

இந்தா என்னோட ஆத்திரம் ஒன்னோட தலயக் கிள்ளட்டும்.

டுன் டுன் டுன்...

டுன் டுன் டுன்... யென என்னுள் இருந்து எழுந்த ஒலி சுடுகாட்டுச் சூழலை அதிர்வுக்குள்ளாக்கியது.

திடுமென தூக்கத்தில் இருந்து விழித்த பூசாரி பயம் முட்டி வார்த்தைகள் வர மறுத்த நிலையில் ஓவென அலறியபடி ஓடத் தொடங்கினார். இரத்த வாந்தியுடன் ஓடும் பூசாரியின் அவலத் தொனி சில நிமிடங்களில் அடங்கலாயிற்று.

அதுவரைக்கும் ருத்ர தாண்டவமாய் பறைந்த கோடாங்கி “படார்“ என்ற சத்தத்துடன் சப்தித்தது அடங்கிற்று.

**விடியல் “மந்தி தோட்டத்தை“ ஒரு விதமாய் அழகுபடுத்தி யிருந்தது.**

(2008.09.19 தினகரன்)

03

# கூட்டாஞ்சோறு

## *Voice of village*

மார்கழி பிறந்துவிட்டால் லயம் ஒருவிதமாய் சந்தோஷத்தில் தொலையும்.

பாடசாலை விடுமுறை, பஜனை, பட்டசீசன் என்று லயம் கலகலப்பாகி விடும்.

"ஆயிபுள்ள இன்னும் அந்த சுருட்டப் பயல காணாமே

"அவன நம்புனா இப்படித்தான்"

"சொன்னா சொன்ன நேரத்துக்கு வரமாட்டான்"

"அவன் வந்தாதானே அரிசி வரும்"

"சுருட்ட வீட்டுல மட்டுந்தான் மூட்டக் கணக்குல அரிசு வாங்கு வாங்க"

"எங்க போயி தொலைஞ்சானோ தெரியலயே!" என்று ஆதங்கத் தைக் கொட்டினான் ஒத்தக் கொட்ட,

உப்புப் புளி, கொச்சிக்கா, வெள்ளப்பூடு எல்லா வெள்ளப்புள்ள கொண்டு வரும்"

"நானும் நேத்தே சவுசோக்கா வேறபுடுங்கி வெச்சிட்டேன்."

"இப்ப சுருட்டப் பயலும் வெள்ளப்புள்ளயும் வந்துட்டா போயிறலாம்" என்று

பரபரப்பில் உறைந்தாள் ஆயிபுள்ள. வழமையாகவே பாடசாலை நாட்களில் கூட்டாஞ்சோறு ஆக்கித் தின்பதுண்டு.

ஒவ்வொரு முறையும் வீட்டுக்கு பம்மாத்துக் காட்டிவிடும் இந்தக் குஞ்சிக் கொலவான்கள் கூட்டாஞ்சோறு ஆக்கும் போதெல்லாம் சந்தோசத்தின் சிகரம் தொடுவர்.

ஆனால் ஒவ்வொரு முறையும் கூட்டாஞ்சோறு ஆக்குவதற்குச் சுருட்டை அருள் பாலிக்க வேண்டும். வட்டிப்பணம், லயத்துக்கடை, சாராய விற்பனை, ஆடு, மாடு, கோழி என்று வருவாய் ஈட்டிக் கொள்ளும் குடும்பப் பின்னணியைக் கொண்டவன்தான் சுருட்டை.

அதனால்தானோ என்னவோ, ஆயிபுள்ள தொடங்கி ஒத்தகொட்ட வரைக்கும் கூட்டாஞ்சோறில் இருந்து இன்டவலில் ஆயா கட புளுட்றோ வரைக்குமாய் சுருட்டையிடம் கையேந்த வேண்டி இருந்தது.

முகம் வெளிறி ஏதோ பயத்தில் உறைந்தாற்போல் அரிசியோடு வந்து சேர்ந்தான் சுருட்டை.

“என்னடா என்னமோ பேயடிச்ச மாதிரி இருக்க, எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வந்தியா இல்லியா? எங்க வரமாட்டியோனு நெனச்சோம் என்று ஒவ்வொருவரும் தன் ஆதங்கத்தைக் கொட்ட


“அட நீ வேறடா..”

“வீட்டுல இருந்து இந்த ரெண்டு சிண்டு அரிசிய எடுக்க நான்பட்ட பாடு எனக்கு இல்லே தெரியும். குட்டி போட்ட பூனமாதிரி எங்கப்பா வீட்ட சுத்திக்கிட்டு இல்ல இருக்கிறது”.

“சரி சரி அந்த சிலு சிலு பேக்கப்புடி, எல்லாத்தையும் அதுல போட்டுக்கிட்டு போவம்” என்றான் ஒத்தக்கொட்ட அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிறுக சிறுக சேமித்து ஆக்கித் தின்பதில் ஒரு ஆத்ம திருப்தி இவர்களுக்கு அதனால்தான் விடுமுறை நாட்களில் கூட்டாஞ்சோறு தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. கேட் ரோட் சந்தியைத் தாண்டி அடர்ந்திருக்கும் கருப்பந்தேயிலைத் தோப்பின் நடுவில் உள்ள ஒத்தப் பீலி சூழல்தான் எப்போதுமே கூட்டாஞ்சோறு ஆக்குவதற்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்படும்.

தோட்ட வேலை நாட்களில் ஆள் அரவமற்றுக்கிடக்கும் தோப்பு கூட்டாஞ் சோறு ஆக்குவதற்குச் சௌகரியப்படுவதால் வழமை போலவே தோப்பை வந்தடைந்தனர்.

"டேய் ஒத்தக் கொட்ட, வா அந்தப் பக்கம் போயி மௌாறு கொண்டு வருவம். ஆயிபுள்ள அடுப்ப போட்டு ஒலைக்கு தண்ணியப் புடி மச மசனு நிக்காத புள்ள அந்த சவுசோக்காவ வெட்டு" என்று அதே அதிகார தோரணையோடு விறகு தேடச் சென்றான் சுருட்டை.



எப்போதுமே சுடுநீரை காலில் கொட்டிய பீதியோடு அவசரப்படும் அவன் ஆக்கப் பொறுப்பது போல ஆறப் பொறுப்பதில்லை.

இப்படித்தான் போன தடவையும்

"போடா போடா அலஞ்சான்

நீயே எல்லாத்தையும் கொட்டிக்கிட்டா, நாங்க என்னா மயிரையா திங்கிறது" என்று ஒத்தக்கொட்ட எழுப்பிய உரிமைக் குரலை மேவி ஒலித்தது சுருட்டையின் ஆதங்கம்.

"இங்க பாருடா நான்தான் அரிசி கொண்டாந்தே, எனக்குத்தான் சோறு நெறைய வேணும், இல்லன்னா எல்லாத்தையும் அள்ளி ஆத்துல போட்டுப்புடு வேன்" என்று அதிகாரம் காட்டி வயிறு முட்டும் வரை சாப்பிட்டுவிட்டு மிச்சத்தை ஏதோ புண்ணியத்திற்கு வழங்கினாற் போல வழங்கிவிட்டு பின்னர் சமரச மாகிப் போனான் சுருட்டை.

"டேய் ஒத்த அந்தப்பக்கம் கொஞ்சம் வெறகு வையிடா"

"இப்பத்தான் ஒல கொதிக்குது. இங்கபாரு ஆயிபுள்ள சவுசோக்கா வெட்டுற லெச்சணத்த"

"நீ வாங்கி நறுக்குடா" என்றதும் ஒவ்வொருவரும் தங்களின் பணியில் பம்பரமாய் சுழலத் தொடங்கினர்.

ஏதோ தன் ஆதங்கத்தை சொல்லத் துடிப்பதுபோல அடிக்கடி வெளியே வந்து விழும் ஒத்தக் கொட்டையின் மூக்குச்சளியைக் காரணங் காட்டியே சமையல் வேலைகளில் இருந்து தள்ளி வைக்கப்பட்டு எடுபிடியாகவே அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டிருந்தான்.

"ஏய் ஆயிபுள்ள அந்தப் பக்கம் கொஞ்சம் வெறகு வை இல்லன்னா சோறு நொசு நொசுனு பூன பீ மாதிரி போயிறும்"

"அப்பொறம் தின்ன மாதிரித்தான்" என்றான் சுருட்டை. "ஆமா ஒனக்கு என்னா வருத்தம் தெரியும் பச்ச வெறக வச்சி ஆக்கிப் பார்த்தாதான் தெரியும்" என்று சலிப்புக் கொட்டினாள் ஆயிபுள்ள.

"ஆமா ஆமா நல்லா சப்புக் கொட்டி திங்கயில ஒனக்கு வலிக்காது இப்பத்தான் பச்ச வெறகப் பத்தி பேசுவ" என்று நீளும் சம்பாஷணையை இடையில் நிறுத்துவதாய், " ஏன்டா சுருட்ட ஒங்கப்பா கண்ணக் கட்டிப்புட்டு வந்துட்டியே மாட்டிக்கிட்டா என்னா பண்ணுவ? அட எவண்டா இவன் கூறுகெட்ட தனமா இருக்கான். அதுக்கெல்லாம் பயந்தா வாழ ஏலாது என்றதும் உலையில் இட்ட அரிசி ஏதோ தன் ஆதங்கத்தைக் கொட்டிவிடத் துடிப்பதுபோல

நாலாபுறமும் பொங்கி வழிந்தது.

மினுமினுப்பாய் ஒருவித அழகில் உறைந்திருந்த பானை இப்போது கரி படிந்து விகாரப்பட்டிருந்தது. மூடியை மேவி எதையோ சொல்லத் துடித்து பானைக்கும் மூடிக்கும் நடக்கும் போராட்டம் ஆயிரம் வாழ்வியல் தத்துவங் களைச் சொல்லிப் போனது. எல்லாவற்றையும் சம அளவில் கலந்து தயாராகிக் கொண்டிருந்த கூட்டாஞ்சோற்றில் அகப்பையை விட்டுக் கிளறி உப்பு சுவைக் கும் ஆயிபுள்ள அடிக்கடி முகம் சுளிப்பதும் பின்னர் உப்பைக் கரைத்துப் பதம் பார்ப்பதுமாய் இருந்தாள்.

உப்புப்புளி காரத்தோடு வெந்து தணிந்ததாலோ என்னவோ சோறு விரிந்து விகாரப்பட்டிருந்தது.

கூட்டாஞ்சோற்றின் வாசனை தோப்பை நிறைந்திருந்தது. மூக்கை ஆக்கிரமிக்கும் வாசனையோடு ஆவி பறக்கும் பானை இறக்கப்படலாயிற்று.

ஒத்தப் பீலி பிரதேசத்தின் வனப்பில் பங்கு கொள்வதில் ஆனபாறைக்கு நிகரில்லை.

வழமையாகவே கூட்டாஞ்சோறு அங்குதான் பறிமாறப்படும்.

“ஆயிபுள்ள அந்த தலவாழ எலய நாலாப் போடு”

“அப்படியே அத பீலியில அலம்பிக்கிட்டு வா”

“போயி மூஞ்சி கைகால் கழுவிவிட்டு வந்து சாப்பிடுவம்” என்றான் சுருட்டை

“ஏண்டா ஒத்த போயி மொதல்ல மூக்க கழுவு எப்பயும் வடிஞ்சு கிட்டதானே இருக்கு” என்றதும் அங்கெழுந்த சிரிப்பொலி தோப்பை சலசலப்புக்கு உட்படுத்தி யது.

ஒத்தக் கொட்டைக்கு இருப்புக் கொள்ளவில்லை. கூட்டாஞ்சோறு மீதிருந்த ஆவலும் எதிர்பார்ப்பும் அவனை ஒருவிதமாய் பரபரப்பில் ஆழ்த்தி இருந்தது. கை கால்களை பாதி நனைத்தும் நனையாமலும் அலம்பினான் ஒத்த.

“சுருக்கா வந்து சோத்த போடு புள்ள, மனுசனுக்கு பசி வயித்த புடுங்குது” என்று ஆயிப்புள்ளய துரிதப்படுத்தினான் சுருட்டை.

ஒத்த பீலியில் ஆவேசமாய் வந்து விழும் காட்டுத் தண்ணி அவர்களுள் புதுவிதமாய் புத்துணர்ச்சியை ஏற்படுத்திப் போனது.

பசி ருசி அறியாது என்பதாலோ என்னவோ கூட்டாஞ்சோறு எப்போதுமே தேவாமிர்தமாக அவர்களை ஆக்கிரமித்து இருந்தது. போலும் இப்போது ஆன பாறையில் பத்திரப்படுத்தியிருக்கும் கூட்டாஞ்சோறை நோக்கி நகர்கின்றன கால்கள்.

எதிர்பார்ப்பை முன்னிறுத்தி கூட்டாஞ்சோறை பரிமாறுவதற்கு பானை மூடியை விலக்கிய ஆயிபுள்ள அரவம் தீண்டிய கணக்காய் பீறிட்டு கத்தினாள். "ஐயோ எந்தப் பாவி பயலோ திங்கிற சோத்துல மண்ணள்ளிப் போட்டுட்டு. போயிட்டானுங்களே. நாசமா போவ அவென் கைகாலு வெளங்காம போவ. எந்த கூறு கெட்ட பய இப்பிடி செஞ்சானோ தெரியலையே" என்று புலம்புவதற்கும் அதுவரை ஆன பாறைக்குப் பின்னால் பதுங்கி இருந்த சுருட்டையின் அப்பா அதே மிடுக்கோடு சீறிப் பாய்ந்ததை கண்ட குஞ்சிக் கொலவான்கள் பதறி ஆர்ப்பரித்தவாறு தலை தெறிக்க நாலாபுறமும் ஓடி மறையவும் சரியாக இருந்தது.

பரிதாபகரமாக மாட்டிக் கொண்டதென்னவோ சுருட்டை மட்டுந்தான். கொத்தாய் தலைமயிரைப் பிடித்து கோபம் தணியும்வரை சுருட்டைக்கு இழைக் கப்பட்ட இம்சைகள் அவனின் அவலத் தொணியில் இருந்து புரிந்துபோனது.

ஆங்காங்கே பத்திரப்படுத்தி இருந்த சட்டி பானைகள் மீதெல்லாம் கோபத்தைக் காட்டிவிட்டு பரபரவென சுருட்டையை இழுத்துச் சென்றார் மருதை.

அங்கேயும் **பசியால் துடிக்கும் பாழ்வயிறு வாழ்க! திங்கிற சோத்துல மண்ணள்ளிப் போடுற மனுசப் புத்தி வாழ்க"!.** என ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கும் சோற்றுப் படுக்கைகள் ஆதங்கப்பட்டுக் கிடந்தன.

(03.08.2008 தினகரன்)

# 04

# நிமிர்வு

## *Blood in Breed*

கொழும்பு டேம் வீதி வழமைக்கு மாறாக சேபை இழந்திருந்தது.

வாகன நெரிசலற்று விரிந்துக் கிடந்தது வீதி.

பலமுறை அவ் வீதியைக் கடந்திருக்கிறேன், அப்போதெல்லாம் கண்ணில் படாத கொடுமை இன்று தெரிய வந்ததை இட்டு மனம் தடுமாறியது.

இருப்பினும் குறித்த வலியில் இருந்து என்னால் இலகுவாய் வெளிவர முடியவில்லை. வெயில் சுட்டெரித்து மண்டையைப் பிளந்தது.

நான் வழமையாகவே கொழும்பு கால நிலையில் தடுமாறிப் போவேன். வியர்வை பிசுபிசுத்து உடல் ஒருவிதமாய் அசதியுற்று இருந்தது. அப்போதுதான் எதிர்பாராத விதமாய் செருப்பு அறுந்து சிரித்தது.

சரியாக டேம் வீதியின் மத்தியில் செருப்பறுந்து நினறபோது அடைந்த அசௌகரியம் கொழும்பு பஸ் நடத்துனர்களிடம் மீதி வாங்குவதற்கு அடையும் அசௌகரியத்தை விடவும் கொடுமையாக இருந்தது.

மீதி வாங்குவதற்கு நடத்துனரிடம் போராடியபோது அவனால் மொழியப் பட்ட வார்த்தைகளில் கலந்திருந்த துவேஷத்தின் நெடி என்னை படபடப்புக்குள் ளாக்கியிருந்தது.

எப்போதுமே சில்லறைகளுடன் பயணிக்கும் நான் அன்று வசமாய் சிக்கிக் கொண்டதால் உள்ளுக்குள் விழுந்த புகைச்சல் உடல் புழுக்கத்தை இன்னும்


வலுப்படுத்தியிருந்தது.

சூழலை அனுசரிக்காமல் அந்நேரம் பார்த்து கழுத்தறுத்தது செருப்பு.

அப்போதுதான் எதிரில் சடைத்து நிற்கும் அரச மரமும் செருப்புத் தைக்கும் இடமும் கண்ணில் பட்டது.

ஒரு கணமேனும் சிந்தியாமல் செருப்புடன் அரச மரத்தின் கீழ் வியாபாரத்துடன் சீவியம் நடத்தும் செருப்புத் தைக்கும் இடத்தை அடைந்தேன்.

புறாக்கள் குழுமி இருக்கும் அம் மரச் சூழல் புறாக்களின் எச்சங்களால் விகாரப்பட்டிருந்தது. அங்கொரு விதமான துர்வாடையும் ஈக்களும் பரவி யிருந்தன.



வலிமையாய் வேரோடி இருக்கும் மரவேர்கள் எட்டுத் திக்கிலும் படர்ந்திருந்தன. வெறுமனே துண்டுப் பலகையால் பொருத்தப்பட்டிருந்த கொட்டகை முழுவதுமாய் பல ரக செருப்புகள் குவிந்துகிடந்தன.

ஆங்காங்கே குவிந்துகிடக்கும் செருப்புக்கள் ஏதேதோ எண்ணப்பாடுகளை முடக்கிவிட்டன.

நொய்ந்துபட்ட செருப்புகள் எல்லாம் வைத்தியத்திற்காக தவமிருப்பதாய்

தோன்றியது.

மோட்சப் பயணத்தில் இணையத் துடிக்கும் செருப்புகள் உலகின் புதிய அனுபவங்களைத் தந்தது.

செருப்புகளுக்கிடையில் ஒரு பிஞ்சுள்ளம் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந் தது. உடல் முழுவதும் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன.

“மாத்தியா பொட்டக் இன்ட”

“தவ டிக்கிங் வெடே இவரு கரலா தென்னாம்” என்று வேலையில் மும்முரம் காட்டினாள் அந்தப் பெண். பிழைப்பு நடத்தும் வீதிதான் ஜீவியத்திற் குரிய இடமாகவும் பயன்படுத்தப்படுகிறது என்பதை அங்கு நின்ற சில நொடி களில் அறிந்துகொண்டேன்.

மலையென குவிந்திருக்கும் செருப்புகளுக்கிடையில் சீவியம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. முண்டியடித்துக்கொண்டு திரும்பி படுத்த பிஞ்சுள்ளத்தின் காலிடுக்கில் சுருண்டு கிடக்கும் இன்னொரு மழலையின் கருத்த உடலையும் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன.

என்ன சீவியமடா இது என்று அடிக்கடி அலுத்துக்கொள்ளும் மனசு இன்று ஜீவியத்தின் மீதான முழுமையான நம்பிக்கைகளையும் இழந்திருந்தது.

முகத்தை ஆக்கிரமிக்கும் ஈக்களை துரத்தியபடியே மீண்டும் மீண்டும் நித்திரையில் ஆழ்ந்துபோகும் குழந்தைகளை எண்ணிப் பார்க்க வியப்பாக இருந்தது.

“பரக்குணாத மாத்தியா, அவசட பொட்டாக் வெட கொடாக் தென்ட. டக்கால மஹலா தென்னாம்” என்றதும் அறுந்து தொங்கிய செருப்பை எடுத்து நீட்டுகிறேன். சற்றும் குறைவுபடாத அதே புன்னகையுடன் செருப்பை ஏற்று மடியில் கிடத்தி லாவகமாகத் தைக்கும் அழகு என் எண்ணங்களைக் கசக்கிப் பிழிந்தது.

பஸ் நடத்துனரால் படர்த்தப்பட்ட துவேசம் மெது மெதுவாய் கரையத் தொடங்கியிருந்தது.

“புத்தா நகிட்டின்ட கீலா தே கேன்ட வெலாவ கியா வெட கொடாக் தியனவானே” என குழந்தையை எழுப்பிவிட்டு பணியில் லயிக்கும் பெண்மணியின் உழைப்பின் மீது தனி மரியாதை ஏற்பட்டது.

அந்நேரத்தில் எழுந்து அடம்பிடிக்கத் தொடங்கிய சின்னக் குழந்தையை கரைத்து வைக்கப்பட்டிருந்த புட்டிப்பாலைக் கொடுத்து சமாதானப்படுத்திய விதம் நாகரிகமாய் இருந்தது.

இப்போது உடல் புழுக்கம் தளர்ந்திருந்தது. ஆனால், மனப் புழுக்கமோ எல்லையைக் கடந்திருந்தது.

மனித ஜீவியத்தில் தான் எத்தனை ஏற்றத் தாழ்வுகள் மீண்டும் குழப்பத்தில் உறைகிறது மனசு.

செருப்பினுள் புகுந்து புகுந்து வெளிவரும் ஊசியின் நளினத்தைப் பார்த்துக் கிடந்த கண்கள் வேலையில் காட்டிய கரிசனையையும் அவதானிக்க தவறவில்லை.

ஏதோ கடன்காரனைப் போல மீதியை வாங்குவதற்கு சுற்றி விட்ட நடத்துனர் உலகில் இருந்து இவ்வுலகம் பெரிதும் மாறுபட்டிருந்தது.

ஒரு சோற்றைப் பதம் பார்த்துவிட்டு ஒட்டு மொத்தமாய் ஒரு குழுமத்தின் மீதான சாடலுக்காக மனசு வருந்தியது.

"மாத்தியா கொஹேத துராய்த ஓயா மட்ட தென்ன வெட ஒந்தட்ட கரலா தென்ட ஒனே நெத்தங் அரியென்னே" எனப் பேசியபடியே செருப்பை தைத்துக் கொண்டிருந்தார். நானும் சுதாகரித்துக் கொண்டு ஒப்புக்கு தலையசைத்தபடி நிற்கிறேன்.

எனக்குள் கவிழ்ந்திருக்கும் குழப்பங்களை அவள் அறிந்திருக்க வாய்ப்பில்லைத்தானே.

அற்பமான விடயங்களுக்கெல்லாம் அல்லாடித் தொலையும் மனசு முதல் தடவையாய் வெட்கித் தலை குனிந்தது.

தன் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளப் பிரயத்தனப்படும் மனிதர்களில் இருந்து பெரிதும் வேறுபடும் சூழல்களும் இருக்கத்தான் செய்கின்றன என்பதை அன்றறிந்தேன்.

நொய்ந்த செருப்பு நூலினால் உரமூட்டப்பட்டு மிக நேர்த்தியாகத் தைக்கப்பட்டிருந்தது.

உரமேறிய கைகள் செருப்பில் படிந்திருந்த புழுதிகளைச் சுத்தப் படுத்திக்

கொண்டிருந்தன. வாய் மட்டும் “டிக்கக் பரக்வெலா மட்ட சமாவென்ன மாத்தியா” என மீண்டும் மீண்டும் மொழிந்து கொண்டிருந்தது.

பஸ் பயணத்தில் ஒரு ரூபாயைக் கூட விட்டுத் தராத மனசு இங்கு பேரம் பேசுவதற்கு ஒப்பவில்லை.

நூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்து நீட்டினேன்.

“மட்ட தியாக் தென்னோத் ஹரி மாத்தியோ மாறு நேத” என வினவியவாறே தட்டுத் தடுமாறி எழுந்த போதுதான் அறிந்தேன்.

அவள் இரண்டு கால்களையும் இழந்திருக்கிறாள் என்பதை அக் கணம் உண்மையாகவே அதிர்ச்சியில் ஆழ்ந்தேன். விக்கித்து வாயடைந்து மறுபேச்சின்றி செருப்பை மாட்டிக்கொண்டு அங்கிருந்து நகர்கிறேன்.

எல்லோருடைய செருப்பையும் மடி மீது கிடத்தி தைக்கும் ஒரு ஜீவனின் இரு கால்களும் பறிக்கப்பட்ட கொடுமையை யாரிடம் சொல்லி நோவது என்ற குழப்பங்களுடன் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

“மாத்தியா பொட்டக்கின்ன பொட்டக்கின்ன” என யாரோ . பின்னால் அழைப்பது துல்லியமாகக் கேட்டது.

திரும்பிப் பார்க்கிறேன் மூச்சிரைக்க ஓடி வந்து நிற்கும் அதே சிறுவன் “மாமே ஓயாகே இத்துரு கத்தனே மென்ன ஓயாகே இத்துரு சல்லி” என்று நீட்டும் கசங்கிய நோட்டுக்கள் என்னைப் பார்த்து நகைத்தன.

கசங்கிய நோட்டுக்களை கறைபடிந்த அவனின் கைகளுக்குள் திணித்துவிட்டு “இத்துரு ஓயா தியான்ட” என பயணிக்கிறேன். கைகளை சுழற்றியபடி வேகமாய் ஓடி மறைந்தான் சிறுவன்.

நான் இப்போது டேம் வீதியின் அந்தத்தில் நிற்கிறேன்.

மீண்டும் ஒருமுறை வந்த வழியை திரும்பிப் பார்க்கிறேன் அங்கே நன்றிப் பெருக்குடன் தாயும் மகனுமாய் கையசைத்து நிற்கும் காட்சி புள்ளியாய் தோன்றியது.

**தெளிந்த சித்தம் புது பரவசத்தைப் படர்த்தியது.**

**வழமைக்கு மாறாக நடையிலோர் நிமிர்விருந்தது.**

(ஞானம் - 2009)

05

# படர் (தா)மரை

## *Fate in Fast world*

வலது தொடையை சில நாட்களாய் ஒரு விதமான சொறிச்சல் ஆக்கிரமித் திருந்தது. மயிர்கள் அடர்ந்த பருத்த பராக்கிரமமான தொடையாதலால் அடிக்கடி இவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படுவதுண்டு.

சாதாரணமாக நடக்கும் போது கூட தொடைகள் உராய்ந்துபடுவதால் அசௌகரியம் ஏற்படுவதுண்டுதான். ஆனால் அப்போதெல்லாம் ஏற்படும் அசௌகரியத்திலிருந்து இது வித்தியாசமானதாக இருந்தது.

சொறிச்சல் ஒருவிதமான சுகானுபவத்தைத் தந்தபோதும் சொறிச்சலுக்கு பின்னரான ரணம் வலிக்குரியதாய் இருந்தது.

இரவு முழுவதும் சொறிந்தமையால் தொடை சல்லியளவில் சிவந்து கண்ணியிருந்தது.

ஒளி படர்த்தி அவதானித்தபோதுதான் வலது தொடையின் நடு மத்தியில் வெண்ணிறத்தில் ஒரு புள்ளி பரவியிருந்தமை புலப்பட்டது. கடுகளவில் பரவியிருப்பினும் அதன் வீரியம் சற்று அதிகமாகவே இருந்தது.

தொடர்ச்சியான சொறிச்சல் தொடை நடுவில் இலேசாய் கீறலை ஏற்படுத்தி யிருந்ததோடு வீங்கிப் புடைத்தும் இருந்தது. கீறலின் ஊடே இலேசாய் வெண் கசிவும் வழிந்திருந்தது.

பகலெல்லாம் முடங்கிக் கிடக்கும் சொறிச்சல் இரவில் மட்டும் படு அட்ட

காசமாய் களமிறங்கிவிடுவதால் இடைவிடாது சொறிய வேண்டியது அவசிய மாய் பட்டது. தூக்கமும் தொலைவாகி மறைந்திருந்தது.

நாளடைவில் வெண்புள்ளி வலது தொடையில் சல்லியளவில் படரத் தொடங்கியிருந்ததோடு இடது தொடையையும் புள்ளியளவில் ஆக்கிரமித்திருந் தது.

திடுமென உடலில் பரவும் சொறிச்சல்களுக்குக் குருதியில் கிருமிகள் கலப்பதுதான் காரணமென எங்கேயோ கற்ற ஞாபகம் உள் விழுந்து குமைந் தது. தொடர்பற்ற இணைப்புக்களை எல்லாம் பொருத்திப் பார்க்கும் மனசு வெகு வாய் குழப்பத்துக்குள்ளாகியது.

வெறுமனே சொறிச்சலோடு படர்ந்த வெண்புள்ளி இப்போது மருந்து களோடு காலத்தை இணைப்புச் செய்திருந்தது. ஆனால் சொறிச்சல் மட்டும் குறைவதாய் இல்லை. ரகம் ரகமான மாத்திரைகள், களிம்பு என அதிரடியாய் சிகிச்சையில் களமிறங்கியாயிற்று. ஆனால் பயனேதும் கிட்டுவதாயில்லை. மருந்திடுவதற்காக அதிக நேரத்தை செலவிட வேண்டியதாயிற்று.

வெறும் புள்ளியாய் தடம் பதித்த சொறிச்சல் தொடையின் நடு மத்திவரைக்கு மாய் அரைவட்ட வடிவில் படரத் தொடங்கியதுதான் என்னுள் பீதியைப் படர்த்தியது. வெறும் வெண்புள்ளியாய் அடையாளப்படுத்திக் கொண்டு நாளுக்கு நாள் விஸ்வரூபம் எடுப்பதுதான் வியப்பாய் இருந்தது.

வெண்மையும் செம்மஞ்சளும் கலந்து ஒரு விதமான பழுப்பு நிறத்தில் படரத் தொடங்கியிருந்த படர்புள்ளி முழுமையாய் வெண்நீரில் சுத்தப்படுத்தப் பட்டு களிம்பால் மூடப்பட்டிருந்தது. வழமையாகவே களிப்பிடப்பட்டால் ஒருவித மான எரிச்சல் பரவும். அதுமட்டுமல்ல களிப்பிடப்பட்டுவிட்டால் இயல்பான என் நடவடிக்கைகள் கூட ஸ்தம்பிதம் அடைந்துவிடும். மருந்திடுகைக்கு பின்னர் தொடைகள் உராய்ந்துப் படுமானால் ஒரு விதமாய் ஏனைய இடங்களும் நமநமத்துப் போகும்.

இஸ்டப்பட்டபடியெல்லாம் நீட்டி நிமிர்ந்து கால்களை மடித்து படுத்துறங்க முடியா அவஸ்தை என் இயல்பை வெகுவாய் சீர் குலைந்திருந்தது. திட்ட மிடப்பட்ட வகையில் ஒரு சட்டகத்துள் என் இயல்புகள் விழுந்தன. இப்போது வெண்புள்ளி மேல் நோக்கிப் படர ஆரம்பித்திருந்தது.

மறைவுக்குரிய பகுதியாதலால் பிறரோடு கலந்து ஆலோசிக்க முடியா நிலை எனக்கான புழுக்கங்களை இன்னும் வலுவாய் உள் இறுக்கியிருந்தன. நாளுக்கு நாள் என்னுள் வலுக்கும் சந்தேகங்களுக்கு அளவென்பது கிடையாது. மருந்துகள் மட்டும் வெகுவாய் தீர்ந்தன ஆனால், சொறிச்சலும் வெண் கசிவும் நாளுக்கு நாள் அதிகரித்தன.



இப்போது உரோமங்கள் அடர்ந்த மார்ம உறுப்புக்களில் படர்புள்ளி பரவத்தொடங்கியிருந்தமையால் சொறிச்சலோடு ஒருவிதமான துர்வாடையும் எழுந்திருந்தது. ஒருவிதமாய் குமட்டலை ஏற்படுத்தும் துர்நாற்றம் என்னை அதிகமாகவே மனித சகவாசத்தில் இருந்து அந்நியப்படுத்தியிருந்தது. புழுக்கத்தில் விழுந்து வியர்வை அரும்பும்போது அடையும் நிலையை வெறுமனே வார்த்தைகளில் கொண்டு வந்து நிறுத்த முடியவில்லை.

வழமையாய் களிம்பிடப்பட்டுவிட்டால் சாதரணமாய் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் ஸ்தம்பிதம் அடைந்துவிடுகின்றன. உடைத்து வெளிப்படையாய் சொல்ல வேண்டுமானால் சிறுநீர், மல வெளியேறுகை கூட வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுப்படுத்தப்படும்.

சில நாட்களாய் என்னுள் கசியும் நரகம் வெறுப்பின் உச்சம்வரை உயர்ந்து படுத்திற்று. அருவருப்பும் அச்சமும் கலந்து வாழ்வின் மீதான வெறுப்பை மீளவும் கேள்விக்குறியாக்கியது. களிம்பு படும் இடமெல்லாம் இப்போது சொறிச்சல் தன் கைங்கரியத்தைக் காட்டத் தொடங்கியிருந்தது. குறித்த இடங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த சொறிச்சல் நாளுக்கு நாள் தன் ஆதிக்கத்தை விசாலப்படுத்தியிருந்தது. அப்போதுதான் மயிர்கள் அடர்ந்த மர்மப் பகுதிகளில் சின்னச் சிறியளவில் சீழுடன் கூடிய கொப்புளங்கள் பரவத் தொடங்கியது. அதுவே எனக்கான அடுத்த அதிர்ச்சியாக உள்ளிறங்கியது.

வெறுமனே மருந்துகளோடு திரைமறைவில் பகுதிநேர நோயாளியாய் இருந்த நான் முழுமையாய் முழு நேர நோயாளியாவதற்கான தருணம் அது இனியும் மறைத்துப் பயனில்லை என்ற நிர்ப்பந்தத்தோடு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். சொறிச்சல் புண்ணாகி பின் வெண்கசிவாகி இப்போது சீழ் வடியும் நிலைக்கு உள்ளாகியிருந்தது.

இப்போதெல்லாம் சாதாரணமாக உடலில் ஏற்படும் சொறிச்சல் கூட சந்தேகத்துக்குரியதாய் மாறியிருந்தது. பொது இடங்களில் கதையாடும்போது அடையும் அசௌகரியங்கள் அளவற்று மேவியது. வெற்றிகரமாய் நீந்திச் செல்லும் படர்புள்ளி ஆசனவாய்ப் பகுதியையும் ஆக்கிரமித்திருக்க வேண்டும் என்பதை என்னுள் பரவிய ஒரு விதமான நமநமப்பு மீள்நிரப்பியிருந்தது.

எப்போதும் உடல் சோர்வுற்றிருந்தது.

பொலிவாய் உப்பி பளபளப்புடன் இருந்த கன்னங்கள் பொலிவிழந்திருந்தன. சுண்டிப் போயிருக்கும் கன்னச்சதை முகத்தை ஒருவிதமாய் விகாரப் படுத்தியிருந்தது உடல் காட்டும் சமிஞ்சைகள் அவ்வளவாய் என்னை ஆசுவாசப்படுத்தவில்லை.

மருந்திடமுடியா இடங்களில் எல்லாம் படர்புள்ளி படர்ந்தாயிற்று ஊகத்தின் அடிப்படையில் களிம்பிடப்படுவதும் கணக்கற்றளவில் மாத்திரைகளை உள்வாங்குவதும்தான் எனக்கான ஆறுதல்களாய் இருந்தன.

இப்போது மறைவுக்குரிய பகுதிகளில் இருந்து வெளிப்பகுதிக்கும் படர்புள்ளி தன் கைங்கரியத்தைக் காட்டத் தொடங்கியமைக்கான அடையாளமாகக் கைகளில் படரும் புண் அதிகமாய் என்னை அழுத்தியது. பிறரால் பரிகசிக்கப் படும் அளவில் நோயின் தீவிரம் என்னை அழுத்தத்துக்குள்ளாக்கியது.

நாளுக்கு நாள் நோய், பரவும் தன்மை அதிகரித்திருந்தது. ஆனால், ஆறுதல் மட்டும் குறைவதாய் இல்லை. வைத்தியர்கள் தரும் நம்பிக்கைகள் எனக்கான எதிர்பார்ப்புகளை இருப்புக் கொள்ளச் செய்தது. மருந்து மாத்திரை களின் வாசனை தொடங்கி, ஆஸ்பத்திரி நடைமுறைகள் வரை எல்லாம் அத்துப்படியாயிற்று. சக நோயாளிகளிடம் கதையாடும்போது வெளிப்படும் உணர்வலைகள் என்னுள் ஏற்படுத்திய அதிர்வு அதிகமாகவே காணப்பட்டது.

இரு திங்கள் என்னை விட்டு அகலாமல் அழுங்கிப் பிடித்திருக்கும் நோய் என் உருவை வெகுவாய் சீர்குலைத்திருந்தது. மனித சகவாசத்தில் இருந்து புள்ளியாய் அந்நியமாகிப் போகும் என் இருப்பு குறித்த எதிர்பார்ப்புகள் நாளுக்கு நாள் காலாவதியாயின.

இப்போதெல்லாம் என்னை விலக்கி வைத்தியர்கள் இந்நோய் தொடர்பில் அவாவும் போது காட்டும், சமிஞ்சைகள் அவ்வளவாய் திருப்தியளிப்பதில்லை. பரந்த இவ்உலகில் உள் நின்று உயிர் கொள்ளும் அநேகமாக விடயங்கள் இப்படித்தான் புள்ளியாய் நுழைந்து பூதாகாரமாய் மாறிவிடுகின்றதோ என்ற நினைப்பு வேறு அடிக்கடி உள் விழுந்து குமைந்தது.

அன்றொரு பௌர்ணமி நாள் நிலவை வெறித்தவாறே யன்னல் கம்பிகளை வருடியபடி நின்றுகொண்டிருந்தேன். தலை மயிர் முழுமையாய் சிரைக்கப்பட்டு மருந்திடப்பட்டிருந்தது. ஆங்காங்கே சல்லியளவில் படர்ந்திருக்கும் புண் ஒரு விதமான சொறிச்சலோடு எரிச்சலையும் ஏற்படுத்தியது. திடுமென உடலில் பரவிய வியர்வை உடலை சோர்வுக்குள்ளாக்கியது. அப்படியே கட்டிலில் மல்லாந்து கொள்கிறேன், என்னில் இருந்து தொலையும் ஞாபகங்கள் என்னை வேறொரு உலகிற்கு அழைத்துச் செல்வது புலனாகியது.

சுவர்கள் என்னை ஆக்கிரமிக்கும் அக்கணம் என்னுள் பரவிய வலி ஆத்மத்தை அழுத்தியது. முழுமையாய் நரகத்தில் ஆழ்ந்துவிட்ட வலி குமுறலாய் வழிந்தது. ஆரம்பத்தில் புள்ளியாய் உடலில் உள் நுழைந்தபோது உணரப்படாமல் போனதேன் என்று குழம்புகிறேன். உலகில் அநேகமான விடயங்கள் இப்படித்தான் நம்மையறியாமல் நம் குருதியைக் குடித்துக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த தருணம் அது.

நேரம் வெகுவாய் கரைந்துகொண்டிருந்தது.

என்னுள் இருந்து ஏதேதோ அந்நியப்பட்டுப் போவதாய் உணர்ந்தேன்

உடல் அசைக்க முடியாதபடிக்குத் தளர்வுற்றிருந்தது. சாரை சாரையாய் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கியிருந்தது. முடியுமான வரையில் போராடியும் என்னை ஆக்கிரமித்திருந்த ஈக்களை வெல்ல முடியவில்லை. மீண்டும் வந்து மோதும் ஈக்களுக்கு என் உடல் நன்றாகவே தீனியிட்டது. உடல் நோவை மேவிச் சென்றது. என்னுள் பரவிய அதிருப்தி

கண்களில் எப்போதும் படர்ந்திருக்கும் ஒளி குன்றியிருந்தது.

மரணத்தின் வழி திறந்துவிடப்பட்டிருப்பதாய் உணர்ந்தேன். ஒரு புள்ளி பூதாகாரமாய் மாறி உயிர் குடிக்கும் என்பதை உணர்ந்த தருணம் அது இறுக்கமாய் கண்களை மூடிக்கொள்கிறேன். பூக்களைக் கைகளில் ஏந்தியபடி தேவதைகள் வந்துலாவும் ஒருலகம் என்னுள் விரிகிறது. அது சொறிச்சல்கள் அற்ற சுகந்தமான சுகானுபவத்தை தரவல்லதாக இருந்தது.

யாருமற்ற தனிமையில் மெதுமெதுவாகக் கண்கள் சொருகின. என்னுள் இருந்து சீவன் தெளிவாய் மறையத் தொடங்கிற்று. **அது வலிகள் அற்ற மோட்சப் பயணமாகவே அமையும் என்ற நம்பிக்கை மட்டும் நித்தியமாய் ஆன்மத்தில் அடர்ந்திருந்தது.**

(புதினம் சர்வதேச சிறுகதைப் போட்டி)

# 06

# பாப்பா புள்ள

## *Tough Born*

**ப**னியில் ஒடுங்கிய இரவு

மழை விதியை நொந்து ஓலமிடும் மனசாய் சோவென பெய்து கொண்டிருந்தது.

அடிவயிற்றை கௌவிப் பிடித்திருந்த பிஞ்சுக் கரங்கள் இலேசாய் உடலில் சூடு படாத்தியது.

ஆங்காங்கே விலகிக்கிடந்த போர்வைக் கொண்டு உடல் முழுவதையும் மறைக்க முயலும் போராட்டத்தில் கிடந்தாள் பாப்பாபுள்ள.

காலை விந்தி விந்தி அடிவயிற்றில் அராஜகம் பண்ணாமல் கண்ணனுக்கு தூக்கம் என்பது வராது. மார்பைப் பிசைந்து மூச்சு முட்டும்வரை இறுகக் கட்டி தூங்கிப் போவதுதான், வழமை. அதனால் கண்ணனுக்கும் பொண்ணுப் புள்ளைக்கும் இடையில் வலுத்த முரண்பாடுகளுக்கு அளவில்லை.

காற்று புகமுடியாதபடிக்கு இறுக கட்டிக்கிடக்கும் குழந்தைகளை விட்டு தொலைதூரம் போகத்துடிக்கும் இருதலைக் கொள்ளி மனசு...

உள்ளுக்குள் விழுந்திருக்கும் வைராக்கியம், அந்நிய தேசம் நோக்கி அங்கலாய்க்கும் ஆர்வம், என உள்ளுக்குள் விழுந்திருக்கும் உணர்வு போராட்டங்கள் உயிர் வரை ஊடாடித்திரிந்தது.

இன்னும் இன்னும் எதையோ தேடித் தொலையும் கண்ணாவின் கால்கள் உள்ளுக்குள் ஓர் இனம்புரியாத பேரானந்தமாய் பரவியது. ஒப்புக்கு கண்கள் மட்டும் இறுக மூடிக்கிடந்தன.

அதோ பாப்பா புள்ளையின் எதிர்பார்ப்புகளுக்கு யாரோ வண்ணமடிக் கிறார்கள். வரிசையாக தூரிகை ஏந்தி அவள் வீட்டை சிலர் முற்றுகையிடு கிறார்கள்.

அவளையும் அவள் உணர்வுகளையும் சிலர் குசலம் விசாரிக்கிறார்கள்.

நிசப்தம் அடர்ந்த விடியல்

மாய உலகில் சஞ்சரித்த பாப்பா புள்ள பெரட்டு சங்கிற்கு திடுக்கிட்டு எழுந்தாள்.

எழுந்தது முதல் பம்பரமாய் சுழன்றாள். சந்து பாதையிலும் மலை மேடுகளிலும் ஆழப்பதிந்த பாப்பா புள்ளையின் பாதங்கள் முதல் தடவையாக தலைநகரை நோக்கி நகர்கின்றன.

அகல விரிந்த விழிகளின் ஊடே வழிந்தோடியது வியப்பு. தலைநகரில் முதல் தடவையாய் தளிர்விட்ட கொழுந்து வியர்வை முட்டி கசகசத்தபடியே ஏஜன்சியில் வந்திறங்கியது.

காலையில் வெறும் வயிற்றில் குடித்த சாயம் பஸ்ஸில் ஏறியதில் இருந்து குமட்டி குமட்டி அட்சயமாய் வந்திறங்கும் வரை வாந்தியாய் போனதாலோ என்னவோ உடல் ஒரு விதமாய் அசந்திருந்தது.

“இந்தா புள்ள அங்க போயி மூஞ்ச அலம்பிகிட்டு வா! பாஸ்போர்ட்டுக்கு படம் புடிக்கணும்”

“அப்பிடியே இன்னைக்கு மெடிக்கலும் போடனும்” என்றதும் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த அறையில் நிரம்பி வழிந்தோடும் நீரை அள்ளி முகத்தில் அறைந்தபோது மீண்டும் சாயம் குடித்த தெம்பைப் பெற்றாள் பாப்பா புள்ள.

“இங்க பாரு புள்ள இனிமேல நீ பாப்பா புள்ள இல்ல பாத்திமா அந்தா இருக்கு பாரு பர்தா அத போட்டுக்கிட்டு வா! படம் புடிக்கணும்”

பாப்பா இப்போது பர்தாவில் மறைந்து பாத்திமா ஆனாள். எலும்பையும், தோலையும் மறைத்த "பர்தா" பாப்பா புள்ளைக்கு இன்னொரு புது உலகைத் காட்டியது.

ஏதேதோ எண்ணப்பாடுகள் முட்டி விபரிக்க முடியாத குழப்பத்தில் உறைந்தது மனசு. வெறும் வயிற்றில் விழுந்த பனிஸ் ஏப்பத்தின் வழியே தன் இருப்பை அடிக்கடி நிச்சயித்துக் கொண்டது. அருகில் மொழு மொழு கொழு கொழு வென சென்ட் வாசனையோடு அமர்ந்திருந்த பெண்ணின் குத்தல் பார்வை வேறு, ஏதேதோ செய்தது.

மனசைப் போல பர்தாவும் உடலை புழுக்கத்தில் தள்ளியது. "இங்கபாரு புள்ள மெடிக்கல் செக்கப்பு ஒழுங்கா இருந்தாதான் விசா வரும்" "எதையும் மறைக்காத எல்லாத்தையும் சொல்லிப்புடு" என்றதும் வார்த்தைகள் இன்றி தலையசைத்தபடியே அறைக்குள் வந்தாள் பாப்பா.

உடல் முழுதும் ஓடித்திரியும் கரங்கள் ஆங்காங்கே சில இடங்களைப் பிசைவதும் தட்டிப்பார்ப்பதுமாய் ஏதேதோ சோதிக்கப்பட்டன.

முடிவு அவளே அறியாமல் அவளுக்குள் இன்னொரு உயிர் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

டொக்டருக்கும் ஏஜன்சிக்கும் இடையில் நிலவும் சம்பாஷனையின் சாராம்சம் புரியாமல் குழப்பங்களோடு கட்டிலில் கிடந்தாள் பாப்பா.

"ஏம்புள்ள இந்த மாசம் நீ குளிக்கலையா? கூறு கெட்ட மாடு ஏழு கட்டு புல்லு தின்ன கதயா இல்ல இருக்கு ஒங்கத"

"இங்க பாரு புள்ள வயித்தில் உள்ள ஊத்தய் சுத்தம் பண்ணுனாத்தா மெடிக்கல் குடுப்பாங்க"

என்னா சொல்லுற?

.........................

.........................

திடுமென ஒரு முடிவுக்கு வர முடியாத துயரத்தின் வெளிப்பாடாய் கன்னத்தின் வழியே வடிந்து கீழிறங்கிய கண்ணீரோடு "அவர ஒரு வார்த்த

கேட்டு புடடு...! "அட என்னாப்புள்ள போவனுமுன்னு முடிவு எடுத்துப்புட்டு ஊரு பட்ட கடன் வேற எல்லாத்தையும் நான் பாத்துக்கிறேன். இதுல ஒரு ஒப்பத்த போட்டுப்புட்டு வயித்த கழுவிக்க என்றதும் அரைகுறை மனசுடன் வெள்ளை தாளில் விழுந்த கறும்புள்ளியாய் இடப்பட்ட ஒப்பத்தை உள்வாங்கிக் கொண்டது தாள்.



மெதுவாய்....

மிக மெதுவாய் கண்கள் இருண்டு கொள்கின்றன. வேற்று கிரக பிரவேசமாய் ஏதேதோ நடந்தேறின.

விழித்தபோது அவளுள் இருந்து எதையோ வலுக்கட்டாயமாகப் பிடுங்கி எடுத்த உணர்வு மட்டுமே எஞ்சின.

ஓவென உட்கார்ந்து அழவேண்டும் போல் இருந்தது.

காற்றை கிழித்துப் பயணிக்கிறது ஹட்டன் பஸ் முந்தியடித்து விழிபிதுங்கி முரண்வார்க்கும் ஏதேதோ எண்ணப்பாடுகளில் கரைந்தாள் பாப்பா.

கன்னியப்பில் பாப்பா புள்ளய தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

துடிதுடிப்பும் மிடுக்கும் குறையா பாப்பா புள்ளயிடம் எப்போதும் சிரிப்பிறகுப் பஞ்சமிருக்காது. கங்காணி தொடக்கம் கண்டாக்கு வரை எதையாவது சொல்லி

கலகலப்பை ஏற்படுத்திக்கொண்டே இருப்பதால் அவளில்லா மலை கலை இழக்கும்.

பாப்பா புள்ளையின் வெகுளித்தனமும் வெள்ளையுள்ளமும் பற்றி முணுமுணுக்காத வாய்களே கிடையாது. கன்னியப்பு மண்ணிலே பிறந்து வளர்ந்து அங்கேயே வாழ்க்கப்பட்டுப் போன மகராசி தான் பெற்ற இரு பிள்ளைகளின் எதிர்காலம் எண்ணி சவுதிக்கு செல்ல இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன.

தோட்டம் கவலை தோய்ந்த அனுதாபத்தில் உறைந்தது.

"பாப்பா புள்ள இல்லாத மலயில இனி சிரிப்பே இருக்காதே"

"இனி மேல யாருத்தா "மலசாமி" கும்புடுவாங்களோ....!"

"தூள் சீட்டு புடிக்கவும் இனி ஆள் இல்ல..."

"இனி மேல இந்த கங்காணிப் பயலுகளோட கொட்டத்த அடக்கவே முடியாதே..." என பாப்பா புள்ளையின் பிரிவு பல்வேறு சலசலப்புகளை ஏற்படுத்தின.

உறவுகள் கூடி அழுதபோது உயிரை இழுத்து வெளியில் போட்ட உணர்வு, பிஞ்சுக் கரங்களால் இடுப்பைச் சுற்றி விலங்கிட்டு கதறி அழும் கண்ணாவை யும் பொண்ணுப் புள்ளையையும் கட்டித் தழுவி அழுது தீர்த்தாள் பாப்பா புள்ள.

மனசோ விபரிக்க முடியாத பீதியில் உறைகிறது. வயிற்றுக்கும் தொண்டைக்கும் இடையில் ஏதேதோ உருண்டோடின.

நாவறண்டு கிடந்தது.

எல்லாமே புது அனுபவமாக இருந்தது. தாழ்ந்து மிகத்தாழ்ந்து திடீரென உயரப் பறந்தது விமானம். முனியாண்டி கோயில் வீபூதியை அள்ளி பாதாவை விலக்கி நெற்றி முழுவதுமாய் பக்தி சிரத்தையோடு இட்டுக் கொள்கிறாள் பாத்திமா.

கண்களை இறுகமூடி இருக்கையை தேயிலை கறைதோய்ந்த முறுக் கேறிய கரங்களால் இறுகப் பற்றிக்கொள்கிறாள். அதோ தேவதைகளின் குழு மத்தில் உலவித் திரிகிறாள் பாப்பா புள்ள. மலர் தூவிய கம்பளத்தில் மஞ்சம் கொள்கிறாள். புதிய உலகில் சஞ்சரிக்கிறாள்.

குடும்பமும் குழந்தைகளும் நிழலாடும் தருணங்களில் எல்லாம் பொங்கி எழுந்த விம்மல்களோடு தொடர்ந்து பயணம்.

மேடு பள்ளம் தாண்டி ஊர்ந்து செல்லும் தோட்டப்புறத்து ருக்மணி வண்டிப் பயணம் தரும் உடல் வலியை விஞ்சியது. ஆடாமல் அழுங்காமல் வந்திறங் கியும் குறையாத மனவலி அந்நிய மண்ணில் அழுத்திப் பதிகிறது பாப்பா புள்ளையின் பாதங்கள்.

கண்ணைக் கட்டி காட்டில் விட்ட நிலை. எட்டும் தூரம் வ்ரை ஏதேதோ துழாவின கண்கள். பரீட்சைய மற்ற மனிதர்களும் சூழலும் பலவாறான எண்ணப்பாடுகளை முடுக்கிவிட்டிருந்தன.

மீண்டுமொரு முறை "முனியாண்டியப்பா நீதா சாமி எல்லாத்தையும் பாத்துக்கணும்" என முணுமுணுக்கும் பீதி கலந்த மனசுடன் நின்றிருந்தாள்.

தன்னையே வெறித்துப் பார்க்கும் ஒரு செம்பட்டையின் சல்லடை பார்வை. பனியலயத்து ஜிம்மியை ஞாபகப்படுத்தியது. குத்தலும் குடைச்சலுமாய் எஜமான் செம்பட்டையைப் பின் தொடர்ந்தாள பாப்பா.

குழப்பங்கள் கும்மி கொட்டும் பாப்பா புள்ளையின் அழகு செம்பட்டையின் ஓரப்பார்வையில் கடித்து குதறப்பட்டு கொண்டிருப்பதை அறியாமல்.

கருத்து பரிமாற்றங்களுக்கு மொழி அவசியமில்லை என்பதை மூன்று மாதங்களில் உணர்ந்தாள் பாப்பாபுள்ள.

மூன்று நேர தொழுகைக்கும் இஸ்லாமிய வாழ்க்கைமுறைக்கும் பழகிப்போனதோடு அரபு மொழியும் அத்துப்படியானது. ஆங்காங்கே புடைத்து நின்ற எலும்புகளை எல்லாம் தசைகள் மறைத்து செப்பமிட்டன.

உடல் ஒருவிதமாய் பழுப்பு நிறமேறியிருந்தது. புதியதொரு வாழ்க்கை முறைக்குள் வந்து விழுந்திருந்தாலும் கண்ணாவும், பொண்ணுபுள்ளையும் சதா அவளை வேதனையில் தோய்த்து எடுக்கத்தான் செய்தனர்.

வீட்டு வேலைகளில் பம்பரமாய் சுழன்று திரும்பியபோது நேரம் நள்ளிர லைக் கடந்திருந்தது. உணர்வு பிரளயங்களைக் கொட்டிவிடத்துடிக்கும் அவா வுடன் மூன்று நாட்களாய் எழுதியும் முற்றுப் பெறாத கடிதத்தை தொடர்ந்தாள் பாப்பா.

“மச்சான் என்னோட சொகத்தப் பத்தி கவலப் படாதீங்க. வேள சரியான கஸ்டந்தான். நோனா நள்ளம் மாத்தியாத் தான் சரியில்ல நேனா பேச்ச கேக்கவே மாட்டாரு ஊருபட்ட கூட்டாளி. குடிச்சி கும்மாளம் போடத்தான் சரி “குடிச்ச மனுசனே இல்ல” இனிமேதான் நாம மனுசனாகணும், ஒழுங்கு மரியாதயா கடன எல்லாம் கட்டிப்புடுங்க. ரெண்டு மாச சம்பளத்த இதோட அனுப்பி வேக்கிறன். இந்த சல்லியில மேட்டு லயித்தில இருக்க காமாச்சி அக்காவோட தோட திருப்பி கொடுத்துப்புடுங்க. அப்புடியே வட்டிக்கு வாங்கின சல்லியையும் குடுத்துப்புடுங்க. பொண்ணு புள்ளவுட்டு தோட திருப்பி காதுல போடுங்க இனிமேல நம்ம புள்ள முண்டச்சியாட்டம் நிக்கக் கூடாது. வர்ர நேரம் கன்னா பய ஒரு காரு கேட்டா, ஒன்னு வாங்கிக் குடுங்க. பொண்ணுப்புள்ளைய மட்டும் கவனமா பாத்துக்கங்க. புள்ளைகளுக்கு நல்லது பொல்லது எல்லா வாங்கி குடுங்க. புள்ளைகளுக்கு உடுப்பு துணிமணி சென்டு வெளயாட்டு சமா எல்லா அனுப்பி வெச்சிருக்கேன். நாய் படாத பாடு பட்டுக்கிட்டுதான் இருக்கேன். அனுப்புற காசுல குடிச்சி கும்மாளம் போட்டுறாதீங்க. லயித்தில எல்லோரை யும் கேட்டேனு சொல்லுங்க. முனியாண்டி கோயிலுக்கு இந்த சல்லியில ஒரு தேங்கா வாங்கி ஒடச்சிருங்க மச்சான்” என மனச் சுமைகளை எல்லாம் இறக்கிவிட்ட நிம்மதியோடு கண்ணயர்ந்து போனாள் பாப்பாபுள்ள.

தன் இறக்கையை அகலவிரித்து படபடக்கிறது முனியாண்டி கோயிலுக்கு நேந்துவிட்ட கறுப்புச் சேவல் கொண்டையை ஆட்டி ஆட்டி தொலை தூரம் வரை தரிசிக்கும் சேவலின் பார்வையில் தூரத்தில் பம்மி வால் குழையும் ஜிம்மி அகப்படவே இல்லை.

தந்திரமாய் தன் கபட நாடகத்தைத் திட்டமிட்டபடி இருந்தது ஜிம்மி.

செந்நிறமான அடர்ந்த ரோமங்களைக் கொண்ட ஜிம்மியின் பற்கள் வலு கூர்மையானவை. கோழி வேட்டையின் போதெல்லாம் பிரித்துப் மேய்வதற்கு வசதியாய் எப்போதும் பற்களைக் கூர்மையோடு வைத்திருக்கும் முனியாண்டி

கோயில் கறுப்புச் சேவல் உரோமங்களை உலுக்கி உடல் அசதியை போக்கிக் கொண்டிருந்த வேளை மின்னல் வேகத்தில் வந்த ஜிம்மி சேவலைக் கவ்விக் கொண்டு நெத்திக் காணில் ஓடிப் பம்மியது.

ஜிம்மியின் உடும்பு பிடியில் இருந்து தப்ப முடியா சேவல் இறக்கைகள் படபடக்க ஒருவிதமாய் சத்தமிட்டு அடங்கிற்று. முனியாண்டி கோயில் கறுப்புச் சேவல் ரத்த வெள்ளத்தில்.... ஜிம்மியின் முகத்திலோ ஏக களிப்பு.

வீச்சென அலறித்துடித்து கனவில் இருந்து மீண்டாள் பாப்பா புள்ள. நிசப்தம் உறைந்த அறையை அவளின் மேல்மூச்சும் கீழ்மூச்சும் சலனப்படுத்தின.

தலையணைக்கு கீழ் பத்திரப்படுத்தி இருந்த முனியாண்டி கோயில் வீபூதியை அள்ளிப் பூசிக் கொள்கிறாள்.

படபடப்பு தணியவே இல்லை. கண்களை மூடும் போதெல்லாம் இரத்த வெள்ளத்தில் கிடக்கும் கறுப்புச் சேவலும் ஏக களிப்பில் நிற்கும் பணியலயத்து ஜிம்மியும் வந்து வந்து மிரட்டின. ஒரு தடவைக்கு பல தடவை அறையின் தாழ்பாளை அசைத்து இழுத்து ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதோடு தூக்கம் தொலைந்த இரவும் புலர்ந்தது.

மப்பும் மந்தாரமுமாய் புலர்ந்து கிடந்த பொழுது அவளை விவரிக்க முடியாத குழப்பங்களுள் ஆழ்த்தின.

காமம் முட்டி வலுத்து சீழ் கட்டிய எஜமானின் இச்சைக்கு களம் அமைத்துக் கொடுத்தது, அன்றைய தனிமை போராடி போராடி தீராணியற்றுச் சோர்வடைந் தாள் பாப்பா.

மாமிசம் வளர்த்த உடல்கள் பசி பட்டியால் வாடி வதங்கிய பாப்பா புள்ளை யின் உடலை ஒன்றன் பின் ஒன்றாக பருகி ஏப்பமிட்டன.

சதைப் பிண்டத்தின் சுமை தாளாமல் உடல் கனத்தது. தொடைகள் மரத்துக் கிடந்தன. மெது மெதுவாய் கண்கள் இருண்டன. ஆறாய் பெருக்கெடுத்தது உதிரம். அப்படியே மலை போல் சாய்ந்தாள் பாப்பா புள்ள.

அங்கேயும் இரத்தம் வழியும் வேட்டைப் பற்களை நீட்டி அச்சுறுத்தும் ஜிம்மியும், அநியாயமாய் பலியாகிக் கிடக்கும் முனியாண்டி கோயில் கறுப்புச் சேவலும் வந்து வந்து போனது.

ஆங்காங்கே சிந்தி விகாரப்பட்டுக் கிடந்த முனியாண்டி கோயில் விபூதி பொட்டலத்தை வாரி எடுத்துப் பத்திரப்படுத்த முயலும் கைகள் தளர்ந்தன.

வாய் பிசத்தி ஒப்புவிக்கும் அந்த வார்த்தைகள் மட்டும் தெளிவாய் காற்றுடன் கலந்தன.

"அநியாயம் செஞ்சா முனியாண்டி கேப்பான்

யா அல்லாஹ்!

யா அல்லாஹ்!....

(செங்கதிர் மலையக சிறப்பிதழ் - 2009)

# 07

# மட்டத்து கத்தி

## *Theme of Tool's*

சிறிய வயதில் இருந்தே மட்டத்துக் கத்திக்கும் எனக்கும் ஒருவிதமான பிணைப்பு இருந்தது. எப்போதுமே அம்மாவின் இடுப்பில் செருகப்பட்டிருக்கும் மட்டக் கத்தி இல்லை என்றால் அம்மாவுக்குக் கையும் ஓடாது காலும் ஓடாது.

கைக்கு கச்சிதமாய் அளவான பிடியுடன் வளைந்த மூக்கையும் கொண்ட மட்டக்கத்தி மீது ஆரம்ப நாட்களில் ஒருவிதமான வெறுப்பு இருந்தது உண்மை. என்னையும் மேவி அம்மா கத்தி மீது காட்டும் ஆர்வம் தான் மட்டக் கத்தி மீதான என்வெறுப்பை வலுவூட்டிப் போயிருந்தது.


பாக்கு வெட்டுவது தொடங்கி மட்டம் ஒடிப்பது வரைக்குமாய் அம்மாவுக்குப் பல விதங்களில் உறுதுணையாக நிற்பது மட்டக்கத்திதான்.

கைக்கு வாட்டமாய் இருப்பதாலோ என்னவோ அம்மா, கத்திப் புராணம் படாத நாளே கிடையாது. கைவந்த வாக்கில் எங்காவது கத்தியை வைத்துவிட்டு தேடி எடுக்கும் வரை அம்மாவின் தொணத் தொணப்பு அடங்காது.

தோட்டத்தில் மட்டம் ஒடிப்பதில் அம்மாவுக்கு நிகா் அம்மாதான். சாதாரண மாகவே எல்லா மலைகளும் அம்மாவின் கைவண்ணத்தில் மட்டம் ஒடித்து செப்பனிடப்பட்டிருக்கின்றன.

அதனால் தானோ என்னவோ எனக்கு அளவில் சிறியதாய் கைக்கு

கச்சிதமாய் உள்ள எல்லா கத்திகளும் மட்டத்துக் கத்தியாகிப் போனதுபோலும் சூரிகத்தி, கவ்வாத்துக்கத்தி, பெரிய கத்தி, மேசைக்கத்தி என்று கத்தியில் பலவகை இருந்தாலும் எனக்குள் மட்டக்கத்தி ஏற்படுத்திய அதிர்வை வேறு எந்தக் கத்தியும் ஏற்படுத்தவில்லை.



அப்பா கவ்வாத்துக்குப் போகும் போதெல்லாம் பளபளப்பாய் ஒளிவீசும் படி தீட்டி வைக்கப்பட்டிருக்கும் கவ்வாத்துக் கத்தியைக் கண்டாலே ஒருவிதமான நடுக்கம் இருக்கும். மிடுக்கும் ஒருவிதமான கம்பீரமும் கொண்ட கவ்வாத்துக் கத்தி என்னுடைய பார்வையில் ஆம்பள கத்தியாகவும் சிறியதாய் கைக்கு அடக்கமாய் உள்ள மட்டத்துக்கத்தி பொம்பள கத்தியாவும் தோணும்.

ஆனால் மட்டத்துக்கத்தி அப்பாவிடம் கொடுத்து பட்டை தீட்டப்படும் போதெல்லாம் ஆம்பிளைத் திமிரைக் காட்டும் அப்பா மீது ஒருவிதமான கோபமிருக்கும்.

இப்படித்தான் ஒருமுறை பெரிய அம்மையில் பலமாய் பாதிக்கப்பட்டுப் போனேன். அப்போதுதான் மட்டத்துக் கத்தி மரியாதைக்குரியதாய் மாறியது. இதுவரை காலமும் அம்மாவின் உரமேறிய கரங்களும் இடுப்பும் தன்னுடைய இருப்பிடமாய் இருந்த கத்தி இப்போதெல்லாம் என் தாலைமாடே கதியாய் கிடந்தது.

ஒண்ணுக்கு ரெண்டுக்குத் தொடங்கி, சாதாரணமாய் நிறைவேற்றப்படும் அத்தியாவசிய வேலைகள் வரைக்குமாய் வெளியில் கிளம்பும் போதெல்லாம் இருபத்து இரண்டு நாட்களும் அம்மா கத்தியைக் கையில் திணிப்பதற்கு தவறியதே இல்லை.

காத்துக் கறுப்பு அண்டாமலும் துர் ஆவிகள் விலக்குவதற்குமே இவ்வாறான சந்தர்ப்பங்களில் கையில் கத்தி கொடுக்கப்படுகிறது என்பதை பின்னர் அறிந்துகொண்டேன். அப்போதுதான் என் மீதான அம்மாவின் மேலான அக்கறை புரிந்து போனது.

இது இவ்வாறு இருக்கவே எனக்கும் மட்டக் கத்திக்கும் இடையிலான உறவை மேலும் வலுவூட்டிப் போகும் வகையில் நான் பெரியவளான போது எனக்காக ஒதுக்கப்பட்ட தனியறையில் தலையணைக்குக் கீழ் கத்திக்கும் தனியிடம் ஒதுக்கப்பட்டது.

பெரியவளாகிப் போன கனவுகளுடன் புரட்சிப் பெண்ணாய் மட்டக் கத்தியைத் தலைக்கு மேலே தூக்கி அப்படியும், இப்படியும் பாவனை செய்து மனங்குளிரும் போதெல்லாம் எனக்குள் ஒருவிதமான உறுதி, தைரியம், தொண்டைக்குழி வழியாக கீழிறங்கும்.

பின்னர் பழைய இலக்கியங்களிலும் சங்கப் பாடல்களிலும் வீரவாள் குறித்த புனைவுகளை உள்வாங்கிக் கொண்ட போதெல்லாம் எனக்கு நன்கு பரீட்சையமான மட்டத்துக்கத்தி குறித்த எண்ணப்பாடுதான் முனைப்புப் பெறும்.

எப்போதாவது அத்தி பூத்தாற்போல் என் வீட்டில் கவிச்சி சமைக்கும் போதெல்லாம் அம்மாயி வீட்டுக்குக் கறி கொண்டு போகும் பணி என்னதாகும். அன்றும் "பொண்ணுப் புள்ள இந்தக் கறிய ஓங்க அம்மாயிகிட்ட கொண்டி குடுத்துட்டு வாடி! அம்மி சந்துல மட்டக்கத்தி இருக்கு மறக்காம எடுத்துக்க என்று ஆவி பறக்கும் கோழிக்கறியை மேசையில் வைத்து பணிக்கும் அம்மாவின்

குரலில் ஒருவிதமான தெம்பிருந்தது.

இத்தனை காலமும் மதிப்பிற்குரியதும் உயர்வானதுமாக இருந்த மட்டக்கத்தி முதல் தடவையாய் என்னுள் ஓர் வலியை ஏற்படுத்தியது. என்னதான் உயர்கல்விக்காக கல்லூரியில் இணைந்து புதுவிதமான வாழ்க்கைப் பாணிக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டாலும் நம்முடைய சுயத்தையும் வழமையையும் அவ்வளவு எளிமையாய் மாற்றிக்கொள்ள முடியாதுதானே!

விடுதி வாழ்க்கையில் பிறந்தநாள் கொண்டாட்டம் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அன்றும் நண்பி ஒருத்தியின் பிறந்தநாள் கொண்டாட்டம் பலமாய் ஏற்பாடாகி இருந்தது. கனகச்சிதமாய் எல்லா ஏற்பாடுகளும் நடந்தேறி இருந்தாலும் எல்லோராலுமே மறக்கப்பட்ட விடயம்தான் கத்தி.

எல்லா சிறிய கத்தியுமே எனக்கு மட்டத்துக் கத்தியாகிப் போனதால் இயல்பாய் “எங்கடி அந்த மட்டத்துக் கத்திய போட்டீங்க?” என்றதும் நண்பர்களின் கொல்... சிரிப்பொலி என்னை அவமானத்திற்குள்ளாக்கியது. அன்றுடன் மலராகிய நான் மட்டக்கத்தி மலர் என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட்டேன்.

ஏதோ மட்டத்துக்கத்தி என்பது கெட்ட வார்த்தைக் கணக்காய் ஒவ்வொரு வரும் முகத்தைச் சுழிக்கவும், கேலி செய்வதுமாய் கல்லூரி வாழ்க்கை முடியும் வரைக்கும் மட்டக்கத்தி மலராகவே நடத்தப்பட்டேன்.

ஆரம்பத்தில் ஒருவிதமான அவமான உணர்வு என்னுள் ஊடுபரவி இருந்தாலும் பின்னர் அதுவே என்னை ஏனையோரில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதாய் உணர்ந்தேன்.

பின்னர் எனக்கும் தனியான குடும்பம் குட்டி, என்று ஆனபோது அம்மாவிடம் இருந்து விலக்கப்பட்டேன். நானும் ஒரு தாயாகி கருவைச் சுமந்தபடியே தாய் வீட்டுக்குத் திரும்பிய போதும் என் நலனில் அக்கறை எடுக்கும் அம்மா ராத்திரி சாமம் வெளிய தெருவுக்குப் போகும் போதெல்லாம் மட்டக்கத்தியுடனே துணைக்கு நிற்பாள்.

சில மாதங்களுக்குப் பின் யாருமே எதிர்பாராத நேரத்தில் அம்மா

மரணப்படுக்கையில் விழுந்ததும் அந்திம கால கஷ்டங்களை எல்லாம் அளவுக்கு அதிகமாய் அனுபவிதத்தும் எனக்கு கனவுபோல் இருந்தது.

படுக்கையோடே வெளிய தெருவுக்கு போகத் தொடங்கிய அம்மாவின் மீதான உறவு வீட்டில் உள்ள அனைவருக்குமே கசந்துபோனது. ஒருவிதமான துர்வாடையுடன் இலையான்கள் மொய்க்கும் அம்மாவின் அரைப்பிணத்தைக் கழுவிச் சுத்தப்படுத்த கட்டிலில் இருந்து அப்புறப்படுத்துகிறேன்.

அங்கேயும் தலையணைக்கடியில் பத்திரப்படுத்தியிருந்த மட்டக்கத்தி வெளிப்பட்டு அம்பலமாகிறது.

அன்றைய விடியல் என்னில் இருந்து அம்மாவை நிரந்தரமாய் அந்நியப்படுத்திப் போயிருந்தது. தோட்டம் கூடி நின்று அம்மாவுக்காக அழுது புலம்பியது.

எல்லா சடங்கு சம்பிரதாயங்களும் நடந்தேறிய நிலையிலும் எனக்கு மட்டும் ஏதோவொரு உறுத்தல் மனசைப் போட்டு அரித்தது. அப்போது அப்பாயி தோட்டத் தலைவரிடம் குசுகுசுக்கும் வார்த்தைகள் தெளிவாய் என் காதுகளில் விழுந்தன.

“ஏன்டா புள்ளக் குட்டினு ரொம்ப ஆசையா வளத்தவ இல்ல, அதனால பெட்டியில ஒரு இரும்புத் துண்ட போட்டிடுங்க. நாமளும் புள்ளக் குட்டியோட சந்தோஷமா இருக்கணுமில்ல” என்றதும் பொறி தட்டினாற் போல் எனக்கு அந்த விடயம் புரிந்து போனது. உடனே ஓடிச் சென்று அம்மாவின் கட்டிலுக்கு அடியில் பத்திரப்பட்டு இருந்த மட்டக்கத்தியை எடுத்து அப்பாவிடம் நீட்டுகிறேன்.

அப்போதுதான் என்னையும் மேவி கண்கள் கண்ணீரைப் பனிக்கிறது. இருந்தாலும் கூட உள்மனதில் ஒருவிதமான திருப்தி நிரம்பி இருந்தது.

அம்மாவின் மறைவில் இருந்து மீள முடியாமல் அல்லாடிய மனசை சீண்டி விட்டுப் போவதாய் அப்பாயி உதித்த அந்த வார்த்தைகள் மட்டத்துக் கத்தி குறித்த என் எண்ணப்பாடுகளை சுக்கு நூறாக்கிப் போனது. நடுச்சாமம் எழுந்து வெளியே போவதற்காக சிமிலிலாம்பைத் தூண்டுகிறேன். திடுமென அம்மாயின் குரல் இருளைக் கிழித்து என்னை அச்சமூட்டியது.

“ஏன்டிமா வெளியே போவணுமா?

லாம்ப எடுத்துக்கிட்டுப் போ

ஆப்பபடியே என்னோட தலமாட்டுல உள்ள கத்தியவும் எடுத்துக்க!"

"என்னதான் ஆயிம் புள்ளயுமா இருந்தாலும் செத்தப் பெறகு நாயிக்கும் பேயிக்கும் ஒறவா இருக்கு," என்ற வார்த்தை காய்ச்சிய இரும்பைக் காதில் வடித்ததாய் உள் இறங்கியது.

**எங்கும் இருள் வியாபித்திருந்தது. கையில் இருந்த கத்தியை முடியுமான பலம் கொண்டு காட்டை நோக்கி வீசி எறிந்துவிட்டு நிம்மதிப் பெருமூச்சுடன் வந்து படுத்துக்கொள்கிறேன். என்றும் இல்லாதவாறு அலாதியான தூக்கம் கண்களைத் தழுவுகிறது.**

(02.12.2007 தினக்குரல்

# 08

# புள்ளையார் பந்து

## *Trend & Tradition*

"ஆளே ஆளே ஆளே" என்ற கூச்சல் பொட்டலை நிறைத்தது ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் செமன்டின்களால் காமன் பொட்டல் அகோரப்பட்டிருந்தது.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிதறிக் கிடக்கும் டின்களை ஒன்றிணைப்பதில் மும்முரமாய் இருந்தான் சின்ராசு.

எப்போதுமே ஆட்டம் முடிந்தவுடன் எல்லோருடைய கவனத்தில் இருந்து தப்பிவிடும் செமன்டின்களை பாதுகாக்கும் பொறுப்பு சின்ராசுவைச் சாரும். கோடிப்புறத்தில் கிளைபரப்பி சடைத்து நிற்கும் பலாமரச் சூழலில் தான் எப்போதும் செமன் டின்கள் தஞ்சம் புகும்.

நெளிந்து வளைந்து அகோரப்பட்டு நொண்டி அடிக்கும் டின்கள் சிலவற்றை கழித்துவிட்டு அண்மைக்கால அறுவடைகள் சிலவற்றைக் கொண்டு கம்பீரமாய் டின்களை அடுக்கி முடித்தான் சின்ராசு.

ஆட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தப்பட்ட டின்களை ஒன்று திரட்டி எடுத்தெறிந்தான். சின்ராசு தொப்பென விழுந்து அது ஏற்படுத்திய அரவம் புள்ளையார் பந்தில் புதிதாக இணைந்திருக்கும் டின்களுக்கு வரவேற்புக் கீதம் இசைப்பதாய் அமைந்தன.

வழமையாகவே புள்ளையார் பந்தைத் தன் கையில் வைத்திருக்கும் கைங்கரியம் தெரிந்தவன் சின்ராசு.

டின்களால் கட்டப்படும் கனவு சிகரத்தை புள்ளையார் பந்து கொண்டு சிதைத்தழிக்கும் கனவும் ஆர்வமும் நாளுக்கு நாள் அவனுள் வளர்ந்து கொண்டே சென்றது.

ஆதனால்தானோ என்னவோ சின்னராசுவிற்கும் சின்னத்தங்கத்திற்கும் எப்போதும் ஏழாம் பொருத்தம் போலும்.

தினம் தினம் புள்ளையார் பந்தும் ஆட்டமும் சின்ராசு கைகளில் நிரந்தரப் பட்டுப் போனதால் எழும் சலசலப்பாக மட்டும் அவற்றைக் கொள்ளமுடியாது.

புள்ளையார் பந்தும் அதன் இருப்பும் குறித்து சின்ராசுவால் முன்வைக்கப் படும் நொண்டிச் சாட்டுகளை சின்னத் தங்கம் ஏற்றுக்கொள்வதே இல்லை.

அன்று வழமைக்கு மாறாக அதிகமான டின்களைக் கொண்டு ஏற்பட்டிருந்த கோபுரம் சின்ராசுவின் கைகளில் தவழ்ந்தது புள்ளையார் பந்து சின்னத்தங்கத் தின் முகத்தில் இறுக்கம் படர்ந்திருந்தது. புள்ளையார் பந்து கண் இமைக்கும் நேரத்தில் கலசத்தை அடித்து துவசம் செய்தது.

அப்போது பொட்டல் மீண்டும் பரபரப்பில் ஆழ்ந்தது. மீண்டும் அடித்துக் கலைக்கப்பட்ட கலசத்தை ஆக்கும் முயற்சியில் ஒரு கூட்டம் தீவிரம் காட்டியது.

அடித்து பலரை ஆட்டத்திலிருந்து நீக்கும் முயற்சியில் சின்ராசு மும்முரமாய் இருந்தான். இருப்பினும் சின்னத் தங்கத்தை தன் கவனத்துள் விஷேடமாய் வீழ்த்தியிருந்தான்.

பலரின் முதுகை அகோரமாய் பதம் பார்த்த புள்ளையார் பந்து ஆட்டத்தில் இருந்து அவர்களைத் தூக்கி வீசியிருந்தது.

தூக்கி எறியப்பட்ட கூட்டத்தில் வலியோடு நின்றிருந்தான் சின்னத்தங்கம். உள்ளுக்குள் சினம் பரவியிருந்தது.

சின்னத்தங்கத்தின் கண்கள் ஒருவிதமாய் சிவப்பேறியிருந்தன. புள்ளையார் பந்து பதித்த தடமும் ரணமும் சின்னத்தங்கத்தினுள் ஏதேதோ எண்ணப்பாடுகளை முடுக்கி விட்டிருந்தது.

மறுநாள் பலாமரச் சூழலில் இருந்து டின்கள் களவாடப்பட்டிருந்தன. அன்று மாலை பொட்டல் வெறிச்சோடியிருந்தது. எவராலும் யூகிக்க முடியாதபடிக்கு டின்கள் களவாடப்பட்டிருந்தன. பல்வேறு கோணங்களில் தேடல்களை

முடுக்கிவிட்டபோதும் டின்கள் கிட்டவே இல்லை. அதற்காக சின்ராசு சோர்வடையவும் இல்லை. மீண்டும் புள்ளையார் பந்திற்கான டின்களைத் தேடிப் பெற்றான். அப்போதும் சின்ராசுவிற்கும் சின்னத்தங்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் மட்டும் தீர்வதாய் இல்லை.

வழமையாகவே புள்ளையார் பந்தைத் தன் கைவசம் வைத்திருப்பதால் வளர்ந்து விருட்சமான சின்னத்தங்கத்துடனான முரண்பாடுகள் அன்றுடன் முற்றிற்று என்றுதான் சின்ராசு எண்ணினான். ஆனால் புள்ளையார் பந்து தன் கைவசம் ஆனதும் சின்னத்தங்கம் வேறுவிதமாய் நடந்துகொண்டான்.

அன்று புள்ளையார் பந்து சின்னத்தங்கத்தின் கைகளில் தவழ்ந்தது. ஆட்டத்தின்போது சின்னத்தங்கத்தால் கொடுக்கப்பட்ட மரண அடி முதல் தடவையாய் சின்ராசுவினுள் ஆறாத ரணத்தை ஏற்படுத்தியது.

ஒட்டு மொத்த பலம் கொண்டு சின்னத்தங்கத்தால் கொடுக்கப்பட்ட அடியின் வலி தாளாமல் ஆவேசத்தால் வார்த்தைகளை அள்ளிப் பொழிந்தான் சின்ராசு.


சின்ராசுவின் ஆவேச வார்த்தைகள் சின்னத்தங்கத்தின் கோபத்தை இன்னும் வலுவூட்டிப் போனது.

அடித்துக் கலைக்கப்பட்ட புள்ளையார் பந்து கலசத்தை நாலாபுறமும் சிதறடித்திருந்தது. கோபம் முட்டி அருகில் கிடந்த டின்னை எடுத்தெறிந்தான் சின்னத்தங்கம் எதிர்பாரா விதமாய். சின்ராசுவின் புருவத்தைக் கிழித்து ஆழமாய் காயத்தை ஏற்படுத்திய செமண்டின் இரத்தம் தோய்ந்து விழுந்தது. கதறித் துடித்து வீழ்ந்தான் சின்ராசு.

அப்போதும் சின்னத்தங்கத்தின் முகம் இறுக்கத்தைத் தளர்த்தவில்லை. அன்று முதல் புள்ளையார் பந்தும் செமன்டின்களும் சின்னத்தங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

எதையோ சாதித்துவிட்ட பெருமிதம் சின்னத்தங்கத்தை ஆட்கொண் டிருந்தது.

ஆனால், புள்ளையார் பந்து குறித்து உள்ளிருந்த ஆர்வம் மட்டும் தளர்ந் திருந்தது. புள்ளையார் பந்தும், செமன்டின்களும், தம் வசம் வந்து சேராத வரை முனைப்புப் பெற்றிருந்த புரட்சியும் புதுமையும் அந்நியப்பட்டுப் போன நிலையில் அன்றுமுதல் ஒப்புக்காக ஆட்டத்தில் இருந்தான் சின்னத்தங்கம்.



இப்போதெல்லாம் சின்ராசு பொட்டல் பக்கமே வருவதில்லை. அதிகமான அந்திப் பொழுதுகள் புள்ளையார் பந்தில்லா வெறுமையோடுதான் கழிந்தது. புள்ளையார் பந்திற்கான டின்கள் துருவேறியிருந்தன.

ஏதேதோ ஒப்புதலில்லா புதிய விளையாட்டுக்களில் எல்லாம் எல்லாம் களை கட்டிவிடும் பொட்டல் புள்ளையார் பந்தை மட்டும் மறந்து போயிருந்தது. இப்படித்தான் ஒருநாள் சின்ராசும் சின்னத்தங்கமும் எதிர்பாராத நேரத்தில் புள்ளையார் பந்தால் பொட்டல் மீண்டும் களைகட்டத் தொடங்கியிருந்தது.

சின்ராசுவிற்கும் சின்னத்தங்கத்திற்கும் இருப்புக் கொள்ளவில்லை.

"ஆளே ஆளே யார் கை போல்

ஆளே ஆளே யார் கை போல்" என்ற கூச்சல் புது பரவசத்தை ஏற்படுத்தியது.

ஏதோ இனம் புரியாத பூரிப்போடு எகிறிக் குதித்து பொட்டலை நோக்கி ஓடினான் சின்ராசு. ஆங்கே கடுகடுத்த முகங்களோடு நின்றிருந்த சிறார்கள் ஒட்டு மொத்தமாய் கூடி சின்ராசுவையும் சின்னத்தங்கத்தையும் தடுத்து

நிறுத்தியபோது அதுவரை ஒளி படர்ந்திருந்த சின்ராசுவின் முகம் சப்பளிந்து வாட்டம் கொண்டது.

பளபளக்கும் செமன்டின்களால் ஏற்பட்டிருந்தது புதிய கோபுரம். உள்ளுக்குள் பரவியிருந்த ஆர்வத்தால் "டேய் உங்கு கோபுரத்த ஆடிச்சு ஒடைங்கடா வெளையாடுவோம்" என்றான் சின்ராசு.

"இல்லேண்ணே நாங்க ஒங்கள மாதிரி வெளையாட மாட்டோம். இப்ப எல்லாத்தையும் மாத்திபுட்டோம்"

"அட இவென் எவன்டா கிறுக்கு பயலா இருக்கான். வெளயாட்டுல என்னடா புதுசு பழசு எல்லாம் எங்களுக்குத் தெரியும் பந்தப் போடு வெளயாடுவோம்" என்றான் சின்னத்தங்கம்.

பதிலுக்கு சின்ராசுவும் "அதானே வெளயாட்டுல என்னடா புதுசா வெளயாடுறீங்க" என்றான்.

"அண்ணே அடுக்குன டின்ன அடிச்சி ஒடச்சுபுட்டு இருந்த மாதிரியே கட்டி வெளயாட எங்களுக்கு விருப்பமில்லை. கொழும்பி கெடக்குற டின்கள் எங்களுக்கு இஸ்டப்பட்ட மாதிரி அடுக்கி கட்டுவம் அதுலதான் சுவாரஷ்யம் இருக்கு" என்று உங்கு யதார்த்தமாய் கொட்டிய வார்த்தைகள் சின்ராசுவினுள் விழுந்த கணம் அவன் அவனை உணர்ந்தான். உங்குவின் வார்த்தைகள் ஆராய்ச்சிக்கிடமின்றி அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டாயிற்று.

ஆனால், சின்னத்தங்கம் தன் பிடியில் தளர்வதாய் இல்லை.

"இங்கப்பாருங்கண்ணே இஸ்டமுனா வெளாடுங்க கஸ்டமுனா பேசாம பொத்திக்கிட்டு நில்லுங்க" என மிகத் தீர்மானமாய் எடுத்த முடிவில் உறுதி வெளிப்பட்டிருந்தது.

சிதறிக் கிடக்கும் டின்களை கொண்டு கலசத்தை ஆக்கும் முயற்சியும், ஆர்வமும் மீண்டும் பொட்டலை பரவசத்தில் ஆழ்த்தியது.

புள்ளைார் பந்து உங்குவின் கைகளில் தவழ்ந்து விளையாடியது. உள் ளதை அழித்து மீண்டும் பழைய மாதிரி உருவாக்குவதை விடவும் புதுமையாய் கட்டி எழுப்பப்படும் கலசம் இன்னும் இன்னும் கம்பீரமாய் இருப்பதாய் உணர்ந் தான் சின்ராசு. கலசத்தை ஏற்றும் வல்லமை இல்லாதவர்களைப் புள்ளையார்

பந்து ஆட்டத்திற்கு வெளியில் நிறுத்தியிருந்தது.

கலசத்தைக் கட்டி எழுப்பும் முயற்சியின் முடிவில் நின்றனர் உங்குவும், உங்குவின் சகாக்களும். பொட்டலை நிறைத்தது உங்குவும் அவனது சகாக்களும் இட்ட ஆரவாரம் கனவு சிகரம் வெற்றிகரமாய் ஏற்றப்பட்டாயிற்று.

உங்குவின் முகம் ஏக மகிழ்ச்சியில் திளைத்தது.

"கொழும்பிக் கெடக்குற டின்களை எங்களுக்கு இஸ்டப்பட்ட மாதிரிக் கட்டுவமே. ஏன் கட்டுன கலசத்த ஒடச்சி திரும்பவும் அதே மாதிரிக் கட்டணும்" என்ற உங்குவின் கேள்வி சின்ராசுவினுள் புதிய கோணங்களை முடுக்கி விட்டன. அந்தச் சந்தோஷப் பூரிப்போடு கட்டி முடிக்கப்பட்ட கலசத்தைப் பார்க்கிறான்.

**வழமைக்கு மாறாக கலசம் இன்னும் கம்பீரமாய் காட்சியளிக்கிறது.**

(05.04.2009 – தினகரன்)

# 09

# ஒரு அந்தபுரத்தின் அந்தகாரம்


## *Cast in Castle*

எப்பொழுதுமே அவள் வீட்டைச்சுற்றி சில தெரு நாய்களின் அட்டகாசம் தொடர்ந்தவண்ணம்தான் இருக்கும். இங்கிதம் துறந்துப் பொது வெளியில் ஒன்றை இன்னொன்று புணரத்துடிப்பதும், இடம் தராமல் மற்றொன்று கூச்சல் இடுவதுமாய் தொல்லைகள் தொடரும் மேகலாவின் சுற்றுச் சூழல் அவனுக்குப் பரீட்சையமான ஒன்றுதான். இந்நிகழ்வுகளின் அருவருப்பில் உச்சம் தொட்ட மனசு பலவிதமான அசௌகரியங்களை நுகர்ந்து அவஸ்தித்த பொழுதுகளை விட அந்நாய்களின் பின்னணி பற்றி அவளே சொல்லிய போது ஏற்பட்ட அதிர்வுகள் அதிகம்தான்.

இன்று வழமைக்கு மாறாக மேகலா இன்னும் பொலிவுடன் இருப்பதாய் அவனுள் ஒரு பிரயத்தனம். மேகலையின் அழகில் கிறங்கி உலகம் மறந்த நொடிகளின் பின்புலமாய் சீவன் அள்ளும் அவளின் சிரிப்பின் உச்சத்திற்கு ஈடிணை கிடையாது. வந்தோரை எல்லாம் அள்ளி முடிக்கும் முந்தானையின் தூக்கம் வாசனையை உள்ளிழுத்து ஆசுவாசிக்கும் இன்பமதில் கரைந்து திரும்பும்வரை, அவன் உணரவில்லை அண்ட சராசரமும் அவளின் பஞ்சு பாதங்களின், அதல பாதாளத்தில் முடக்கம் கொண்டுள்ளது என்ற உண்மையை.

உண்டு உயிர்த்து தாகம் தணியும்வரை உள்ளுக்குள் அவாவித் திரியும் மோகம் தீர்ந்தபின் தெளிவதும் பின் அதுவே அடர்த்தியாய் நிறைமுட்டிக் கனப்பதும் இயல்பாகிப்போன நிலையில் இன்றும் அதே தாகத்தோடும், நிறை

கனத்து வழியும் மோகத்தோடும்தான் அவளை நாடியிருக்கிறான். ஆனால், உள்ளுக்குள் உலவித் திரியும் சில தீர்மானங்களால் மனசு குழப்பத்தில் தோய்ந்து கிடந்தது.



முண்டிப்பிதுங்கி வலுப்பெறும் எண்ணங்களை எல்லாம் கொட்டிக் கவிழ்க்க முடியாத இருதலைக் கொள்ளியாய் புகையும் அவனின் நிலை உண்மையிலே பரிதாபகரமானது. நிஜத்தின் யதார்த்தங்களைவிட கனவுலகின் கற்பனைகள்தான் சுவாரஸ்யமிக்கதாய் இருக்கிறது என்ற சமாதானத்தோடு ஒவ்வொரு தடவையும் அவளைக் கடந்து போகும் விஸ்வா அன்றும் அதே சட்டகத்துள் வந்து வீழ்ந்தான்.

"உறவு" ஒரு வாழ்க்கையாளனாய் மட்டும் தொடர்ந்து கொண்டிருந்த போதெல்லாம் ஏற்படாத தவிப்பு, பதகளிப்பு இன்று மட்டும் ஏன் என்னுள் ஒருவிதமான வேதியல் மாற்றத்தை ஏற்படுத்திப் போகிறது? விடை தேடி மனசு உழல்கிறது. என்னையும் மேவி ஒரு மெல்லிய காதல் அவளை அவளுடனான இருப்பை நிச்சயப்படுத்திக்கொள்ள பிரியப்படுவதன் ஆத்மார்த்தம் தான் என்னை தடுமாற செய்கிறதா? என்ற நிலை தளர்வுடன் அணுகியதாலோ என்னவோ அவனின் "காமரசவாதம்" பலவீனப்பட்டிருப்பதை அவளால் வெகு சீக்கிரமே புரிந்துகொள்ள முடிந்தது போலும்.

இலேசாய் இதழ் விரித்து அவள் தந்த நகைப்பு அவனுள் குற்ற உணர்வு கலந்த தாழ்வுச் சிக்கலாய் உடல் கூசி ஓடி மறைய உடல் தளர்ந்து அப்படியே மல்லாந்து கொள்கிறான் விஸ்வா. மேகலை மீதான விஸ்வாவின் ப்ரியத்திற்கு அவளின் இவ்வாறான உயர்மட்ட இங்கிதங்கள் கூடக் காரணமாக இருக்கலாம்.

சாதாரண அசைவுகளை கூட ரசனையும் கலையும் தரும் பதிவுகளாய் நோக்கும் அவனுக்கு மேகலையின் சில்மிஸங்களில் அப்படியொரு தாகம் வலிந்து வலிந்து தானே முதல்வனாய் எல்லாவற்றையும் மோகிப்பதில் அவனுக்கு உடன்பாடு கிடையாது.

என்னை கொண்டாடத் துடிக்கும் அவளின் தேடல் உணர்ச்சியின் ஆத்மார்த்தம், வெளிப்படை ஒழிவு மறைவின்றி அவளை அப்படியே வெளிப்படுத்தத் துணியும் துணிச்சல் எல்லாமே அவனின் எதிர்பார்ப்பின் சதம் தொட்ட திருப்தியைத் தந்து விட்டதாலோ என்னவோ உலகமே அவனுக்கு மேகலையாகிப் போனது.

மீண்டும் தெரு நாய்களின் கூச்சலும் அட்டகாசமும் தொடங்கப்பட்டு விட்டது. வீட்டைச்சுற்றி உலவித்திரியும் நாய்களை அதே கரிசனையோடு யன்னலினூடாகத் தரிசிக்கும் அவளின் அமைதியிலும் மறுமுறை உச்சி முகரும் அவனின் செயற்பாடுகள் அவளினுள் எந்தவிதமான அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை என்பதனை உணர்ந்து கொண்டவனாய் தன் இயலாமை யின் நாகரிகமாய் மறுபடியும் கட்டிலில் மல்லாந்து கொள்கிறான்.

மேகலையின் கரிசனையில் தோயும் நாய்களின் நிலை அவளை சுற்றி எச்சில் சுரந்து திரியும் மனித கடுவன்களில் இருந்து எவ்வளவோ மேம்பட்டிருக் கிறது என்பதை உணர்ந்தபோது விஸ்வா மிரண்டுதான் போனான். ஆனாலும் அதே இரும்பு சங்கிலியோடும் கூர்மை துய்த்த பாறகளோடும் உலவித்திரியும் தெரு நாய்களைக் கடந்து அவளை அடையும் ஒவ்வொரு சந்தாப்பமும் அவனை அச்சத்தில் ஆழ்த்திப் போவது உண்மை. தனிமை அடர்ந்த அவளின் சூழலினை சலனப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் நாய்கள் மட்டும்தான் தனக்கு விசுவாசமாய் இருப்பதாய் அவளுக்குள் ஒரு உறுதி எப்போதுமே இழையோடிப் போயிருக்கும்.

“மேகலா இந்த நாய்கள் கூட்டம் தேவைதானா, இதுகள கொண்டு நடத்த

எடுக்கிற ரிஸ்க் அநாவசியமா படலையா? இருவர் மத்தியிலும் மௌனம்.... அவளோ உடைகிறாள். "நோ விஸ்வா இந்த பறபல்லாஸ் பத்தி ஒங்களுக்கு தெரியாது! எப்பவுமே இதுகள கொஞ்சம் தள்ளி வைக்கணும். அதிகமாக எடம் கொடுத்தா மடம் பிடிக்கும். இந்த நாய்கள் நம்மோட செக்கியூரிட்டிக்கு மட்டும் வச்சிக்கலாம். விஸ்வா நீங்க ஒன்ன தெளிவாக புரிஞ்சிக்கணும். என்னோட பார்வையில உயர் ரகமான நாய்களைவிட இந்த தெருநாய்கள் எப்பவுமே பெட்டராகத்தான் படும். ஏன் தெரியுமா? நம்மோடு ஐக்கியப்படும் உயர்ரக நாய்களைவிட ஒருபடி தள்ளி நிற்கும் இந்த பறபல்லாவுக்கு தான் எசமானியின் உயர்வு புரியும்" என்று உதிர்க்கும் புன்னகை அவனுள் ஒருவிதமான அதிர்வை ஏற்படுத்தியது.

"விஸ்வா இந்த நாய்களுக்குள் ஒரு தாகம். ஓடியபடியேதான் இருக்கும். எதையுமே இலகுவாய் அடைய முடியாத போதும் அதற்கான போராட்டங்களை கைவிடாது. அது எனக்குப் பிடித்திருக்கிறது. அந்நியப்படுதல்தான் உறவைக் கொண்டு நடத்தும் துடுப்பு" என்று அவள் வெளித்தள்ளும் உஸ்ணக்காற்றும் அதன் ஆட்டத்திற்கு ஏற்றாற்போல் உணர்ந்து தாழும் முலைகளும் மீண்டும் ஒருவிதமான ஊர்தலை தள்ளி மறைந்தது.

"நீங்க நெனைக்கிற மாதிரி இவைகளை என் பிரியத்தின் வெளிப்பாடாய் பராமரிக்கிறேன் என்பதற்கில்லை. அதில் என் சுயநலமும் கூட கலந்திருக்கிறது. என். நோக்கம் என் சூழலை அச்சுறுத்தல் மிக்கதாய் காட்ட வேண்டும் என்பது தான்" என்று இயல்பு மாறாத அதே புன்னகையை உதிர்க்கும் மேகலாவின் மேம்பட்ட சிந்தனை அவனை அப்படியே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. யதார்த்த மாய் உகுக்கப்பட்டிருந்தாலும் அந்த வார்த்தைகள் விஸ்வாவை வெகுவாகப் பாதித்திருந்தது.

மனித பரிணாமத்தின் நாய்களும் கூட சாதியத்தின் கோரப்பற்களால் கடித்து குதறப்படுகிறது என்பதனை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

மேகலாவை காணும் போதெல்லாம் காலைச் சுற்றச் சுற்றி பம்மி வால் குழையும் நாய்களின் அறியாமை அவனுக்குப் பரிதாபகரமானவையாகப் பட்டது. எசமானியின் சாதி வக்கிரகங்கள் எதையுமே உள் வாங்கிக் கொள்ளாத நாய்கள் மீண்டும் மீண்டும் அவள் கைகளில் உள்ள உணவுக்காய் குதூகல மாய் தாவி துள்ளிக் குதிக்கின்றன.

மேகலா குறித்த விஸ்வாவின் மதிப்பீடுகள் நாணய மதிப்பிறக்கமாய் இப்போது குறைய தொடங்கியிருந்தது. வெறுப்பும், சினமும் உள்நுழையும் போது நமது பார்வையில் உயர்வகைப்பட்ட அநேக விடயங்கள் நகைப்பிற்கும் கேலிக்கும் உரியனவாக மாற்றப்படுவது உண்மை. அதே நிலை தான் விஸ்வாவிற்கும்.

எழுந்தமானத்தில் அவனால் அவளை உதறித் தள்ளிவிட முடியவில்லை. அன்றும் அவளின் நினைவுக் கோலத்தில் உழன்று கிடந்தவனை கோடு போட்டு சுயம் தடுத்து நிறுத்த முயன்றபோது உடல் சூடேறி சுயம் மசித்து அவளை நாட எத்தனித்த போது கண்ணாடியில் பட்டுத்தெறித்த விம்பம் ஒரு கணம் அவனை தடுத்து நிறுத்தியது. தன் கண்ணையே நம்ப முடியாமல் மீண்டும் மீண்டும் ஊர்ஜிதப்படுத்திக் கொள்கின்றான் மாற்றம் இல்லை அச்சுறுத்தும் அதே இரும்பு சங்கிலியோடு அவனின் விம்பம் அவனை பதற்றத்தில் தள்ளி மிரள செய்தது.

அருகில் கிடந்த இரும்புத் துண்டால் கண்ணாடியை தாக்கி முடிக்கிறான். எஞ்சி நின்ற கண்ணாடித் துண்டுகளிலும் அதே விம்பங்கள் தொண்டை வரைக்குமாய் கத்தி மிரண்டவன் அப்படியே சரிந்து வீழ்கிறான்.

உள்ளுக்குள் விழுந்த குமைச்சல் தீர்வாய் இல்லை. மனசு ஒரு விதமான காழ்ப்புணர்வால் ரணப்பட்டுக் கிடந்தது. அவனின் தேடலின் நோக்குகை வழிமாறி பயணித்தது. மேகலை மீதான இச்சை முழுமையாய் வழிந்தோடி யிருந்தது மனசு சீழ் வடிந்த புண்ணாய் ஒரு விதமாய் நிசப்தத்தில் உறைந்தது.

மேகலையின் மறுபக்கம் வக்கிரம் படிந்ததாய் ஒரு குறுகல் பாதையின் ஊடே தடம் பதித்திருக்கிறது என்பதை பறைசாற்றுவதாய் இன்னொரு செய்தி யும் அவனுக்காய் காத்துக் கிடந்தது. காமம் ஒசத்தியாக வீறு கொண்டதன் விளைவோ தெரியாது எடுக்கப்பட் முடிவை வெகு சுலபமாய் திடுமென அவளால் உதறித்தள்ளி வெளியேற முடிந்தது போலும்.

காமம், காதல் எனும் முலாத்தினால் அலங்கரிக்கப்பட்டதும், வேட்கை தீர்ந்த பின் மீண்டும் துளிர்விட்ட மேம்பட்ட சிந்தையும், சாதியமும் காரணங் களாய் முனைப்புமுட்டி ஒரு பறயன் அங்கேயும் பழி வாங்கப்பட்டிருப்பதை அறிந்த போது மீண்டும் இரத்தம் சூடேறிப் போனது. நிச்சயமாக சொல்கிறேன் இது காமத்திற்கான சூடேற்றம் கிடையாது.

ஒன்றின் ஈடுபாட்டிலிருந்து வெகு சுலபமாய் விடுபடுவதென்பது அவ்வளவு சுலபமன்று என்பது மேகலையின் உறவு நன்றாகவே உணர்த்திப் போனது.

அவளின் நினைவு விடுபடல்களுக்கான தீர்வாக மனசு தற்காலிகமாய் சில தீர்வுகளைத் தேடி திரிந்த நிமிடங்களில் தன்னை தானே புணரும் கையறு நிலையில் தோய்ந்த நாட்களும் கூட அவனை கடந்து சென்றியிருக்கிறது. நிறுத்தியும் நில்லாது அடம் பிடித்த நெஞ்சத்தின் தேவையாய் இச்சையின் வழிநடத்தலால் இருளைக் கிழித்து அவள் வீட்டை நோக்கி அவனின் கால்கள் நகர்கின்றன.

மனம் இட்ட வேலிகளையெல்லாம் தாண்டி சுயத்தை ஏறி மிதித்து உடல் இச்சை வீறுநடை போடுகின்றது. கும்மிருட்டு மனசு விரகதாபத்தால் அனலாய் உருகி கரைக்கிறது. இதோ மேகலையின் வீட்டை அணமித்துவிட்டான் விஸ்வா. இதயம் வேகமாய் துடிக்கிறது. மனசு வெட்கத்தில் உறைகிறது. நோன்பு மழுங்கடிக்கப்பட்டு விட்டதே என்பதை விட தொலைந்து போன சுயம் மனசை வெட்கத்தில் ஆழ்த்தியது.

அவளின் வளாகத்தினுள் இவனின் நிழல் படாந்த வேகத்தில் இதோ நாய்கள் ஆர்பரிக்கத் தொடங்கி விட்டன. சற்று நெருங்க விடாமல் துரத்தி தொலையும் நாய்கள் மீது உண்மையிலேயே இப்போது வெறுப்பு மூண்டது. நிலை அறியாத இந்த சனியன்களை என்ன செய்வது என்ற குழப்பத்தோடு மீண்டும் மீண்டும் அவளின் வளாகத்தினுள் புக முயன்றவனை சளைக்காமல் தடுத்து நிறுத்திய நாய்களின் சாமர்த்தியம் யாருக்கு வரும். உள்நுழைவுக்காக போராடி விஸ்வாவின் உடல் வியர்வையில் தெப்பமாய் நனைந்து சோர்வுற் றிருந்தது. மனசும் கூடத்தான் வலிமை இழந்து கிடந்தது.

அப்போது மீண்டும் அவளின் சூழல் நிசப்தத்தில் உறைந்தது. அந்நிசப் தத்தை கலைப்பதாய் ஒரு நாய் இன்னொன்றை புணர்வதில் காட்டிய தீவிரம் அச்சூழலில் ஒரு விதமான அரவத்தை ஏற்படுத்தி அவனையும் வெறுப்பில் ஆழ்த்தியது.

பிடிமானமாய் நின்ற நாய்களோடு இனியும் போராடி பயனில்லை என்ற சிந்தனையோடு எட்டி அவளின் வாசலில் பார்வையை வீசியவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. நான்கு சுவர்களுக்குள் அரங்கேற்றப்படும் சரி செய்யப்பட்ட தவறுகளின் அடையாளமாய் ஒரு மனித கடுவனின் உயர்ரக செருப்புகள்

அவனை பய்முறுத்திப் போனது. ஆனால் மேகலை மீதான காதல் இப்போது முழுமையாய் அவனில் இருந்து அந்நியப்பட்டுப் போயிருந்தது.

ஏதொ வாழ்க்கையின் தாற்பரியங்களை முழுமையாய் உள்வாங்கிக் கொண்ட திருப்தியுடன் எழுந்து அங்கிருந்து நகர முயன்றவனை கண்ட நாய்கள் மீண்டும் குரைக்க ஆரம்பித்தன. நேரம் நடு சாமத்தை கடந்திருக்க வேண்டும் இது மேகலையின் நித்திரைக்குரிய நேரம் நாய்களின் குரை யொலிகள் அவளின் பார்வையில் இப்போதுதான் தொல்லைக்குரியதாகப் படுகிறது.

எழுந்து வந்து "பறபல்லா" ஒன்னோட தொல்லையாய்ப் போச்சு என்று அருகில் கிடந்த தடியால் நாய்களை தாக்குகிறாள். வலி தாளாமல் நாய்கள் இடும் துயரத் தொனி அவனை ஒரு விதமான நெருடலில் ஆழ்த்த பித்தம் தெளிந்த ஞானி கணக்காய் அவனுள் ஒரு பொறி தட்டி மறைகிறது. தன் மேம்பட்ட சிந்தனையின் குரூரத்தால் மேகலை இரண்டு பற பல்லாக்களை தள்ளிவிட்டு வீட்டைச் சுற்றி மேயப்பட்டிருக்கும் இந்த பறபல்லாக்களை கொண்டு எத்தனை நாட்களுக்கு தன் இருப்பை நிச்சயப்படுத்திக் கொள்ளப்போகிறான். என்ற சிந்தனையோடு அவளின் வளாகத்தை விட்டு நீண்ட தூரம் பயணித்திருந்தான் விஸ்வா.

**சரி செய்யப்பட்ட தவறுகளை எல்லாம் கட்டிக்காக்கும் மேகலை வீட்டு நாய்கள் இடும் கூச்சல் மட்டும் தெளிவாய் அவன் காதுகளில் விழுந்த வண்ணமே இருந்தது.**

(பூபாளராகங்கள் சிறுகதைத் தொகுதி 2008)

10

# லயத்து குருவிகள்

## *Limb and leader*

சில நாட்களாகவே முட்டை பாண்டியின் அட்டகாசம் எல்லை மீறிதான் போனது.


கற்றை முடியும் கறைப்படிந்தது பற்களும் வானம் பார்த்த கண்ணுமாய் சட்டி வயிறுடன் லயத்தை ரவுண்ட் அடிக்கும் முட்டை பாண்டியின் மீதான கோபம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தது.

காலை விந்தி விந்தி தலையை ஒரு பக்கமாய் திருப்பி நடக்கும் பாண்டியை கண்டாலே குருவிகள் அலறித் துடிக்கும்.

வெட்டப்படாமல் உரமேறிப் போன அழுக்கு நகங்களும் வலிமை துய்த்த அவனின் கரங்களும் லயத்து குருவிகளுக்கு புதினமன்று. சிலமாதங்களாய் எனக்கும் லயத்து குருவிகளுக்கும் இடையிலான தொடர்பு அந்நியப்பட்டு போனதாலே என்னவோ நாளுக்கு நாள் முட்டை பாண்டியின் மீதான வெறுப்பு அதிகரித்த வண்ணமே இருந்தது.

முன்பெல்லாம் அழைத்த குரலுக்கு எம்முடன் அவாவித் திரியும் குருவிகள் இப்போது அந்நியப்பட்டு எம்முடனான உறவை விலக்கி பயனிப்பதற்கு முட்டை பாண்டியின் அகோரமும் வக்கிரமும் தான் காரணம் என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

ஏனையக் குருவிகளில் இருந்து பெரிதும் வேறுபட்ட லயத்து குருவிகள் என்றால் மனதிற்கு அப்படியொரு நெருக்கம் எம்முடனே நின்று கலந்து உற வாடும் லயத்து குருவிகளின் மீதான கரிசனையும் அக்கறையும் இயல்பாகவே என்னுள் பரவி இருந்தது.




அம்மா அரிசி புடைக்கும் போது குறுணை சேகரிப்பது தொடங்கி எஞ்சிப் போகும் சோற்றுப் பருக்கைகள் வரைக்குமாய் குருவிகள் மீதான கரிசனை தொடரும் தன்னுடைய சிறிய அலகுகளால் சோற்றுப் பருக்கைகளை கொத்தி கொரிக்கும் அழகில் லயித்து என்னை மறந்த நாட்கள் ஏராளம். பசியாறி பின்னர் கண்மணியை உருட்டி என்னை எதிர்கொள்ளும் குருவிகளின் கண்களில் தெளிவாய் மிகத் தெளிவாய் நன்றியின் தாட்பரியத்தை கண்டிருக்கிறேன்.

இப்போதெல்லாம் கண்களில் மிரட்சியும் பயமும் முட்டி என்னில் இருந்து அந்நியப்படும் லயத்து குருவிகள் குறித்த வலிகளை விட முட்டை பாண்டியின் மீதான வெறுப்புதான் அதிகமாய் பரவி இருந்தது. அன்றும் வழமைக்கு மாறாக குருவிகள் அலறித் துடிக்கும் அதே அரவம் என்னைப் பீதிக்கு உள்ளாக்கியது.

எழுந்து ஸ்தோப்பை நோக்கி விரைகிறேன் இடைவிடாமல் கத்தும்

குருவிகளின் அவலத்தொனி ஏதோ விபரீதம் நடக்கப்போவதை தெளிவாய் உணர்த்திப் போனது விபரம் தெரிந்த நாளில் இருந்து வீட்டுக் கூரையில் அடைக்கலம் புகுந்திருக்கும் லயத்து குருவிகளின் இருப்பும், இனவிருத்தியும் கேள்விக் குறியாக்கப்படுவதை என்னால் ஜீரனிக்க முடியவில்லை. ஆனால் என்னையும் மேவி அந்த விபரீதம் நடந்து முடிகிறது.

அதே விகாரம் துய்த்த முட்டைப் பாண்டியின் கரம் இதோ குருவிக் கூட்டை அண்மித்து விட்டது. குருவிகள் அலறித்துடிக்கின்றன. அள்ளி எடுக்கப்பட்ட முட்டைகளோடு தலை மறைவாகும் பாண்டியை எட்டிப் பிடிக்க முயல்கிறேன். ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தப்படி முட்டைகளை நாறும் அழுக்கு வாய்க்குள் பஷ்பமாக்கி விடுகிறான். எனக்குள் பேரதிர்ச்சி, மீண்டு வருவதற்கு சில நிமிடங்கள் தேவையாகப்பட்டது. பிறழ்வான நடத்தைக்கோலம் ஏதோ சாபமாய் பாண்டிக்கு திணிக்கப்பட்டிருக்கிறது. தவறி பிறந்ததாலோ என்னவோ சமூகம் அவனை தவறாக வழிநடத்திப் போய் இருக்கிறது போலும் குருவி முட்டைகளை ருசிப்பதற்கும் நாக்கை தட்டி ஏப்பம் தள்ளவும் சில விஷமிகள் அவனை பழக்கப் படுத்தியிருப்பது தான் கொடுமை.

குருவி முட்டைப் ப்ரியனாய் மாறிப் போனதால் வெறும் பாண்டி முட்டைப் பாண்டியாய் மாறிப் போனது தனிக்கதை அன்றொரு வெள்ளிக்கிழமை அடுப்பு மெழுகுவதற்கு தயாரான அம்மாவின் அங்கலாய்ப்பு குருவிகள் மீதானதாக இருந்தது .

“இந்தக் குருவி சனியனோட அக்கப்போறா போச்சி!

இப்புடி பேண்டு குவிச்சா எப்படி?

மொதல்ல இத ஒழிச்சி கட்டனும்” அம்மாவின் சுடுவார்த்தைகள் குருவி களுக்கு ஏதோவொரு வகையில் தீங்கிழைத்து விடும் என்பதற்காக மனம் கிடந்து அல்லாடியது.

சில வாரங்களாய் முட்டைப்பாண்டியின் அத்து மீறல்களில் இருந்து தப்பிப் பிழைத்த குருவிகள் நிம்மதியாய் உலவித்திரிவதும் சுயாதீனமாய் இரை மீட்டுவதும் மனதிற்கு இதமளித்தது. பிறழ்வான நடத்தைக் கோலமும் உடற் பலவீனமும் கொண்டிருப்பதாலோ என்னவோ அதிகமான நாட்களை முட்டைப் பாண்டி ஆஸ்பத்திரியில் கழிப்பதுதான் வழமை இவற்றிற்கெல்லாம் அப்பால்

ஒரு ஊனமும் குரூரமும் தான் ஒரு இனத்தின் தலைஎழுத்தை நிர்ணயிக்கிறது என்பதுதான் கொடுமை.

முட்டைப்பாண்டி குறித்த சலசலப்பு தோட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருந்தது.

“ஏன்டி நம்ம முட்ட பயபாண்டி பொழைக்க மாட்டான் போல திங்கிற தீனி எல்லாம் வயித்தாலயா போவுதாம் டொக்டர்மாருக்கூட கைய விரிச்சி புட்டாங்களாம் என்னாத்தான் இருந்தாலும் கவலையாத்தான் இருக்குது அவென் இல்லாம லயமே வெறிச்சோடி இல்ல கெடக்கு”

என்று நீளும் சலசலப்புக்கள் ஏதோ எனக்கு மட்டும் ஆறுதல் அளிப்பதாய் இருந்தது.

சில வாரங்களாய் குருவிக்கூடு என் கவனத்தில் இருந்து விலக்கப்பட்டிருந் தது. சரளமாய் ஸ்தோப்பில் யன்னலில் உலவித்திரியும் குருவிகளின் சுயாதீனம் ஒரு விதமான நிம்மதியை தந்தது.

அப்போதுதான் முட்டைப்பாண்டியின் மறைவுக்காய் தோட்டமே கூடி நின்று அழுது புலம்பியது என்னால் அவனுக்காய் அழ முடியவில்லை சாபவிமோஷன மாய் ஒரு இனத்தின் எழுச்சிக்கான அஸ்திவாரமாய் மட்டுமே எண்ணமுடிந்தது.

மீண்டும் ஒரு கனாக்காலம் அரும்பியது லயத்து குருவிகளின் அந்நியோன் யம், பரஸ்பரம் என்று கைநழுவிப் போன எல்லா விடயங்களும் மீண்டும் அருகில் நின்று குசலம் விசாரிக்கத் தொடங்கியது.

பாதுகாப்பற்ற தன் இருப்பு குறித்த எல்லா பீதிகளையும் குருவிகள் மறந்து போயிருந்தன நானும் லயத்து குருவிகளும் முட்டைப்பாண்டி குறித்த சாச்சை களில் இருந்து முழுமையாக அந்நியப்பட்டுப் போனோம்.

அப்போது தான் தோட்டம் தோதல் கலவரங்களிலும், கட்சி தகராறுகளிலும் மூழ்கி கிடந்தது. ஈடுபாடு இல்லாத விடயங்களில் மனம் அவ்வளவாய் உடன்படு வதில்லை நடுநிலை போக்குடன் அவதானிக்கும் ஒரு சராசரி அவதானியாய் மட்டுமே நின்றேன்.

அப்போதுதான் பொறிதட்டினாற் போல காட்போட் பெட்டியை குருவியின் இருப்பிடமாக்கி குருவிகள் வந்துப்போகும் சௌகரியங்களுடன் அமைத்துக்

கொடுத்தேன். அன்றுடன் குருவிகள் குறித்த அம்மாவின் தொண தொணப்பு முற்றிற்று பெரியதொரு நிம்மதி பெருமூச்சை வெளித்தள்ளிய போதுதான் குருவி முட்டைகளை பாண்டி பால் படுத்தும் செய்தி இடியாய் உள் இறங்கியது. சித்த சுயாதீனம் உள்ளவர்களிடம் எடுத்துக் கூறி ஒரு விடயத்தை புரிய வைப்பதே பெரும் சிரமமாக இருக்கும் போது முட்டைப்பாண்டியிடம் அதை எதிர்பார்க்க முடியாதுதானே! குழப்பத்தில் உறைகிறேன் நான் .

லயத்து குருவிகளின் முட்டைகளை தின்னும் பாண்டி பற்றி பலரும் பலவாறாக சொன்ன போதெல்லாம் நம்பமுடியாமல் தவிப்புக்கு உள்ளாகிய நான் என் தலை தப்பினால் போதும் என்றாகி ஒவ்வொரு நாளும் குருவி கூட்டை அவதானத்துக்குரியதாக மாற்றினேன்.

அலுவல்களுக்காக வீட்டில் இருந்து வெளியேறும் போதும் சரி அலுவல் தீர்ந்து வீடு நுழையும் போதும் சரி குருவிக் கூட்டை நோட்டமிட தவறியதில்லை லயத்து கூரைகளில் தன்னுடைய சௌகர்யங்களுக்கு ஏற்றவகையில் கூடுகள் அமைக்கப்பட்டிருந்தாலும் கார்ட்போட் பெட்டியில் என்னுடைய கைவண்ண மும் இணைந்து மிடுக்குடன் காணப்படும். என் வீட்டு குருவிக்கூட்டுக்கு தனி மௌசு இருப்பதாய் எனக்குள் ஒரு உணர்வு மேலோங்கி இருக்கும்.

குருவிகள் தங்களுடைய கவனத்தின் குவிப்பில் விழாதவரை குருவி முட்டைகளை தின்னும் பாண்டி ஒரு பொருட்டாக கணக்கில் கொள்ளப்பட்ப் போவதில்லை என்பதை ஒவ்வொருவரும் காட்டும் அசமந்தம் நன்றாக உணர்த்திப் போனது. அஞ்சி, அஞ்சி எத்தனை நாட்களுக்கு என்னால் குருவி முட்டைகளை பாதுகாக்க முடியும் என்றக் கேள்வி அடிக்கடி எழுந்து மறையும்.

முன்பெல்லாம் அம்மா அரிசி புடைக்கும் போது ஸ்தோப்பில் உலவித்திரி யும் லயத்து குருவிகளை எழுந்தமானத்தில் கணக்கிட்டு விட முடியாது. ஆனால் இப்போது ஓிரண்டு தலைக் காட்டுவதே அரிதாகிப் போனது. திட்டமிட்டவகை யில் ஒரு இனம் அழிக்கப்படுவதையும் அதன் வலியையும் உள்வாங்கிக் கொள்வதற்கு யாருமே தயார் இல்லாத நிலையும் என்னை இன்னுமே வலிக்கு உட்படுத்துகிறது.

“ஏன்டா நாளைக்கு தலைவர் வாறாறு இல்ல–”

“மத்த கட்சி காரனுங்க வேலைக்கி போனா எப்பிடி”

"இந்த தோட்டத்துக்காக பாடுபட்ட மனுசன் இல்ல இப்படி மனச ஒடச்சா நல்லாவா இருக்கும்"

"அட நீ வேறேண்ணே இவனுங்கதான் தலையில கொழுப்பெடுத்து ஆடுறானுங்க யாரு சொல்லி என்னா நடக்கப் போவது எல்லாத்தையும் அந்திக்கு போத்தல்லதான் சரிக்கட்டனும்" என்று வாயடைக்கும் தலைவரின் சாமர்த்தியம் ஒரு விதமான அருவருப்பை ஏற்படுத்தியது.

தோட்டம் எங்கும் கலர் கடதாசிகளும் தேர்தல் விளம்பரங்களும் சினிமா நடிகர் கணக்காய் தலைவர்களின் நிழல்படம் தாங்கிய கட்அவுட்களும் ஒரு விதமான கலகலப்பை ஏற்படுத்தியிருந்தன .

காமன் பொட்டலில் அலறித்துடித்துதுடிக்கும் எம்.ஜீ.ஆர் காலத்து சினிமாப் பாடல்கள் மக்களை ஒருவிதமான மாய உலகிற்கு இழுத்துச் சென்றுக் கொண டிருந்தது. எல்லோர் முகத்திலும் ஒரு விதமான எதிர்பார்ப்பு பரவி இருந்தது. ஏதோ தங்களுடைய வாழ்க்கையில் புதிய ஒரு ஒளிக் கீற்று வசந்தங்களை அள்ளி வீசப் போவது போல.

நான் மட்டும் தனிமையில் சேகுவேராவின் புத்தகங்களோடு போராடு கிறேன். ஏனையோரில் இருந்து அந்நியப்பட்டுப் போன உணர்வுடன் வலுக் கட்டாயமாய் மனதை கையில் உள்ள புத்தகத்தினுள் நுழைக்க முயல்கிறேன் மீண்டும், மீண்டும் அழுத்தமாய் ஒலிக்கும் அதே பாடல் அடிகள் என்னை எரிச்சலூட்டிப் போகிறது.

"நான் ஆணை இட்டால் அது நடந்து விட்டால் இந்த ஏழைகள் வேதனை படமாட்டார்"

என்னுள் பரவி இருந்த கோபத்திற்கு அநியாயமாய் கையிலிருந்தப் புத்தகம் பழியாகிப் போனது.

கட்டில் இடுக்கில் சட்டென மறைந்த புத்தக தொனியினை ஊடறுக்கும் லயத்து குருவிகளின் அதே அவலத்தொனி மீண்டும் மீண்டும் என்னை அச்சம் கொள்ள செய்தது என்னால் திடுமென ஒரு தீர்மானத்திற்கு வரமுடியவில்லை. ஆனால் முட்டைப் பாண்டியை கண்டால் அலறித் துடிக்கும் அதே அரவம் தனக்குப் பின்னர் இன்னொரு பாண்டியை உருவாக்கி விட்டிருப்பானோ

என்றெல்லாம் மனசு குழம்பிப் போனது.

முட்டைப்பாண்டியின் மறைவுக்குப் பின்னரான குருவிகளின் முதல் அலறலுக்கான காரணத்தை யூகிக்க முடியாத மனசு குருவிகளின் அலறலின் தீவிரம் உணர்ந்து வாசலை நோக்கி விரைகிறேன்.

மாலையும் கழுத்துமாய் பேண்ட், வாத்தியங்களுடன் தொண்டர்கள் புடை சூழ எங்கள் லயத்தை கடக்கும் தலைவரைக் கண்ட பீதியில்தான் குருவிகள் அலறித்துடிக்கின்றன என்ற உண்மையை உணர்ந்த மனசு மெதுவாய் ஆசுவாசப்படுகிறது.

மீண்டும் தலைவர், அவரைச் சுற்றிய கூட்டங்களையும் மேய்ந்து விட்டு திரும்பும் கண்கள் கூடுகளில் இருந்தபடியே தன்னுடைய சிறிய அலகினை அங்கும் இங்குமாய் திருப்பி திருப்பி தரிசனம் தரும் குருவிகளில் விழுகின்றன.

**வழமைக்கு மாறாக லயத்து குருவிகளின் கண்களில் ஒரு ஒளிக்கீற்று பிரகாசிப்பது தெளிவாய் மிகத் தெளிவாய் எனக்கு மட்டும் புலப்படுகின்றது.**

( அகிலம் ஆக்க இலக்கியப் போட்டியில் முதற்பரிசு பெற்ற சிறுகதை)

11

# காவி நிறத்தினிலே

## *Stain and Stable*

மெல்லிய காற்றின் பிசுபிசுப்பில் அரசமரம் இதமாய் ஒலி எழுப்பி மனம் வருடியது

எப்போதுமே ஒரு விதமான அமைதியில் திளைக்கும் அரசமரம் அச் சூழலின் தனித்துவத்தினை எடுத்துரைக்கும் குறிப்பாய் மஞ்சட் குருவிகளின் நேர்த்திமிகு இருப்பிடமாய் இருப்பதால் அந்த இடத்தின் மௌசே தனித்துவ மானது.

உயர்வுக்குரியதும் வணக்கத்துக்குரியதுமாய் இருப்பதாலோ என்னவோ அரசமரச் சூழல் எனக்கு பல போதனைகளை கற்றுத்தந்தது போலும்.

கூர்மை அவதானம் சில நேரங்களில் சில குடைச்சல்களை உள் நிரப்பி போகும். உள்ளுக்குள் விழுந்த குமைச்சல் தெளியும் வரை பசி ஏது? உறக்கம் ஏது?

சில நாட்களாகவே மனசு ஒரு விதமான அருவருப்பில் திளைத்திருந்தது. மனித நடத்தையின் முரண்பாட்டின் பிறழ்வு குறித்த பரிணாமம் வானம் முட்டும் வரை வளர தொடங்கி விட்ட நிலை கண்டு உள் விழுந்த அருவருப்பு அகல்வதாய் இல்லை.

உறவுகளை துறந்து, வலிகளை வாங்கிக்கொண்ட மஞ்சட் குருவிகளின்

குழுமத்தில் இன்னுமோர் பலியாடாய் ஒரு பாலகுருவி வந்திணைந்தது ஏதோ கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற் போல் மிரண்டு வெகுண்டு அரைகுறை விருப்புடன் புதிய வாழ்க்கையில் புக முனைகிறது.

சுயாதீனமாய் சுற்றித் திரிந்த கனாகாலங்களில் லயிக்கும் மனசு வரையறுக்கப்பட்ட அரசமரச் சூழலை அச்சுறுத்தல் மிகுந்த நெருக்கீடு இழையோடிய சிறைவாசமாய் தான் ஆரம்பத்தில் உள்வாங்கியது.

இயற்கையின் இம்மி அசைவிலும் இன்பமுண்டு என்று மூழ்கி திளைத்த மனசு திடுமென எல்லாம் துறந்து அரசமர சட்டகத்துள் விழ மறுத்தது.

வலுக்கட்டாயமாய் உணர்வுகளை மசித்து பயணிக்கும் மோட்ச பயணத் தில் இணைய முடியா வேதனை அப்படியே முழுமையாய் சுயாதீனங்களை காவுக் கொண்ட தருணங்களுக்காய் மனசு இப்போது அழுகிறது.

காலங்காலமாய் அரசமர கிளைகளில் தாவித்திரியும் மூப்பு குருவிகளுக்கு ஏனைய குருவிகளை விட ஒரு விதமான மிடுக்கிருக்கும் ஏதோ அரசமரமும் அது சார்ந்த கலை கலாசாரமும், ஆகமங்களும் அடுத்த பரம்பரைக்கு எம் ஊடாகவே கடத்தப்படுகிறது. என்ற மிடுக்கு அவர்களிடையே இழையோடி இருந்தன.


மூப்பு குருவிகளின் பணிவிடைகளுக்கு புதிய வரவுகளான பால குருவிகள் தான் புத்தூக்கம் அளிக்க வேண்டும் என்ற நடைமுறையின் ஆத்துமமாய் சேவகம் செய்வதற்காய் உள் நுழைகிறது பாலகுருவி.

எண்ணெய் இட்டு தொடை நோவு தீரும்வரை மேலிருந்து கீழ் நோக்கி இளைய கரங்கள் சேவகம் புரிகின்றன மகன் தந்தைக்கு ஆற்றும் பணி என ஆனால் மூப்பு குருவியின் கண்களுக்குள் ஆயிரமாயிரம் அழுகிப்புகுந்த ஆஹாரரங்களில் ப்ரியம் கொள்ளும் கழுகுகளின் சிறகடிப்புகள் நீள்கிறது. மூப்பின் மிடுக்கிற்கு பங்கம் வந்தால் உயிர் மிஞ்சுமா?

ஊர்ஜிதப்படுத்தல்கள் தொடர்கின்றன. சட்டகமாய் சந்தர்ப்பம் பொருந்தி வர பால குருவியை வேறொரு உலகிற்கு அழைத்துப் பறக்கிறது மூப்பு குரவி.

உறவுகள் தொலைந்த நெருக்கீடும் பால்ய கனவுகளின் தேக்கங்களும் முரணப்பட்டதாயினும் ஏதோவொரு வகையில் ஆறுதல் அளிப்பதாய் தோன்றி

யது பால குருவிக்கு, இருள் விலகி ஒளி புலர்ந்து சலனமின்றி தொடர்கின்றன பாலகுருவிகளுக்கான போதனைகள்.



போதனையில் தோயாத மனசு எல்லை மீறி உழன்று திரும்பிய போது போதனை அர்த்தமற்றதாகி இருந்தது. ஏதோ உதறி தொலைந்த உறவுகளின் இழப்புகளுக்கு ஒத்தடம் இடுவதாய் அரசமர சூழலின் இரவுகள் பால குருவிக்கு இன்பமளிப்பதாய் இருந்தது.

மனசும் உடலும் மூப்பு குருவிகளின் சல்லாப சதிராட்டங்களுக்கு நன்றாகவே பழகிப் போயிருந்தன.

நிலவொளியின் பிரகாசத்தில் அரசமரம் இன்னுமே வனப்புடன் காட்சி யளிப்பதாய் ஓர் உணர்வு போதனையில் லயிக்காத மனசு ஆள் அரவமற்று சனம் தொலையும் தனிமைக்காக மனமிரங்கி கிடக்கிறது.

அதே சாந்தம் வழியும் முகமதில் மலர்ச்சி காட்டி பாலகுருவியை

பெருவிருப்பில் அழைகிறது மூப்புக் குருவி மார்பை தளர்த்தி தன் குழந்தைக்கு பாலூட்டும் அன்னையை கண்ட மலர்ச்சி பாலகுருவி முகத்தில்.

வாழ்க்கையை தொலைத்து விட்டதாய் அடையாளம் காட்டும் மூப்பு குருவிகள் யாருமே அறியாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக் கின்றனர் என்ற ரகசியம் பாலகுருவிக்கு அம்பலமானபோது மனசு பீதியில் உறைந்தாலும் எல்லை கடந்து ஏதோவொரு வகையில் ஆத்மத்தை திருப்தியில் தோய்ப்பதாய் பட்டது.

காலம் அந்நியப்பட்டு காலாவதியாகிப் போகவே மூப்பு குருவியின் உடல் தளர்ந்து சோர்வுற்றது.

பால குருவியாய் உள்நுழைந்து எல்லா பக்கங்களிலும் இசைந்து உருகி ஒத்தாசை நல்கியதால் மூப்பு குருவியின் பார்வையில் அடுத்த பரம்பரைக்கு அரசமரமும் அது சார்ந்த ஆகமமும் பாலகுருவியால் மட்டுமே கடத்தப்படும் என்ற நம்பிக்கை வழு பெற்றிருந்தது.

அரசமரச் சூழலை அமைதியின் வழியில் நடாத்திச் செல்ல பாலகுருவி ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மோட்சப் பயணத்தில் இணைந்துக் கொண்டது மூப்பக் குருவி.

தூய்மை நிறத்தில் அரசமர சூழல் அலங்கரிக்கப்பட்டது. ஆங்காங்கே தொங்க விடப்பட்டிருந்த வெள்ளைக் கொடிகளும் இரங்கல் செய்தியும் மூப்புக் குருவியின் பெருமைகள் பேசின.

ஒரு சமூகத்தை கட்டியெழுப் போகும் ஒளி பாலக்குருவியின் சமுகத்தில் துளியும் இல்லை. மனசு எதையோ எதிர்பார்த்துக் கிடந்தது. வெறுமை அடர்ந்த பழைய ஞாபகங்கள் மட்டும் கையிருப்புக்களாய் எஞ்சின.

கடந்து வந்த பாதைகளை திரும்பி பார்த்த மனசு வாழ்க்கை குறித்து எடுத்த முடிவுகளுக்காய் பின்வாங்கி நின்றது. ஒளி தொலைந்து இருள் விரியும் தருணங்கள் திட்டமிட்டு ரணங்களை பதிய மிடுவதாய் உள்ளுக்குள் ஓடும் குமைச்சல் தன் நிலையை வீழ்த்தி ஏளனப்படுத்தும் தருணம் என்று மனசு அமைதியை காவு கொடுத்திருந்தது.

மோகம் சிதையா மனசின் வீரியம் பணியின் லயிப்பு குறித்த பல்வேறு

கேள்விகளை தொகுத்துக் கொண்டிருக்கிறது.

எதிலுமே ஈடுபாடு காட்டாத மனசு பாலகுருவிகளுக்கான ஆகம போதனைகளை உப்புசப்பின்றி ஒப்புவித்துக் கொண்டிருந்தது. ஊதுவர்த்தி மணமும் சுடர் அகலும விளக்குகளும் எதையோ எடுத்துரைப்பதற்காக அல்லாடுவது புரியாமல் போதனைகள் தீர்ந்த பெருமிதத்தில் தன் வளவு நோக்கி நகர முயல்கிறது மூப்புக் குருவி.

அப்போது அதே மிரட்சி ததும்பும் கண்ணும் இளைமையின் தள தளப்பில் ஒளி வீசும் தேக அமைப்பும் கொண்ட பாலகுருவி அரசமர சூழலின் நடைமுறை புரியாமல் குழப்பத்தில் உறைந்து நிற்பதை கண்ட மூப்பு குருவி கண்களில் ஆயிரம் சுடர்கள்.

**அதுவரையுமே அரசமரமும் அது குறித்த ஆகமங்களும் அடுத்த பரம்பரைக்கு கடத்துவது தொடர்பாக சிந்திக்காத மூப்பு குருவி அடுத்த பரம்பரைக்கு சேவகம் செய்வதற்காக பாலகுருவியை அழைத்து புதியதாரு உலகை நோக்கி பறந்தது.**

(தாயகம் 2009)

12

# தவளைகள் உலகம்

## *Mental Values*

குளம் முழுமையாய் நிரம்பியிருந்தது.

மரங்களும் மூங்கில்களும் அடர்ந்திதிருக்கும் குளத்தின் அழகிற்கு நிகரென்பது கிடையாது. குளம் பற்றிப் பலரும் பலவாறாக கதையாடுவது வழமையாயினும் குளத்தின் வழி கீழிறங்கும் பீலிதான் உழைப்பாளிகளின் உடல் அழுக்கைப் போக்கும் புனித கங்கை.

எப்பொழுதுமே ஓயாது சலனப்பட்டுக்கிடக்கும் தெப்பக்குளப் பீலி அதிசயமாய் அன்று வெறிச்சோறிக் கிடந்தது.

குளம் அலைகளின் ஊடே மெல்லிய காற்றைப் படர்த்தியது.

கருங்கல்லினூடே கீழிறங்கும் நீர் சலசலத்தபடி கொட்டிக்கொண்டிருந்தது.

சில்லென்று உடல் நனைக்கும் குளத்து நீர் ஊட்டும் தெம்பிற்கு அளவென்பது கிடையாது. பாறை வழி கீழிறங்கி பீலியின் சலசலப்பையும் மேவி தவளைகள் இடும் கூச்சல் எதையோ சொல்ல முனைவதாய் தோன்றியது.

டுர் டுர் டுர்.....

டுர் டுர் டுர்.....

என்ற அரவம் பீலியை நிறைத்தது.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் என் அவதானத்தில் வந்துவிழும் குளம் பல பாடங்களைக் கற்றுத் தந்திருப்பது உண்மை. அதனால் தானோ என்னவோ தவளைகளின் நடத்தைக் கோலங்கள் அத்துப்படியாயிற்றுப்போலும்.

ஆரம்ப நாட்களில் வெறுமனே எரிச்சலை ஏற்படுத்திய தவளைக் கூச்சல்கள் நாளடைவில் புலப்படத் தொடங்கியதும் புதிய உலகமதை முன்னிறுத்தியதை சொல்லியாக வேண்டும்.

இப்படித் தான் ஒரு நாள் யாருமற்ற தனிமையில் அமைதிக்காக குளத்தருகில் அமர்ந்திருந்த போது மெது மெதுவாய் தவளைகள் பாஷை புரிபடத் தொடங்கிற்று.

ஆரம்ப நாட்களில் இது குறித்து எனக்குள் எழுந்த குழப்பங்களுக்கு அளவில்லை. நாளடைவில் தவளைகள் பாஷை மீதான தேடல் தான் எனக்குள் புலப்படாத பல நிதர்சனங்களை தேடலுக்குட்படுத்தியது.

ஆரம்ப நாட்களில் ஆங்காங்கே தலைகாட்டிய தவளைகள் குறகிய காலத்தில் குளம் முழுவதுமாய் பரவியதெப்படி என்று அதிர்ந்து போனேன்.


அது மட்டுமல்ல தவளைகளின் இத்துரித பெருக்கம் எனக்குள் படர்த்திய பீதிக்கும் அளவில்லை.

சுதாகரித்துக்கொண்டு செவிகளைக் கூர்மையாக்கி அவதானத்தை தவளைகள் சம்பாசனையில் கிடத்தினேன். கண்களை இறுக மூடிக்கொள்ளும் பூனைகள் பூலோகம் இருண்டுவிட்டதாக ஒரு மாயைக்குள் தொலைவதைக் காட்டிலும் தவளைகள் உலகம் பாழ்பட்டிருப்பதை அன்று தான் அறிந்தேன்.

குளம் முழுமையாய் தன் கட்டுப்பாட்டுக்குள் கிடப்பதாய் ஒரு கிழட்டுத் தவளை மார்தட்டி கூச்சலிடுவதும் ஏற்க மறுத்து இன்னொரு தவளை சுய புராணம் பாடுவதுமாய் நீளும் சம்பாசனை புதிய பல முடிச்சிகளை அவிழ்த்து விடும் வகையில் அமைந்திருந்தது என்னவோ உண்மைதான் ஆனால் சம்பாசனை ஒரு விதமாய் குமட்டல் உணர்வை ஏற்படுத்தியதும் உண்மையே.

நாளுக்கு நாள் குளம் தம்வசமாகிக் கொண்டிருப்பதாக பிதற்றும் கிழத் தவளைகளின் வார்'த்தைகளின் வெற்றியின் களிப்பைவிட துவேஷத்தின் நெடி அதிகமாய் கலந்திருந்தது.

இட ரீதியாக தன் பரம்பலை விஸ்தாரப்படுத்தி விட்டால் எல்லாம் தம்வசமாகிவிடும் என்ற தவளைகளின் முட்டாள் தனத்தை வெறுமனே நகைப்புக்குரிய விடயமாக மட்டும் கொள்ள முடியவில்லை. அதன் பின் புலத்தில் மறைந்திருக்கும் இராஜதந்திரங்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டியிருந்தது.



சொரசொரப்புடன் விகாரப்பட்டிருக்கும் செந்நிற உடலமைப்பைக் கொண்ட கிழத் தவளைகள் ஓயாமல் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தன. அப்புறுபுறுப்புகள் கூட தன் இனத்தின் எழுச்சியை மட்டும் கவனத்தில் கொண்டிருந்தன.

இது இவ்வாறிருக்க தவளைகள் சம்பாசனையை முழுமையாய் உள்வாங் கிக் கொள்வதற்கு முன்னமே சில வாண்டுகள் வந்து தொப்பெனக் குளத்தில் குதித்து ஏற்படுத்திய சலனத்தால் தவளைகளின் சம்பாசனை முறிந்தது.

சில நாட்களாகவே என் அவதானத்திலிருந்து தவளைகள் தப்பியிருந்தன. அப்போதெல்லாம் என் தேடலுக்கு தடைவிதித்த வாண்டுப் பசங்களை உள்ளுக் குள் திட்டுவேன்.

உள்ளுக்குள் வலுத்த குடைச்சல் தவளைகள் மொழி குறித்த எண்ணப் பாடுகளை முடுக்கிவிட்டது. அதனால் தவளைகள் மொழி மீதான ஆர்வம்

நாளுக்கு நாள் முட்டி முனைவு பெற்றது.

அன்று முதல் குளம் என் வாசஸ்தலமாயிற்று. அதனால் தான் குளம் குறித்த அசைவுகள் எல்லாம் அத்துப்படியாயிற்று என்று அடிக்கடி எண்ணிக் கொள்வேன்.

அன்று வழமைக்கு மாறாக வெயில் சுட்டெரித்தது. அடர்ந்து உயர்ந் திருக்கும் மரங்களுக்கிடையில் சௌகரியமாய் அமர்ந்ததாலோ என்னவோ உடல் களைப்புறவில்லை போலும்.

எப்போதாவது என்னுள் அரும்பும் நப்பாசையில்' மீன்களுக்காய் தூண்டில் இடுவதுமுண்டு. ஆனால் இப்போதெல்லாம் குளப் பகுதியில் நேரத்தைக் கழிப்பதற்காக தூண்டில் இடுவதே வழமையாகிப் போனது. மீன் பிடிப்பது என் நோக்கமல்ல என்பதில் தெளிவாக இருந்தேன்.

இப்படித் தான் ஒருநாள் மீனுக்காக இடப்பட்டிருந்த தூண்டிலில் ஒரு தவளை சிக்கியிருந்தது எதிர்பாராத நேரத்தில் இழுத்து எடுக்கப்பட்டதால் ஊக்குபின்னின் முனை தவளையின் வாயை ஆழமாய் பதம் பார்த்திருந்தது. ஒரு கணம் துடிதுடித்துப்போன நான் மிக பவ்வியமாய் தவளையை குளத்தில் விட்டபோது நையாண்டியுடன் இன்னொரு தவளையிடம் சம்பாஷித்துக் கொண்ட முறையைக் கொண்டுதான் தவளைகள் குறித்த மதிப்பீடுகளை துல்லியமாய் அளவிட்டேன்.

தன் இயலாமைக்கு கூட வெற்றிக் கிரீடம் சூட்டும் தவளைகள் உலகத் திலிருந்து பயணிக்க வேண்டிய தூரத்தை அன்றுதான் முழுமையாய் உணர்ந்தேன்.

சர்வ வல்லமையும் பொருந்திய உலகம் குளத்துள் முடக்கம் கொண்டுள்ள தால் தவளைகள் இடத்தில் பரவியிருக்கும் அறியாமைக்காக அழுவதா அல்லது இன்னொரு நீண்ட பரம்பரைக்கும் இந்நஞ்சூட்டல் தொடரப்போவதை எண்ணி வருத்தமுறுவதா என்ற குழப்பங்களோடு இருந்தேன்.

அப்போதெல்லாம் தவளைகளின் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது. ஆங்காங்கே தலைகாட்டிய தவளைகள் குளம் முழுவதுமாய் பரவத் தொடங்கியிருந்தது. மிக சாதாரணமாய் தவளைகள் உலகம் வெகு பூதாகரமாய்

மாறத் தொடங்கியிருந்தது.

அன்றுதான் முதன் முதலாய் தவளைகளின் நடத்தைகள் கண்டு மிரண்டேன்.

முன்பெல்லாம் விடுமுறை நாட்களில் பரபரப்பாகிவிடும் குளம் ஏதேதோ அடையாளப்படுத்த முடியாத தவளை இனங்களால் சோபை இழந்ததென்னவோ உண்மைதான். சின்ன வாண்டுகளும் இளசுகளும் அவ்வளவாய் குளத்தில் குளிப்பதற்குக் கூட வருவதில்லை.

அழகும் வனப்பும் நிறைந்த குளம் அருவருப்புக்குரிய இடமாக மாறிக் கொண்டிப்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. உள்ளுக்குள் விழுந்திருக்கும் எண்ணப்பாடுகளை எவரிடமாவது பகிர்ந்து கொண்டால் கொஞ்சம் தெளிவடையலாம் போலிருந்தது.

தவளைகள் உலகம் வெகு வேகமாய் இவ்வுலகை ஆக்கிரமித்து வருவதை பலரிடம் எடுத்துச் சொன்னேன். கதை விடுவதாகப் பலர் என்னை அந்நியப்படுத்தினர்.

குளம் முழுமையாய் பாசியால் மூடப்பட்டிருந்தது.

மனித பாவனைக்குதவாத பிரதேசமாக குளம் மாறிக்கொண்டிருந்தது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்று தெப்பக்குளப் பீலிக்குச் சென்றிருந்தேன். முன்பெல்லாம் உடலில் பட்டவுடன் தெம்பைப் படர்த்தும் குளத்து நீர் அத்தகுதியை இழந்திருப்பதாகத் தோன்றியது. குளத்து நீர் உடலில் பட்டதும் வழமைக்கு மாறாக உடல் நமநமத்தது. ஒருவிதமான துர்வாடையும் பரவியிருந்தது.

இலேசாய் இருள் பரவத் தொடங்கியிருந்ததாலோ என்னவோ தவளைகள் இடும் கூச்சல் இன்னும் என்னுள் பீதியைப் படர்த்தியது. வழமைக்கு மாறாக முட்டிமோதும் எண்ணங்கள் குளம் குறித்த அச்சங்களை என்னுள் பதியமிட்டது. நாளுக்கு நாள் குளம் எம்மில் இருந்து அந்நியப்படுவதை உணர்ந்தாலும் தவளைகளிடமிருந்து மீட்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்காக வருந்துகிறது.

அவ்வப்போது அழுக்கு நீக்கத்திற்காக குளத்தை வந்தடையும் மக்களால்

குளம் கைவிடப்பட்டு கவனிப்பாரற்றுப் போயிருந்தது.

ஒருவாறு குளத்தை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு என்னால் இயன்ற முயற்சிகளை எடுத்தேன். அன்றைய விடியல் பசுமை அடர்ந்த பழைய குளத்தை பரிசளிக்கும் என்று திடமாக நம்பினேன்.

அன்று ஒரு பௌர்ணமி நாள் இலேசாய் தூறல் விழுந்துகொண்டிருந்தது. அதே பழைய உற்சாகத்துடன் திட்டமிட்டபடி குள சுத்திகரிப்புக்காக எல்லோரையும் ஒன்றுதிரட்டிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் அத்துர் செய்தி காதுக் கெட்டியது. தோட்டம் குளத்தை நோக்கித் திரண்டிருந்தது.

கூட்டத்தை விலக்கி முண்டியடித்துக்கொண்டு முன்னோக்கி நகர்கிறேன். குளத்தில் மிதந்து கொண்டிருக்கும் பிணத்தின் ஒரு பகுதியை பாசி மூடியிருந்தது.

அப்போது என்னுள் பரவிய அதிர்ச்சியை வார்த்தைகளில் சொல்லிவிட முடியாது. அங்கேயும் சந்தர்ப்பம் தவளைகளுக்கு சாதகமாய் அமைந்துவிட்ட தருணத்திற்காக மனசு வருந்தியது. இவற்றையெல்லாம் விட அங்கு மொழியப்பட்ட வார்'த்தைகள் அதிகமாய் என்னை சிதைத்தது.

"கொஞ்செம் காலமாவே கொளத்த பூதம் காத்திருந்திச்சு அதுதான் இப்பிடி ஆள இழுக்குது. இத்தன காலமா எல்லாருந்தானே குளிச்சோம். இப்பிடியா ஆள இழுத்திச்சு. இனிமேல யாரும் கொளத்துப் பக்கம் போகக்கூடாது" என்று திடுமென எடுக்கப்பட்ட தீர்மானம் வெகுவாய் என்னைப் பாதித்தது.

மரங்கள் அடர்ந்த தெப்பக்குளச் சூழல் பாழடைந்து காட்டுப்பகுதியாய் மாறிக்கொண்டிருந்தது.

இப்போதெல்லாம் நண்டு: பிடிப்பதாக இருந்தால் மட்டும் குளத்திற்குச் செல்லலாம் என்ற நிலை உருவாகியிருந்தது. யாரும் எதிர்பாராத நேரத்தில் அப்பா காய்ச்சலில் விழுந்த போது நண்டு பிடிப்பதைக் காரணம் காட்டி குளத்திற்குச் சென்றிருந்தேன். எந்த மருந்தாலும் குணப்படாத காய்ச்சலும் தலைவலியும் நண்டு இரசத்தில் குணப்பட்டுவிடும் என்பது அப்பாவின் நம்பிக்கை.

இப்போது மட்டுமல்ல நண்டுகள் எப்போதுமே தவளைகள் அராஜகத்

திலிருந்து தப்புவதற்காக குளத்தின் மத்தியிலிருந்து விலகி குளத்தின் வடபகுதி யில் தனித்திருப்பதை நான் அறிவேன். ஆனால் காலம் எல்லாவற்றையும் மாற்றியிருந்தது.

தன் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நண்டுகள் எங்கும் பரவியிருந்தன.

தவளைகள் ஊற்றுப் பிரதேசங்களில் தன் இருப்பை நிலைநிறுத்த முயன் றாலும் நண்டுகள் விடுவதில்லை. நான் நேராக ஊற்றுப்பகுதியை சென்றடைந் தேன். அங்கும் ஓரிரு தவளைகள் தலைகாட்டத் தொடங்கியிருப்பதை அறிந் தேன். ஆனால் குளத்தின் மத்தியில் வாழும் தவளைகளிலிருந்து ஊற்றுப் பகுதி யில் வாழும் தவளைகள் பெரிதும் மாறுபட்டிருந்தன.

ஆங்காங்கே தலைகாட்டினாலும் குளத்தின் வடபகுதியும் தம்வசமாகி விட்டதாய் மார்தட்டிக்கொள்ளும் தவளைகளின் கோமாளித்தனத்தை என்ன வென்பது.

நண்டுகளுடன் திரும்பிய போது எதிர்பாராத விதமாய் சேற்றில் அகப்பட நேர்ந்தது. சேற்றில் புதையுண்ட மறுகணமே தவளைகள் என்னை ஆக்கிர மித்த விதம் தவளைகளின் எதிர்பார்ப்பை நன்கு பறைசாற்றியது.

மெதுமெதுவாய் சேறு என்னை அமிழ்த்திக் கொண்டிருந்தது. அதுவரை யும் என்னுள் படராத பீதி என்னுள் படரந்தது.

தவளைகளின் படையெடுப்பு தொடரந்த வண்ணமிருந்தது.

கண்கள் மெது மெதுவாய் இருண்டு கொண்டன.

உடல் ஒருவிதமாய் வெலவெலத்துப் போனது. கழுத்து வரைக்குமாய் சேறு பரவியிருந்ததை ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட தவளைகள் முழுமையாய் என்னை ஆக்கிரமித்தன.

சேற்றுக்குள் அமிழ்ந்துபோன வலியை விட வீழ்ந்தவரை வீழ்த்துவதில் தவளைகள் காட்டும் விருப்புக் கண்டு அதிர்ந்தேன்.

கால்களை முண்டியடித்துக் கொண்டு வெளியேறும் முயற்சி பலிதமான தால் சேற்றுக்குள் இறுக்கப்பட்ட கால்கள் முயற்சிகளை வெளிநடப்புச் செய்தது.

உடல் தளர்ந்த தருணத்தில் சேறு நாசி வரை பரவியிருந்தது.

மூச்சு முட்டுகிறது.

**தவளைகள் உலகமதில் வசமாய் சிக்கிவிட்ட கொடுமையை விட என் மறைவை தனக்கு சாதகமாய் பயன்படுத்தி பரப்பப்போகும் செய்திக்கு அஞ்சியபடி விறைத்துப் போகிறேன்.**

**உலகம் தவளைகள் வசமாகும் வலி மரணத்தின் வலியை விட கொடுமையானது என்பதை அப்போது உணர்ந்தேன்.**

13

# பச்ச பங்களா

## *Green House Effect*

மரங்களடர்ந்த பங்களா சூழல் நிசப்தத்தில் உறைந்திருந்தது.

பாடசாலை விடுமுறை நாட்களில் அப்பாவோடு பங்களாவுக்கு சென்று விடுவேன். பங்களாவைச் சுற்றி வளர்ந்து சடைத்திருக்கும் கொய்யாமரங் களை அலசி ஆராய்வதுதான் அப்போதைய ஆர்வமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் காலையில் வெகு கம்பீரமாய் அப்பா அழைக்காத போதும் கிளம்பி விடுவேன். சில நேரங்களில் அப்பாவுக்கு ஒத்தாசையாக வேலைகளையும் செய்துக் கொடுப்பதுண்டு.

பரம்பரை பரம்பரையாக பங்களாவில் அப்புவாக பணிபுரியும் அப்பாவை, “அப்பு ஆறுமுகம்” என்றுதான் எல்லோரும் அடையாளப்படுத்துவார்கள். ஒவ்வொரு நாளின் விடியலும் தொரைக்கும் தொரசாணிக்கும் அப்பாவின் தலையை காணும் வரை நிம்மதியாக விடிவதில்லை. காலையில் தேநீர் தொடங்கி இரவுச் சாப்பாடு வரை சிட்டாய் பறந்து சமைத்துப் போட்டாலும் அந்தியில் விடைப் பெற்று வீடு திரும்பும் போது தொரசாணியின் முகத்தில் மலர்ச்சியிருக்காது “ஆறுமுகம் காலம்பர வெள்ளனே வரவேணும் மாத்தியா நாளைக்கு பெரட்டு போவோனும்” “என்ன நான் சொல்லுறது கேக்குதா” என்று அப்பாவுக்குரிய அடுத்த நாளையும் அதிகாரத்தோடு வடிவமைத்து விடுவார் தொரசாணி.

அப்போதெல்லாம் நான்காய் மடிந்து ஒப்புதல் அளிக்கும் அப்பாவின் பணிவு அதிகமாய் என்னை எரிச்சலூட்டும்.

முன்பெல்லாம் பங்களாவுக்கு வந்துப் போகும் தருணங்களில் குரைத்து ஆர்பரிக்கும் நாய்கள் சமகாலத்தில் என்னைக் கண்டதும் பம்மி வால் குழையத் தொடங்கியிருந்தது சற்று ஆறுதல் அளிப்பதாய் இருந்தது ஆனாலும் நோனா வைக் கண்டால் உள்ளுக்குள் அடரும் பதற்றங்களில் மட்டும் மாற்றம் வந்து சேரவில்லை.



பங்களாவில் இருந்து கீழிறங்கும் நெத்திக் காண் வழியாக கருத்த ரோட்டுக்கு சுலபமாய் வந்து விடலாம் என்று அப்பா கட்டாயப்படுத்தும்

போதெல்லாம் மறுப்பேச்சின்றி அவரை பின்தொடர்ந்து விடுவேன் அதனால் பன்றிகள் மேயும் நெத்திக்காணில் உள்ள அட்டைகளுக்கு தினம் தினம் நானும் அப்பாவும் உற்சாகப்பானம் ஊட்டிக்கொண்டிருப்பதை தவிர்க்க முடியவில்லை

மழை காலம் என்றால் சொல்லவே வேண்டாம் அட்டைகளின் ஆக்கிரமிப் புகள் சொல்ல முடியாது நெத்திக்காணில் இறங்குவதற்கு முன்னமே உப்பு பொட்டலத்தை தொடைவரைக்கும் பூசி மெழுகும் அப்பாவின் கரிசனை யில் எப்போதும் குறைவிருக்காது. ஒரு நாள் இப்படித்தான் என் குண்டியில் கடித்த அட்டை உதிரத்தை வெகுவாய் கக்கியதால் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் வழுத்தது முரன்பாடு

அன்றொரு மழைநாள் பங்களாவில் இருந்து நானும் அப்பாவும் அரக்க பரக்க வந்து சேர்வதற்கு ஏழு மணியாகிவிட்டது விரல் இடுக்குகளில் பதுங்கி யிருந்த அட்டைகளை நானும் அப்பாவுமாக சேர்ந்து வதம் செய்துக் கொண் டிருந்தோம் அதன் பின்னர்தான் பார்க்கிறேன் வாசலில் கருப்பந்தேயிலை கொழுந்துகள் செருகப்பட்டிருந்தன. கடைக்குட்டி சகிலா ஆளாகியிருக்கிறாள் என்பதன் அடையாளம் அது. ஒரே காம்பராவில் அம்மா வெகு சாமர்த்தியமாய் அவளுக்கான மறைவிடத்தை அமைத்திருந்த முறை என்னை வியப்பில் ஆழ்த்தியது.

அம்மாவின் கந்தல் புடவைகளால் மறைக்கப்பட்டிருந்த அறைக்குள் நாணத்தோடு அமர்ந்திருந்தாள் சகிலா. எட்டிப் பார்க்கிறேன் அன்றலர்ந்த பொலிவுடன் ரதியாய் கிடந்தாள்.

சடங்கு சம்பிரதாயங்களுக்கு பின் ஊர் அடங்கி போனது அம்மா மெதுவாய் தன் ஆதங்கத்தை கொட்டத் தொடங்கினாள். “ஏங்க நம்ம கண்டாக்கையா கிட்ட கேட்டு கேட்டு எனக்கும் சீயினு போச்சி நீங்க ஒரு எட்டு போயி கேட்டாத்தான் வேல நடக்கும் நாளைக்கு புள்ளைக்கு தேவ வச்சா நாலு பேரு வரணும் போவணும் வீடு வசதி பத்தலணு கடுதாசி குடுத்து மூனு மாசெம் ஆச்சி அதுனால நாளைக்கு வேலய கெடுத்து சரி போயி கேளுங்க” என்று முடிக்கும் முன்னமே “அட இவ எவடி கூறுகெட்டத் தனமா பேசுறா தோட்டத்துல உள்ள தலவர் பயலுக எங்கடா என்னக் கொண்டு சிக்கலாமுனு பாத்துக்கிட்டு

இருக்கானுங்க போன மொற வாத்சூமு கட்ட தளம் வெட்டிபுட்டு மூனு மாசம் வேல வெட்டியில்லாம ரோட்டளந்தத மறந்திட்டியா நாளைக்கு வேலய கெடுத்தா அப்பொறம் நொட்டிக்கிட்டு வீட்டுலேயே ஒக்காந்துக்க வேண்டியதுதான் காலை யில இருந்து மாடா ஒழச்சாலும் மிஸிக்கிட்ட ஏச்சு பேச்சிக் கேட்டு கிட்டுதான் இருக்கணும் இந்த லெச்சணத்துல நாளைக்கு போவலனா அவ்வளவுதான்" என்று அப்பா மறுத்துரைத்த வார்த்தைகள் அவரின் பக்கங்களுக்கான நியா யங்களை முன்னிறுத்தின.

அன்றும் முரன்பாடுகளோடு விடியல் வந்தலர்ந்தது.

வழமையான சட்டகத்துள் விழுந்தோம் நானும் அப்பாவும் "லீவு நேரத்துல லயத்தில் இருந்தால பயலுகளோட சுத்தி வீணாப் போயிடுவான் அப்பொறம் பிராது கேட்டு மாளாது நீங்க கையோட இவனயும் பங்களாவுக்கே கூட்டிக்கிட்டு போயிருங்க" என்று அம்மா பிடிவாதமாய் நிற்பதால் அப்பாவும் அதில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார்.வயசுக்கு மீறி வளர்ந்து விட்டதாக அடிக்கடி என்னை வையும் அம்மாவின் கரிசனையில் எப்போதும் குறைவிருக்காது.

அன்று வரை பங்களா வளாகத்தில் சுற்றித்திரிந்த நான் ஒருமுறையேனும் பங்களாவிற்குள் சென்றதில்லை அப்படியே சென்றாலும் குசினி பக்கம் வாசல் வரை போனால்தான் உண்டு ஆனால் அன்று எதிர்பாராமல் பங்களாவிற்குள் செல்லும் பாக்கியம் முதல் தடவையாய் கிட்டியது பங்களாவிற்குள் நுழைந்த போது நாசியை ஊடறுத்த சுகந்தம் என்னுள் புது பரவசத்தை ஏற்படுத்தியது. கணக்கற்று விரிந்துக் கிடக்கும் அறைகள் காற்றில் அசைந்தாடும் வர்ணச திரைச்சேலைகள் ஒவ்வொன்றும் மிக நேர்த்தியாய் ஒழுங்கமைக்கப்பட டிருந்தது. தரையை துடைத்து சுத்தப்படுத்தி முடித்தப் போது முதுகு தண்டில் இலேசாய் சோர்வு படர்ந்திருந்தது.

என்னுள் அன்று ஆயிரம் கேள்விகள் விரிந்தன தொரைக்கும் தொர சாணிக்கும் மட்டும் ஏன் இத்தனை அறைகள்? பாவணைக்குரிய அறைகளைத் தவிர மற்றையவையெல்லாம் பாவணையற்றுக் வெறுமனே கிடப்பதேன்? எனும் கேள்விகள் உள் நின்று குமைந்தன

நாளடைவில் சரளமாக பங்களாவிற்குள் உலவித் திரியும் அளவிற்கு வாய்ப்புகள் இருந்தன பங்களாவில் இருந்து விடை பெறும் ஒவ்வொரு நாளும்

அப்பா தலையை சொறிந்தப்படி "மாத்தியா வீட்ட இழுத்துக் கட்ட கிளாக்கர் நோனாக்கிட்ட கடுதாசி வாங்கணும் நீங்க கொஞ்சம் சொன்னா சௌரியப் படும்.." "புள்ளயும் வயசுக்கு வந்திருச்சி நாளைக்கு தேவ வச்சா நாளு பேரு வந்து போவவும் எடம்மில்ல" என்றதும் "நாளைக்கு ஞாபகத்துக்கு சொல்லுறது நான் பாக்கறது" என்று ஒவ்வொரு நாளும் நம்பிக்கைப் படர்த்தும் தொரையின் வார்த்தைகளில் அப்பா மாறாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

மறுநாள் அப்பா காய்ச்சலில் விழுந்து விட்டார் "சின்ராசு இன்னைக்கு நீதான் ராசா பங்களாவுக்கு போவனும் அப்பாவால எழும்பவே முடியல கண்ணு போயி மாட்டுப்பட்டிய கழுவிபுட்டு மட்டும் வந்துரு மிஸிக் கேட்டா அப்பாவுக்கு சொகமில்லனு சொல்லிப்புடு" என்றதும் மறுப்பேச்சின்றி பங் களாவை நோக்கி பயணித்தேன்.

அன்றையநாள் பேரை ஒப்பேத்தி விட்ட திருப்தியில் அப்பா அயர்ந்துப் போனார்.

மாட்டுப்பட்டியை கழுவி சுத்தம் பண்ணி முடிக்கவே போதும் போதும் என்றாகிவிட்ட நிலையில் பசி வயிற்றுக்குள் இரைந்துக் கொண்டிருந்தது. அருகில் கனிகளோடு சடைத்து நிற்கும் கொய்யாமரம்தான் பசியாற்றும் என்ற நம்பிக்கையோடு மரத்தில் ஏறிவிட்டேன் பசியாறும் வரை மரத்தில் கிடந்ததால் மரத்திற்கு கீழ் நின்று என்னை நோட்டமிடும் தொரசாணியைக் கவனிக்க வில்லை வழமைக்கு மாறாக கடுகடுப்பாய் கிடக்கும் முகத்தில் இலேசாய் புன்னகை அரும்பியிருந்தது "ஏய் உள்ள போயி வீட சுத்தமாக்கு என்றதும் கொய்யாமரத்தில் தொங்கிக் கொண்டிருந்த டீசேர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டு உள்ளே ஓடினேன்.

ஆள் அரவமற்று நிசப்தமாக இருந்தது விராந்தை. வாளியில் நுரைத்திருந்த ரின்ஷோ நீரில் தோய்ந்திருந்த துடைப்பான் தரையை வெகு லாவகமாய் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தது விராந்தையை ஆக்கிரமித்திருந்த சுகந்தம் வேலைப்பளுவை குறைத்திருந்தது. அருகில் நாற்காலியில் அமர்ந்தப்படி பத்திரி கையில் மூழ்கியிருப்பதாய் பாசாங்கு காட்டிக் கொண்டு என்னையே வெறித்துப் பார்க்கும் நோனாவின் ஓரப்பார்வை என்னை அசௌகரியத்தில் ஆழ்த்தியது. காலை மடித்து அமர்ந்திருந்ததால் வீங்கி புடைத்தாற் போல் இருக்கும் என்

பருத்த தொடைகளை நோட்டமிடுவதில் குறியாக இருப்பதாக தோன்றியது. நோனாவின் பார்வை என்னுள் ஏதோ ஊர்வது கணக்காய் இருந்தது பயம் முட்டியதால் மூச்சு வெப்பத்தை இரைத்தது அங்கு படர்ந்திருந்த அமைதி என்னுள் புதுப்புது எண்ணங்களை படரத்திக் கொண்டிருந்தது.

வேலை முடிந்த திருப்தியோடு விடை பெறுவதற்கு தயாரான போதுதான் "ஏய் போயி குளிச்சிட்டு வாறது ஓங்கப்பனுக்கு ஒரு நாள் பேரு குடுக்கச் சொல் லியிருக்கு இன்னைக்கு எல்லா வேலையும் நீதான் செய்யனும் என்றதும் தொர சாணியின் கட்டளையை ஏற்று மறுப்பேச்சின்றி அங்கிருந்து நகர்ந்துவிட்டேன். ஆனால் உள்ளுக்குள் பரவியிருந்த பயம் மட்டும் குறைவதாயில்லை.

பரபரப்பாய் வேலையில் தீவிரம் காட்டிய போதும் நோனாவின் ஓரப்பார்வை அடிக்கடி என்னுள் விழுவதை கவனிக்கத் தவறவில்லை அர்த்தமின்றி நகைப்ப தும் அளவுக்கதிகமாய் கரிசனை காட்டுவதும் புதுமையாய் இருந்தது.

நோனாவின் கரிசனையும் அணுகுமுறையும் வழிமாறி பயணிப்பதை புரிந்துக் கொள்வதற்கு அன்றைய நாளே போதுமானதாக இருந்தது.

"உங்கு போய் நாய் கூட்டைக் கழுவி எடுக்கறது அப்பிடியே மாத்தியா வந்தா வந்து சொல்ல வேணும்" என்றதும் ஏதோ சிறை அகன்ற திருப்தியோடு காற்றை கிழித்துக் கொண்டு வெளியில் ஓடி வந்து நின்றேன்.

கூட்டில் இருந்தப்படியே பம்மி வால் குழையும் நாய்கள் என்னைக் கண்டதும் துள்ளிக் குதித்து ஆர்ப்பரித்தப் போது நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. ஓவ்வொன்றாய் வெளியில் எடுத்து கட்டிவிட்டு கூட்டை சுத்தபடுத்த எத்தணித்தப்போதுதான் எதிர்பாராமல் அது நடந்துவிட்டது சங்கிலியை அறுத்துக் கொண்டு களு பள்ளா பங்களாவிற்குள் ஓடத்தொடங்கியதும் அதைப்பிடிக்கும் முயற்சியில் நானும் அதனூடே பங்களா விராந்தையைத் தாண்டி தொரசாணியின் அறையை ஓடியடைந்தப்போது முதல் தடவையாய் அதிர்ச்சியில் உறைந்துப் பேனேன். போன வேகத்தில் ஏதோவொன்றிற்காய் நாணியப்படி உடனேயே திரும்பிவிட்ட களு பள்ளாவோடு நானும் அறையில் இருந்து உடனே வெளியில் வந்து விட்டேன் ஆனால் மனக்கண்ணில் இருந்து அக்காட்சி மட்டும் அகல்வதாய் இல்லை அவ்வதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்னமே பாரிய இரைச்சலோடு முற்றத்தில் வந்து நின்ற தொரையின் பஜிரோ

உடலை நடுக்கி என்னை வியர்வையால் நனைத்தது.

ஸ்தம்பித்து அப்படியே நின்று விட்டேன்.

மறுநொடியே ஏதோ பாசாங்கு காட்டியப்படி ஓடி வந்து தொரையின் மார்பில் முகம் புதைத்து அழத்தொடங்கிய நோனாவின் பசப்பு என்னுள் ஆயிரம் சந்தேகச் சுடர்களாக துளிர்த்தன என்னையே வெறித்துப் பார்க்கும் தொரையின் கண்களில் கோபம் தொனித்திருந்தது. தன் கபட நாடகத்தின் ஈரம் காயும் முன்னமே கண்களில் மிரட்சியை காட்டும் தொரசாணியின் நடத்தை அரு வருப்பை ஊட்டியது.

கவனிப்பாரற்றுக் கிடக்கும் விசாலமான அறைகள் தொரை இல்லாத போது தொரசாணியின் சல்லாபங்களுக்கானவை என்பதை அறிந்தப்போது ஒற்றை யறையில் கேள்வி குறியாகிக்கிடக்கும் என் வாழ்வுச் சூனியம் உள்ளுக்குள் ஆத்திரத்தைப் படர்த்தியிருந்தது.

“பற பல்லோ உம்பட்ட மங் பாடமக் உகன்னாங் ஓயா கரப்பு வெடேட மங் தென்னாங்” என்றவாறு அருகில் கிடந்த விறகுக் கட்டையில் சரமாரியாகத் தாக் கத் தொடங்கியதும் சுதாகரிக்க முடியாமல் திகைத்துப் போனேன் எதிர்பாராத விதங்களில் எல்லாம் தாக்கப்பட்டதால் அடியுண்டு நைந்துப் போன இடங்களில் இருந்து இரத்தம் வழிந்தோடத்தொடங்கியது ஒரு விதமான கிறக்கம் கண்களை செருகியது அப்போது புள்ளியாய் தொரையும் தொரைசாணியும் கண்களில் இருந்து மறைந்துக் கொண்டிருந்தனர் அப்போதும் தொரசாணியின் கண்களில் ஈரம் கசியவில்லை என்பதை உணரக்கூடியதாக இருந்தது.

“ஆயே மே பெத்தே என்டெப்பா பலயான்” என்று ஏளனமாய் தலையில் பூட்ஸ் காலால் உதைத்து அலட்சியப்படுத்தியப் போது மனசு வெகுவாய் வலித்தது.

குறிப்பிட்ட தூரம் வரை என்னை தோட்டக்காரன் இழுத்து வந்திருந்தப் போதும் ஆங்காங்கே ஒட்டிக் கொண்டிருந்த நிதானத்தோடு திரும்பி பார்க் கிறேன் இறுக்கமாய் மனைவியை அணைத்தப்படி கம்பீரமாய் நடைபோட்டுக் கொண்டிருந்தார் துரை

அந்திவானம் சிவந்துக் கிடந்தது. மெது மெதுவாய் இருள் கவிழத் தொடங்

கியிருந்தது.

உருக்குலைந்துக் கிடந்த என்னருகில் குடும்பமே நிலைத்தளர்ந்திருந்தது வார்த்தைகள் வெளிநடப்பு செய்தமையால் எழுந்து மெதுவாய் காலை விந்தி விந்தி வாசலை நோக்கி நடந்து வந்து ஸ்தோப்பு சுவரில் சாய்ந்துக் கொள்கிறேன் உடலில் படர்ந்திருந்த ரணம் கண்ணீரின் வழி தன்னை ஆற்றுப்படுத்திக் கொண்டிருந்தது.

**வாசலில் சொருகப்பட்டிருந்த கருப்பந் தேயிலை கொழுந்துகள் வாடிக் கிடந்தன சின்ன உங்குவின் உணர்வுகளும் உண்மைகளும் போல...**

# 14

# அம்மாயி

## *Poem of Love*

நிசப்தம் அடர்ந்த இரவு மனசை ஒரு விதமாய் பீதியில் வீழ்த்தியிருந்தது. தொண்டைக் குழிக்குள் மேழும் கீழுமாய் ஏதோ உருண்டோடுவதைத் தவிர அம்மாயி உடம்பில் சீவன் இருப்பதற்கான அறிகுறிகள் குறைவாகவே இருந்தன.

மனசு நரகத்தில் தோய்ந்திருந்தது.

மனசில் கவிழ்ந்திருந்த இருளை விடவும் புகைப்படிந்துக் கிடந்த ஸ்தோப்பின் சுவர்கள் அதிகமாய் என்னை குழப்பத்தில் ஆழ்த்தியது.

சில நாட்களாய் ஊதுவர்த்தியை மேவி நாசியை அறுக்கும் அந்தக் குமட்டல் உணர்வு தொண்டைக்குள் நின்று வதைக்கத்தான் செய்தது. மரணத்தின் பயணத்தில் ஒவ்வொரு நிமிடமும் எவ்வளவு கொடுமையானது என்பதை உணர்ந்துக் கொண்ட தருணம் அது.

சில நாட்களாய் அம்மாயின் உடல் அசைவுகள் முழுமையாய் அடங்கி யிருந்தது. மேல் மூச்சும் கீழ் மூச்சும் அவ்வப்போது அவளை அம்மாயாக அடையாளப்படுத்திக் கொண்டிருந்தது. ஆனால் அம்மாயின் கண்களில் மட்டும் அதே ஒளிக்கீற்று சற்றும் மங்காமல் நின்று நிலைத்திருந்தது.

வலிகள் நிரம்பிய மனசுடன் கோடியில் ஒதுங்கியப் போது அங்கு குழுமி இருந்த கும்மிருட்டு மனசின் வலிகளை இன்னும் கணப்படுத்திச் சென்றது.

ஓடியோடி உழைத்து ஓடாய் தேய்ந்த உடல் நீட்டி நிமிர்ந்து கிடப்பதைத்தான் என்னால் ஜீரணிக்க முடியவில்லை வாயோயாமல் கதைச் சொல்லி என்னை கட்டியெழுப்பிய ஆளுமை சத்தி எடுத்தும் வயிற்றாலோடியும் நிலை தளர்ந்து கிடப்பதுதான் கொடுமை யாருமற்ற தனிமையில் வாலிபத்தின் கனவுகளோடு கைகோர்த்துக் கொண்டு அல்லாடிய தருணங்களில் தைரியமாக தோளைத் தட்டி நம்பிக்கை ஊற்றி வாழ்க்கையை வசப்படுத்திய வாய் நாறி நாசியை அறுப்பதை எண்ணிப்பார்க்கவே கஸ்டமாக இருந்தது.

மார்கழி பிறந்து விட்டால் அம்மாயி காட்டும் ஆர்வத்தை இப்போது நினைத் தாலும் உள்ளுக்குள் பரவசம் படரும் மாட்டு சாணத்தை கரைத்து வாசல் தொடங்கி சந்து பாதை வரைக்குமாய் தெளித்து கோலமிடும் அழகு இப்போதும் படமாய் விரிகிறது. அது மட்டுமா ஓட்டு லயத்து பருவப் பெண்களில் அம்மாயி கையில் நாட்டு முட்டையும் நல்லெண்ணையும் வாங்கிக் குடிக்காமல் யாரும் ஆளாக முடியாது அப்படி கரிசனையோடு எல்லோரையும் நேசித்த உள்ளத்தில் இருந்து பிரிய மனமில்லாமல் அல்லாடும் சீவனை எண்ணித்தான் வருந்தியது மனசு

அம்மாயின் பெருமைகளை பேசிப் பேசிப் எல்லோர் வாயும் அசந்துப் போன நிமிடங்களில் இஸ்தோப்பை நிசப்தம் ஆக்கிரமித்திருந்தது. அம்மாயி விடும் மேல் மூச்சு மட்டும் தெளிவாய் கேட்டுக் கொண்டிருந்தது.

விடாமல் மல்லுக்கு நிற்கும் ஈக்களின் உடும்பு பிடியோடு போராடி போராடி கைகள் அசந்துப் போயிருந்தன அறைகுறை சீவனோடு ஆங்காங்கே சில அசைவுகள் காட்டும் அம்மாயின் உடலமீது ஈக்களுக்கு என்னதான் அவ்வளவு பிரியமோ தெரியவில்லை எது எப்படியானாலும் ஈக்கள் மட்டும் குறைவதாய் இல்லை சுற்றச் சுற்றி வட்டமடிக்கும் ஈக்களின் தொல்லைகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன

அப்போதுதான் போர்வையை மேவி வெளிப்பட்ட அம்மாயின் கால்கள் கண்களில் பட்டது. அக்கணம் மனசு வலியின் உச்சம் தொட்டது. விகாரப்பட்டுக் வெடிப்புக்களோடு கிடக்கும் இந்தப் பாதகங்களின் பின்புலத்தை தேடிப்பார்ப்ப தற்கு யாருமே தயாரில்லை என்ற வேதனையும் விம்மலும் கண்ணீராய் வெளிப்பட்டது.

ஆனத் தோட்ட மலைமேடுகளில் சரளமாய் ஓடித்திரிந்த கால்களுக்கு ஓய்வென்பது மறுக்கப்பட்டதாகவே இருந்தது. மூன்று மாதங்களுக்கு முன்பு கூட கொட்டிய ஆடி மழையில் பத்தேக்கரில் பதினாறு கிலோவுக்காக அல்லாடிய கால்கள்தான் இவை திடும்மென முடங்கி நோயில் விழுந்ததுதான் வியப்பாய் இருக்கிறது.



உறவுகளுக்காய் ஓடியோடி உழைத்த பாதங்களில் யார் கண் பட்டதோ ஒரேடியாக இப்படி முடக்கம் கண்டு விட்டதே என்ற விம்மலுடன் மெதுவாய் உரமேறிய பாதங்களை தடவிப் பார்க்கிறேன் கருங்கல்லில் கை உராய்ந்த உணர்வு என் வேதனைகளுக்கு வழுவூட்டிப் போனது.

முழு நிலவு வானத்தில் உலவிக் கொண்டிருந்தது.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது யாருமற்ற தனித்தீவாய் ஸ்தோப்பு

என்னையும் அம்மாயையும் மட்டும் உள்வாங்கி இருந்தது.

அப்போது அம்மாயின் வாய்ப்புலம்பல் சற்று வலிமை பெற்றிருந்தது.

மு-னு-சா-மி...

மு-னு-சா-மி... என்று பிதற்றிய வார்த்தைகள் எங்கோ ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டிருந்த அம்மாயி குறித்த ஈரங்களில் வெப்பக்காற்று வாரி இறைத்தது. ஆவேசமாய் எழுந்து வெளியில் வருகிறேன் சாயம் கலைந்த சுருக்கங்களோடு கொடிக்கயிற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் சேலை அப்போதுதான் கண்ணில் பட்டது பிடிவாதமாய் இத்தனை நாட்களும் அணிந்து அழுக்கின் பிறப்பிடமாய் இருந்து மானத்தை மறைத்துக் கொண்டிருந்த கோடிக்கு வேரொரு கோடி ஈடாகாது என்பதுதான் அம்மாயின் எண்ணப்பாடு ஏனெனில் தவமாய் தவமிருந்து பெற்றெடுத்த முனுசாமி (தீ) வாளிக்கு வாங்கித் தந்த ஒரேச் சேலை அதுவாகும். அந்த ஒரு காரணத்தை தவிர வேரொரு காரணம் இல்லாத போதும் "ஏன் தாயி நான் செத்தா இந்த சீலயிலத்தான் சுத்திப் போடணும்" என்ற எதிர்பார்ப்பை முன்வைத்தப் போது உண்மையாகவே அதிர்ந்துதான் போனேன்.

பனி நன்றாக இறங்கியிருந்தது.

அம்மாயின் மேல்மூச்சும் கீழ்மூச்சும் சலியிடம் சிக்கி போராடிக் கொண டிருந்தது.

நிசப்தம் உறைந்திருந்த அக்கணம் அம்மாயிடம் இருந்து வெளிப்பட்ட தொனி அம்மாவுக்கு பொறிதட்டினாற் போல ஏதோவொன்றை உணர்த்தி யிருக்க வேண்டும் கண்களை மெதுவாய் தூக்கம் வருடத்தொடங்கிய தரு ணத்தில்

"அம்மாளு எழும்புடி கெழவிக்கு சேட்டுமக் கட்டி இழுக்குது இன்னெம் கொஞ்ச நேரத்துல முடிஞ்சிறும்"

"ஆளுக்கு கொஞ்சம் சாராயம் வையிங்க" என்றதும் நான் முந்தி நீ முந்தி என்று கிளாசும் கரண்டியுமாய் பணியில் இறங்கிய எலலோர் முகத்திலும் மிரட்சியும் கண்ணீரும் படர்ந்திருந்தது.

ஈரும் பேனுமாய் புழுத்திருந்த தலையை மார்பில் கிடத்தி மெதுவாய் இரண்டு கரண்டி சாராயத்தை பருக்கி முடிக்கிறேன். அம்மாயின் உடல் சூடு கணிசமாய் குறைந்திருந்தது அங்கேயும் அதே எதிர்பார்ப்புடன் என்னை எதிர்க் கொள்ளும் கண்களில் மட்டும் ஏக்கத்தின் வீச்சு படர்ந்திருந்தது.

தோட்டத்தில் எங்காவது இழவு விழுந்துவிட்டால் இரவிரவாக கண்விழித்து கிடப்பதோடு மறுநாள் உப்பு,புளி காரத்தோடு “துக்கசோறு” ஆக்குவது வரை நின்றுப் பிடிக்கும் அம்மாயின் காலம் முடியப்போகிறது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மெது மெதுவாய் கண்கள் இருண்டன மூச்சு சுருதி பிசகியப்படி அபசுரம் இசைக்க . . .

“கெழவி கெழவி இந்தா பாரு ஓ மவென் முனுசாமி வந்துட்டான் கண்ணத் தொறந்துப் பாரு கெழவி பாரு”என்று பக்கத்து வீட்டு சிவாப்பயலை இழுத்து அம்மா காட்டிய சாமர்த்தியம் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இறுக்கமாய் அவன் கைகளை பற்றியப்படியே அவன் வார்த்த சாராயம் உயிரை நனைக்கவும் விடைப் பெற்றுக் கொண்டது அம்மாயின் ஆன்மா.

ஆங்காங்கே இருள் விலகி விடியல் தன் இருப்பை காட்டியிருந்தது.

**வெறுமனே பக்கத்து வீட்டில் இருந்து பழகிய எனக்கே இவ்வளவுத் துடிக்கும் போது உதிரத்தை ஊட்டி வளர்த்த முனுசாமிக்கு எவ்வளவு துடிக்க வேண்டும் என்ற கேள்வி மட்டும் கம்பீரமாய் உள் நின்று குமைந்துக் கொண்டிருந்தது.**

“இருக்கிறம்”

# 15

# கருவலகம்

## *Expect (ing) ation*

மேகம் கரு கொண்டிருந்தது.

ஆங்காங்கே சிதறிய நீர்த்துளிகள் மழையின் வருகையை ஊர்ஜிதப் படுத்தின. கொடியில் மல்லாந்துக் கிடந்த ஆடைகளை மழையில் நனையாமல் எடுக்கும் முயற்சியில் போராடிக் கொண்டிருந்தாள் கௌரி.

அப்போது தூறல் அடை மழையாய் கொட்டத் தொடங்கிற்று.

மழை பூமியை குளிர்வித்துக் கொண்டிருந்தது மனசோ வெறுப்பின் உச்சத்தில் தோய்ந்து வெறுமையாய் கிடந்தது. பரந்துக் கிடந்த அறையில் தொங்கும் நாட்காட்டி அவளுள் அச்சத்தைப் படர்த்தி கொண்டிருந்தது அன்றொரு திங்கட்கிழமை 28ம் திகதி இன்னும் இரண்டு நாட்களில் இரண்டே நாட்களில் என்று வாய் முனுமுனுத்துக் சந்தோஷித்தது அப்போது அவளே அறியாமல் கைகள் மெதுவாய் அடிவயிற்றை வருடி ஆனந்தப்பட்டுக் கொண் டன. மறுகணம் இரண்டு நாட்களில் ஏதேனும் விக்கினம் என்று மனசு மருண்ட போது கண்களின் ஊடே வழிந்தொழிகியது கண்ணீர்.

இடைவிடாது கொட்டிய மழை உடலில் சோர்வு படர்த்தவும் நாற்காலியில் அப்படியே அயர்ந்துப் போனாள் கௌரி கனவுகளோடு ஒவ்வொரு நாளையும் எதிர்பார்த்துக் காத்திருந்து ஏமாற்றம் அடையும் வலி கௌரிக்கு புதுமையான தல்ல ஆனால் ஏமாற்றங்களுக்குப் பின்னும் கூட ஒவ்வொரு மாதமும்

எதிர்பார்ப்புக்குரிய மாதம்தான் இருபத்தெட்டு நாளுக்குள் உடைதெறியப்படும் கனவின் வலி இருபத்தெட்டு யுகங்கள் படர்தாத வலியை விடவும் கொடுமை யானது என்பதை எண்ணிப் பார்த்து அழுங்காத நாளே கிடையாது.

வானம் வரை உயர்ந்து கிடக்கும் சிவப்புச் சுவர்கள் மிடுக்குடன் கம்பீரமாய் காட்சியளிக்கின்றன புள்ளியாய் உள் நுழைந்து உயிராகும் புண்ணியத்தை பெறும் பொருட்டு தவமிருக்கும் விந்தணுக்களின் வலிகளை உணர்ந்ததிர்ந் தாள் கௌரி அந்நியோன்யமாய் நெருங்கி அடிவயிற்றை தடவிப் பார்ப்பதில் அப்படியொரு ஆனந்தம் பீறிடுகிறது தன் உதிரத்தையும் ஊனையும் கலந்து உருவாகப் போகும் உயிரின் உயிராலயத்தின் சுவர்களை உச்சி முகர்ந்தப்படி மல்லாந்துக் கொண்டப்போது அடிவயிற்றில் மின்னல் வெட்டினால் போல் வலி பிரவாகமெடுத்தது. வயிற்றை பிசைந்தப்படி புரண்டாள் கௌரி வியர்வை உடலை தெப்பமாய் நனைத்தது மரணத்தின் வலி அவளை வதைத்து, கழுத்து வரை பயம் நிரம்பி குரல்வளை நெரித்தது

பொதுவாகவே வயிற்றை வலி, ஆக்கிரமித்து விட்டால் இரண்டு நாட்களில் முழுமையாய் வயிறு சுத்தமாகி விடும் இந்த மாதத்தோதோடு திருமணமாகி ஆறு வருடங்களாகி விட்டன ஒவ்வொரு மாதமும் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றமடையும் வலியை வார்த்தைகளில் சொல்லத் தெரியவில்லை ஆனால் வெறுமையாக்கப்படும் இடம் மறுமுறை மறுமாதம் அதேயளவு எதிர்பார்ப்பு களோடு நிரப்பப்படும் விநோதம் அலாதியானது.

உடல் ஒரு விதமாய் கணக்கவே அடித்துப் போட்டாற் போல நீட்டி நிமிர்ந்தப்படிக் கிடந்தாள் கௌரி படபடப்பும்,குமைச்சலும் உள்நின்றுக் கொன்றது.

ஓர் உயிரை சுமக்க முடியாமல் திராணியற்று போய் விடுவோமோ என்ற அச்சம் கௌரியை அதிகமாய் வதைத்தது.

ஆறு வருட தவக்காலத்தில் ஒரு நாளேனும் முகம் சுளியாமல் அதே எதிர்பார்ப்போடு உள்ளங்கையில் வைத்து அவளை தாங்கும் குமரனின் கரிசனைக்கு அளவென்பது கிடையாது.

சில நேரங்களில் அவளே வியந்துப் போகும் அளவில் ஒரு தாயாய் இருந்து அவளை கவனிக்கையில் அதிரந்துதான் போவாள் கௌரி.

வைத்திய ஆலோசனைகளும் அறிவுரைகளும் பலிதமானதால் அதிகமாய் உடைந்துப் போயிருந்தாள் கௌரி

அன்று வழமைக்கு மாறாக விடியல் அவளுள் புது பரவசத்தை ஏற்படுத்தியிருந்தது உருக்கமாய் விண்ணப்பங்களை கடவுளிடம் விதைத்து விட்டு மெல்லிய காற்று உடலைத் தழுவும் காட்டு மாரியம்மன் கோவிலில் தஞ்சமடைந்திருந்தாள்.


உள்ளுக்குள் பரவியிருந்த நம்பிக்கை அடுத்த மாதத்திற்கான பதியங்களை தன் நிலத்தில் நம்பிக்கையோடு பதியமிட்டிருந்தது.

கரிசனையோடு குமரன் தன் கட்டுக்குள் கௌரியை அடைத்து தூங்கிப் போகும் தருணங்களில் எல்லாம் அவனுக்கே தெரியாமல் இறுக அணைத்து முத்தமிட்டு துடிதுடித்துப் போகும் கௌரியின் இருதலை கொள்ளி மனசுக்கு அவஸ்தை அதிகம்தான். முகம் சுளியாமல் ஒவ்வொரு மாதமும் அவளோடு இணைந்து எதிர்பார்த்து காத்திருக்கும் குமரனின் குழந்தை மனசை எண்ணி வருந்தாத நாளே கிடையாது பெண்மையின் உள்ளுணர்வுகளை எல்லாம் புரிந்து நடக்கும் அவனுக்கு இன்னொரு பெண் குழந்தையைப் பரிசளிக்க வேண்டும் என்ற கனவு கனவாகவே போய் விடுமோ என்ற பீதி அவளுள் நோயாகவே படர்ந்திருந்தது.

ஆழ்ந்த உறக்கத்தில் கனவுகளோடு சஞ்சரித்திருந்தாள் கௌரி அன்றலர்ந் திருந்த சிவப்பு ரோஜாக்களோடு வெள்ளாடையில் தேவதையாய் ஜொலித்துக் கொண்டிருந்தாள் அப்போது எங்கோ மெல்லிசையாய் எழுப்பப்படும் இசை இத யத்தை வருடிக்கொண்டிருந்தது கௌரி பரவசத்தில் ஆழ்ந்துக் கொண்டிருந் தாள். கண்களை இறுக மூடியப்படி பரவசத்தில் ஆழ்ந்நிருந்த தருணம், எதிர் பாராமல் கைகளில் தவழ்ந்த சிவப்பு ரோஜாக்களை யாரோ வெடுக்கென்று பறித்து கசக்கி எறிந்த நிமிடம் திடுக்கென கனவுலகில் இருந்து மீண்டாள்.

படபடவென்று மனசு அடித்துக் கொண்டது சுதாகரித்துக் கொள்ள முடியா மல் அருகில் இருந்த குளிர்ந்த நீரின் உதவியை நாடினாள் மளமளவென்று அவ்வளவு நீரையும் பருகி முடித்தாள் அப்போதும் உள்ளுக்குள் படர்ந்திருந்த படபடப்பு தணிவதாய் இல்லை இது எதையுமே அறியாமல் நிம்மதியான உறக்

கத்தில் ஆழ்ந்திருந்த குமரனின் மயிர்கள் அடர்ந்திருக்கும் மார்பினில் முகம் புதைத்தப்போது கொஞ்சம் ஆசுவாசப்பட்டுக் கொண்டாள்.



மனசு பலவாறு குழம்பியது. கனவுப் பலன்களை குறித்து பலரும் பலவாறு கதையாடிய தருணங்கள் நிழறபடமாய் விரிய உள்ளுக்குள் அழுத்திய காயங்கள் கண்ணீராய் குமரனின் மார்பை நனைத்தது அப்போதும் மழை மட்டும் இடைவிடாது பெய்துக் கொண்டிருந்தது.

காலம் தன் பாதையில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்தது. எப்போதும் அவளுள் விரியும் அக்கணங்கள் மட்டும் மனசை விட்டு அகலாதப்படிக்கு இருந்தன யாருமற்ற தனிமையில் பரந்த மணல்வெளியில் வெயிலின் உக்கிரத்தோடு அல்லாடும் கொடுமை அடிக்கடி அவளை கனவுலகினுள் அழைத்து துன்பத்தில் ஆழ்த்துவது தவிர்க்க முடியாமல் இருந்தது.

ஒரு தசாப்தம் கடந்து விட்ட நிலையிலும் அதே எதிர்பார்ப்பும் ஏக்கமும்

கௌரியை விட்டு அகலாமல் அப்படியே இருந்தது மாதம் தவறாமல் தொடரும் துன்பத்தில் இருந்து மீள முடிகிறதோ இல்லையோ ஊரார் படர்த்தும் துன்பத்தில் இருந்து அவளால் மீளவே முடியவில்லை.

வருத்தத்தில் ஆழ்ந்திருந்த காலங்களில் கவனிப்பாரற்று களைகள் மண்டியிருந்த பூக்கன்றுகளை சுத்தப்படுத்துவதில் தீவிரமாய் இருந்தாள் கௌரி அப்போதுதான் நீண்ட நாட்களாய் எதிர்பார்த்து காத்திருந்த சிவப்பு ரோஜா தன் முதல் மொட்டை அவிழ்த்திருந்தது கண்ணில் பட்டது.

அப்போது அவளுள் படர்ந்த ஆனந்தத்திற்கு அளவென்பது கிடையாது. மறுகணம் அடிவயிற்றை தடவுவதும் காற்றில் அலையும் ஒற்றை ரோஜாவை தரிசிப்பதுமாக முறுவலித்தாள். மனசின் மூலையில் ஒட்டிக்கொண்டிருந்த நம்பிக்கை மட்டும் அதே வீரியத்தோடு கிடந்தது.

வழமைக்கு மாறாக உடலில் தோன்றிய அறிகுறிகள் அவளுள் புது மாற்றங்களைத் தந்தப் போதும் எதையும் ஊர்ஜிதமாக நினைக்க முடிய வில்லை பருக்கள் முகத்தை ஆக்கிரமித்திருந்தன இலேசான மயக்கம் எப் போதும் அவளுள் நிரம்பி இருந்தது. உணவில் பிரியப்பப்படாத போதும் மனசில் தெம்பிருந்தது.

பத்து வருடங்களுக்கு பின் அவளுள் படர்ந்திருந்த நம்பிக்கை விருட்சம் வானமளவு உயர்ந்து நின்றது.

இரு திங்களாய் உள்ளுக்குள் வளரும் உயிர் காட்டும் உணர்வு அவளை வேறொரு உலகிற்கு அழைத்துச் சென்றது. அவளுள் முடங்கியிருந்த உணர்வு கள் உயிர் பெற்று எழுந்த தருணம் அது. குமரனுக்கோ இருப்புக் கொள்ள வில்லை வானைத் தொட்டு திரும்பியிருந்தான். ஒரு தசாப்தத்திற்கு பின்னர் மொட்டவிழுதத் துடிக்கும் அவாவில் தோட்டத்தில் பதியமிடப்பட்டிருக்கும் ரோஜா கன்றுகளைத் தரிசிக்கச் சென்றாள் கொளரி வழமைக்கு மாறாக தோட்டத்தில் ஆயிரம் மொட்டுக்கள் அரும்பி இருந்தன. அவையிடையே நீண்ட நாட்களாய் எதிர்பார்த்திருந்த சிவப்பு ரோஜா அழகாய் பூத்து சிரித்தது.

ஒவ்வொரு நாளும் எதிர்பார்ப்புக்குரிய நாளாய் விடிந்தது. அன்று 28ம் திகதி இன்னும் இரண்டு நாட்களில் மூன்று மாதங்களை எட்டிப்பிடித்து விடலாம் என்று மனசு ஆசுவாசப்பட்டுக் கொண்டது. பத்து வருடத் தாம்பத்தியத்தில்

எதையோ சாதித்து விட்ட பெருமிதம் குமரனின் முகத்தை இன்னும் பொலிவாக்கியிருந்தது. கௌரி காலம் வெளுத்திருந்த கூந்தலை கருமையாக்கும் முயற்சியில் தீவிரம் காட்டிக் கொண்டிருந்தாள்.

அன்று 29ம் திகதி மறுநாளை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாள் கௌரி உடல் ஒரு விதமாய் அசதியுற்றிருந்தது. மேகம் கருமுகிலை கருகொண்டிருந்தது. மப்பும் மந்தாரமுமாய் கிடந்த பொழுது மழை பொலிவிற்கான தகுதியைப் பெற்றிருந்தும் மழையை மட்டும் பொலியவில்லை. உடல் அடிக்கடி வியர்ப்பதும் பின்னர் குளிர்ந்து வழமைக்கு திரும்புவதுமாய் இருந்தது. மனசு எதை எதையோ எண்ணி குழம்பியது.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருக்க வேண்டும் அடி வயிற்றில் இலேசாய் பிரவாகமெடுத்த வலி மெதுமெதுவாய் தன் வீரியத்தை காட்டத்தொடங்கியிருந்தது. இறுக்கமாய் கைகளை கழுத்தில் கொழுவியப்படி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த குமரனை எழுப்பி விடயத்தை சொன்னப் போது பேயறைந்தாற் போல் ஸ்தம்பித்து நின்றான்.

"ஒன்னுமில்ல பயப்படாத இப்பத்தான் தைரியமா இருக்கணும்" என்று மார்போடு அவளை அணைத்து ஆறுதல் அளித்த அக்கணம் மின்னல் வெட்டினாற்போல வயிற்றை வலி ஆக்கிரமித்திருந்தது. இவ்வளவு நேரமும் கரு கொண்டிருந்த வானம் அடைமழையாய் கொட்டத்தொடங்கிற்று அசதியில் கால்களை நீட்டி அப்படியே மடியில் மல்லாந்துக் கொள்கிறாள் கௌரி.

**இடைவிடாது கொட்டிய வானம் தெளிவாய் கிடந்தது.**

**விடியல் தோட்டத்தில் அலர்ந்திருந்த ரோஜாக்களை உதிர்த்து விட்டிருந்தது**

(ஞானம்)

# 16

# விட்டில்கள்

***Belive the best***

வானம் இருண்டிருந்தது.

வழமைக்கு மாறாக வீட்டில் அமைதி நிலவிக் கொண்டிருந்தது. அவ் அமைதியை குலைக்கும் அரவமாக நித்தியாவின் தேம்பல் அமைந்திருந்தது.

விம்மி புடைக்கும் உதடுகளை கடித்துக் கொண்டு உள்ளுக்குள் புழுங்கினாள் நித்தியா.

மனசு குழப்பத்தில் உறைந்திருந்தமையால் வயதுக்கு மீறிய விபரீதமான எண்ணங்கள் அவளை ஆட்கொண்டிருந்தன பட்டாம் பூச்சிகள் வரிசையாக பயணிக்கும் அழகை கூரையில் நின்று லயித்திருந்தப் போதுதான் இரும்பைக் காய்ச்சி இதயத்தில் இறக்கினாற் போல அவ்வார்த்தைகள் அவள் உள்ளத்தை கசக்கி பிழிந்தன கனவுகளோடு தானும் பட்டாம் பூச்சியாய் சிறகடிக்க பிரியப்படும் போதே சிறகினை அறுத்தெறிவதாய் அமைந்து விட்ட தாத்தாவின் வார்த்தைகள் அவளை அதிகமாகவே காயப்படுத்தியிருந்தது.


வருத்தங்களுக்கிடையில் கிடந்து உழல்வதும் பின்னர் வழமைக்கு திரும்புவதும் இயல்பாகிப் போன நிலையில் நித்தியாவால் இன்றொரு தீர்மானத் திற்கு வர முடியாத நிலையில் கிடந்தாள்.

எவ்வளவு நேரம் அழுதிருப்பாளோ தெரியாது முகம் வீங்கிப் புடைத்திருந்தது. இயல்பாகவே எல்லோருடனும் கலகலப்பாக பேசுவதும் பிஞ்சு மனம் மாறாத

குறும்புகளுக்கும் அவளிடம் குறைவிருக்காது சலனமற்றுக் கிடக்கும் அவளின் வாழ்க்கை குளத்தை அடிக்கடி வார்த்தை கல்லெறிந்து சலனப்படுத்துவது தாத்தாதான்.

வானம் வெளுத்திருந்தது.

தோட்டத்து ஊஞ்சலில் அமர்ந்து தேவதையாய் ஆகாசத்திற்கும் பூமிக்கும் ஆடிக்கொண்டிருந்தாள் நித்தியா. அவளளவில் மட்டுபடுத்தப்பட்ட உலகம் சந் தோஷங்களால் மட்டுமே ஆக்கப்பட்டிருந்தது. தோழிகளுடன் நொண்டியும் கிட்டி புல்லும் கிளித்தட்டும் விளையாடுவதுமாய் அவளுலகம் விரிந்துக்கிடந்தது.



நேரம் ஐந்து மணியை கடந்திருந்தது பரபரப்புடன் ஸ்தோப்புக்குள் ஓடி வந்த நித்தியா கரி படிந்திருந்த கேத்தலில் குடத்து நீரை நிரப்பி அடுப்பை மூட்டுவதில் மும்முரமாக இருந்தாள் எப்போதும் எதையாவது புறுபுறுக்கும் தாத்தாவின் நச்சரிப்புகள் தொடங்கப்பெற்றன

எதையும் உள்ளெடுக்காமல் மளமளவென வீட்டை பெருக்கத் தொடங் கினாள் நித்தியா அப்போதைய அவளின் தேவை அம்மா வருவதற்கு முன்னம் எல்லா வேலைகளையும் முடித்து விட வேண்டும் என்பதில் குறியாக இருந்தது.

இருள் மெதுவாக கவிழத் தொடங்கியிருந்தும் அம்மா வீடு வந்து சேராமல் இருந்தது அவளுள் இலேசாய் பயத்தை படர்த்தியிருந்தது. எதைக் கேட்டாலும் எரிந்து விழும் தாத்தாவிடம் கேட்பதற்கு எண்ணமிருந்த போதும் அச்சம் அதை தடுத்திருந்தது.

ஏற்றி வைக்கப்பட்டிருந்த லாம்பு அறையில் மங்கலாக ஒளி பரப்பிக் கொண் டிருந்தது அருகில் புத்தகங்களைப் பரப்பி விட்டப் படி மண்டியிட்டிருந்தாள் நித்தியா. வரும் போதே "நித்தியாமா செல்லம் இங்க கொஞ்சம் ஓடி வா தாயி" என்று கூக்குரலிடும் அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டதும் காற்றாய் பறந்து வாசலை வந்தடைந்தாள் நித்தியா.

அம்மா தனியாளாக அல்லாமல் இன்னொருவரோடு வந்திருப்பது அவளை வாசலோடு நிறுத்தி விட்டிருந்தது இல்லையெனில் இவ்வளவு நேரத் திற்கு அம்மாவின் தோளில் குரங்கு கணக்காய் தொற்றி இருப்பாள் "நித்திமா இவுங்கள உள்ளுக்கு கூட்டிட்டுப்போ அம்மா கால் கைய அலம்பிகிட்டு வாறேன்" என்றதும் மறுப்பேச்சின்றி அவரை உள்ளழைத்து சென்றாள் நித்தியா.

நன்றாக இருள் படர்ந்திருந்து.

சாமி விளக்கு நடு வீட்டில் ஏற்றப்பட்டிருந்தது அம்மாவும் தாத்தாவும் பயபக்தி யோடு கைகூப்பி வணங்கியப்படி அமர்ந்திருந்தனர். கூந்தலை அள்ளிச் சொருகிய படி நெற்றி முழுவதும் பரவியிருந்த குங்குமத்தோடு அமர்ந்திருந்தார் பாப்பாத்தி பூசாரி. நித்தியா மட்டும் பயத்தால் அம்மாவின் முந்தானையில் மறைந்திருந்தாள்

தாத்தா கால்களில் பரவியிருந்த புண்ணை சொறிந்தப்படியே எதையோ பெரிதாய் எதிர்பார்த்தப்படி உட்கார்ந்திருந்தார்.

சிமிலி விளக்கின் ஒளியில் தேவதையாய் ஜொலிக்கும் நித்தியா தன்னை மறந்த நிலையில் விளக்கினை ரசிக்கத் தொடங்கியிருந்தாள் குளிர்ச்சியாய் ஒளி பரப்பும் விளக்கின் மீது இந்த விட்டில்களுக்குத்தான் எத்தனை காதல் வருவதும் போவதுமாய் இருக்கின்ற அதே நேரத்தில் உயிரையும் மாய்த்துக் கொள்ளும் தீவிரத்தை நித்தியாவால் புரிந்துக் கொள்ளும் அளவுக்கு வயசு இல்லாதபோதும் விளக்கில் விழுந்து மாயும் விட்டில்களுக்காக வருந்தும் வயதை அடைந் திருந்தாள்.

திடும்மென தலையில் தேசிக்காயை வைத்து மசித்து விபூதியை அள்ளித் தெளிக்கும் வரை அங்கென்ன நடந்தது என்பதை அவள் அறிந்திருக்கவில்லை ஆனால் தெளிவாய் தாத்தா எப்போதும் சொல்லி அவளை காயப்படுத்தும் அந்த வார்த்தைகளுக்கு பாப்பாத்தி பூசாரி உரமேற்றியிருக்கிறார் என்பதை புரிந்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. "இந்த புள்ள எனக்கு சேர மாட்டேங்குதுனு

சொன்னா யாரு கேக்குறா நான் படுற பாடு எனக்குதான் தெரியும்" என்று தாத்தா அதே அக்கினி வார்த்தைகளை அள்ளி வீசி விட்டு சென்ற போது நெருப்பில் தோய்ந்த ரணம் நித்தியாவை வதைத்தது.

அம்மாவின் முகம் கருகிய தேயிலைக் கொழுந்தாய் வாடியிருந்தது. முகத்தில் குழப்பத்தின் ரேகைகள் நங்கூரமிட்டிருந்தன தாத்தாவின் புறுபுறுப்புகள் சற்று வழு பெற்றிருந்தன அம்மாவும் தன் பக்க நியாயங்களை எடுத்துச் சொல்வதற்கு எவ்வளவோ முயன்ற போதும் அவர் பிடியில் சற்றும் தளர்வு தோன்றுவதாயில்லை

**பனியுடன் விடியல் வந்தலர்ந்திருந்தது.**

தாத்தா ஏதோ தீர்மானம் பெற்றவராய் "இங்க பாரு அம்மாளு இந்த புள்ளைக்கு சேட்ட இருக்கு சேட்ட இருக்குனு நானும் சொல்லிக்கிட்டுத்தான் இருக்கேன் நீ காதுல போட்டுக்கிறதாவே இல்ல நேத்து பூசாரி சொன்னத கேட்டதானே இனிமேலயும் இந்த சனியென் இங்க இருந்தா என்ன அள்ளி வெச்சுட்டுத்தான் போகும் நீ என்னா செய்வியோ ஏது செய்வியோ இத மொதல்ல ஒழிச்சி கட்டு" என்று தீர்மானமாய் நின்ற போது ஆடிப் போனாள் அம்மா.

"இப்பிடி திடுதிப்புனு ஒழிச்சி கட்டுனா எப்பிடிப்பா இவள என்னாத்தான் செய்யிறது" என்று புழுங்கியப் போது "இத வயித்தில் வாங்கிட்டு வர முன்னுக்கு யோசிச்சிருக்கனும்" என்று வார்த்தை கத்தியால் ஒரேடியாய தாத்தா அறுத்தப் போது அம்மா எவ்வளவு வருத்தப்பட்டிருப்பார் என்பதை அவளால் புரிந்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

"இங்க பாரு இந்த சனியன் கொஞ்ச நாளைக்கு கொழும்புல போயி இருக்கட்டும் வேல கூட பேசிட்டேன் இந்த புள்ள பக்கத்துலயே இருக்கனால ஒடம்பு முழுசும் எரியுது இந்த புண்ணப் பாரு ஆறவே மாட்டேங்குது ஒனக்கே தெரியும் இது ஆத்தா இருக்கிற ஒடம்பு இதுக்கு காத்து கருப்பு ஒத்துகாதுனு"என்று மார்தட்டி பேசும் தாத்தாவின் வார்த்தைகளில் வாயடைத்து நின்றாள் அம்மா.

"நான் என்னா செத்தா போவச சொன்னேன் கெரகம் கொஞ்சம் சரியில்லாம இருக்கு கொஞ்ச நாளைக்கு தள்ளி இருந்தா சரியா போயிரும்முனுதான் சொல்லுறேன் கோயிலுக்கு போயிட்டு வாறேன் நல்லா யேசிச்சி பாரு" என்று தாத்தா விடை பெற்றுக் கொண்டபோது அம்மா இடிந்துப் போய் அப்படியே உட்கார்ந்து விட்டார்.

"அம்மா நான் போயிட்டா தாத்தாவுக்கு சொகமாயிடும்மா"?

"சொல்லுமா சொல்லுமா" என்று அம்மாவை உலுக்கியப் போது அம்மாவிடம் இருந்து அழுகை மட்டுமே பதிலாக வந்தது. தாயின் நீண்ட நேர மௌனத்தை சம்மதமாக எடுத்துக் கொண்டாள் நித்தியா "அம்மா நான் கொழும்புக்கு போறேம்மா பேறேன் தாத்தாவோட மட்டும் சண்ட போடாதம்மா என்று உறுதியாக நின்ற போது நித்தியாவை மார்போடு அணைத்து அழுது தீர்த்தாள் அம்மாளு "ஏன் தாயி அம்மா மேல கோவமில்ல இல்ல" என்றதும் அதே குழந்தை இயல்போடு "அம்மா தாத்தாவுக்கு சேறாத நாள இங்கயிருந்து கொழும்புக்கு பேறேன் கொழும்புல உள்ளவங்களுக்கும் நான் சேறலனா...? என்றதும் பதிலின்றி விக்கித்துப் போனாள் அம்மாளு.

அப்போது பக்கத்து வீட்டு பவித்ரா "அஞ்சி யஞ்சிச் சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே வஞ்சனைப் பேய்கள் என்பார் இந்த மரத்தில் என்பார் அந்தக் குளத்தில் என்பார்" எனும் பாரதி பாடலை உரக்க வாசித்துக் கொண்டிருப்பது காதில் விழுந்ததும் விருட்டென எழுந்தோடினாள் நித்தியா அப்போது அம்மாளு பெரும் மூச்சொன்றை விட்டு ஆசுவாசப்பட்டாள்.

**மழை பொழிவிற்காக வானம் இருண்டிருந்தது.**

இரவு பூத்த நிலவு விழுந்தும் வானில் கிடந்தது மப்பும் மந்தாரமுமாய் இருந்த பொழுது குறிப்பால் எதையோ உணர்த்துவதாக தோன்றியது.

அப்போது கண்ணில் அடரந்த மிரட்சியோடு ஓடி வந்த பணிய லயத்து பாண்டி "அம்மாளக்கா அம்மாளக்கா ஓங்கப்பாவுக்கு மாரடப்பு வந்து விழுந் துட்டாரு இப்பத்தான் தூக்கிட்டு போறாங்க" என்றதும் லயமே முத்தாலம்மா சந்தியை நோக்கி திரண்டது நித்தியா மட்டும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

அதுவரை திரண்டிருந்த மழை மேகம் பொலியத் தொடங்கியது தெப்பமாய் நனைந்து விட்டிருந்த நித்தியா வழமைக்கு மாறாக பெற்ற தெம்புடன்

"நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்" எனும் வரிகளை உரக்க கூறியப்படி வீட்டை நோக்கி பயணித்தாள்.

(அகிலம்)

# 17

# இந்திரலோகத்தில் தோட்டக்காட்டான்

## *Pressure stone*

நேரம் பிறபகல் 12.00 நேயர்கள் கேட்டுக் கொண்டிருப்பது சொர்க்கம் எப்.எம். இது சொர்க்கம் செய்திகள் வாசிப்பவர் விசித்திர குப்தன் முதலில்

### தலைப்புச் செய்திகள்

"திருட்டுத்தனமாய் சொர்க்க வாசலில் இதுவரை காலமும் பம்மி இருந்து பம்மாத்துக் காட்டிய பயில்வான் பொலிசாரால் கைது.

"சித்திர குப்தனுக்கும் எமதர்மனுக்கும் இடையில் பாரிய முறுகல்"

"நரக தேசத்து மக்கள் எமதர்மனுக்கு எதிராக போர்க்கொடி"

"மலை ஆசாமி பயில்வான் எமதர்மன் மீது மேன்முறையீடு"

"கடந்த சில மணித்தியாலங்களாக பதற்றத்தில் உறைந்திருந்த சொர்க்க தேசம் தற்போது வழமைக்கு திரும்பி இருக்கிறது"

### உள்நாட்டுச் செய்திகள்

சித்திர குப்தனின் கணக்கெடுப்பின்படி நரக தேசத்தில் இருந்து தப்பிய பூலோக மலைவாசி பயில்வான் சொர்க்க தேசத்து பொலிசாரின் முற்றுகையில் கைது.

இச்சம்பவம் குறித்து சொர்க்காபுரி பதற்றத்தில் உறைந்துள்ளது.

முடுக்கிவிடப்பட்டுள்ள பயில்வான் முடிச்சவிக்கியின் பின்புலம் குறித்து பொலிசார் பின்வரும் தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளனர்.

பூலோகத்தில் மலைவாசிகளை ஏய்த்து பிழைக்கும் கைங்கரியம் தெரிந்த பயில்வான் பலே கில்லாடி என்பது விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

சங்கம் வளர்த்து சந்தாபறிப்பது. உண்ணாவிரதத்தில் ஊர்ப் பொரணி பேசி வம்பளப்பது. குயிலை பிடித்து நாக்கறுத்து கூவச் சொல்வது மயிலை மசித்து தோகை அறுத்து வசிறி செய்வது, சம்பள உயர்விற்கு குரல் கொடுப்பது, பின்னர் கிம்பளம் வாங்கி வாய்பொத்தி மௌனியாவது என பலதரப்பட்ட கோணங் களில் குற்றப் புலனாய்வு துறையினரின் விசாரணைகள் முடுக்கி விடப்பட் டுள்ளன.

இச்சம்பவம் குறித்து ஆங்காங்கே எழுந்து மறையும் சலசலப்புகளுக்கு சொர்க்கம் (எப். எம்.) செவிசாய்த்த போது.....

" சொர்க்க தேசத்தின் மாண்புக்கு பங்கம் விளைவித்த பயில்வான் போன்ற சான்றோர்கள் களைந்து எறியப்பட வேண்டும்"

"ஊரை ஏய்த்து பிழைத்த இவ்வாறான குள்ளநரிகளின் கொட்டத்தை அடக்க வேண்டும்.

"மீண்டும் நரக தேசத்தில் உழன்று மடியட்டும் அந்த சண்டாளன்"

"கழுத்தில் சுருக்கிட்டு கொல்லப்பட்டும் அந்த துரோகி"

இது சொர்க்க தேசத்தில் பயில்வான் விளைவித்த கலகம் குறித்த மக்களின் கருத்தாடல் **7 1/2** ஆவது சரத்து நேயர்கள் கேட்டுக் கொண்டிருப்பது சொர்க்கம் எப். எம் இன் செய்திகள் தொடர்வது.

## வெளிநாட்டுச் செய்திகள்

மலைச் (ஆ) சாமி பயில்வானின் தேசத்துரோக குற்றச் செயல் குறித்து சர்வதேசத்தின் கண்ணோட்டம் இவ்வாறாக இருந்தது.

பாலஸ்தீன விடுதலை தலைவர் யசீர் அறபாத் " சொர்க்க தேசத்தின் சட்டதிட்டங்களில் சதி விஷமூட்டிய பாவிக்கு மன்னிப்பு என்பது மறுக்கப்படட்டும்"

மேலும் இது குறித்து இந்திய தேசப்பிதா மகான் காந்தியிடம் கேட்டபோது "

தொப்புள் கொடி உறவின் ஊடே சொர்க்கம் வரை படர்ந்த விஷக்கொடி ஆணி வேருடன் களைந்து எறியப்படட்டும்" என்றார். தென்னிலங்கையின் முக்கிய பெரும் புள்ளி ஒருவரிடம் இது குறித்து வினவியபோது " கூலிப் பட்டாளங்களின் நாய்குரைப்பு சொர்க்கம் வரை எட்டி விட்டதோ! தொலைந்தது சொர்க்கம்" என பலவாறாக கருத்துக்கள் படர்ந்தன. சொர்க்கம் நேரம் பிற்பகல் 12.20.

## வர்த்தக வாணிபச் செய்திகள்

நரக தேச மக்களை ஆசைவார்த்தை காட்டி சொர்க்க தேசத்தில் பூக்கச் செய்வதாய் பணம் பறித்த மலைச் (ஆ) சாமியிடம் இருந்து மூன்று கோடி ரூபாய் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இப்பணம் குறித்து வர்த்தக வாணிப அமைச்சர் மலைமுழுங்கியின் கவனத்திற்கு கொண்டுவந்தபோது

"இனிமேல் மக்கள் மலைச் (ஆ) சாமி போன்றவர்களிடம் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர். இச்சந்தர்ப்பத்தில் மக்களுக்கு தெளிவாக ஒன்றை மட்டும் கூறலாம் என்று நினைக்கிறேன். பறிமுதல் செய்யப்பட்ட இப்பணம் " நரி தின்ற கோழியாய்" பிறர் அறியாதபடிக்கு தகுந்த வழிமுறையில் மக்களை சென்றடையும் என்பது உறுதி.

அது சொர்க்கம் செய்திகளுக்காக வர்த்தக வாணிப அமைச்சர் "மலை முழுங்கி"

## விளையாட்டுச் செய்திகள்

சமகாலத்தில் சொர்க்க தேச மக்களால் பெரிதும் போற்றப்பட்ட சூதாட்ட களத்தின் இறுதிச்சுற்று நேற்று "மாயவன்" அரங்கில் விமரிசையாக நடைபெற்றது. பயில்வானின் வழித் தோன்றலான " சூதாட்டம்" ஏனைய விளையாட்டு தளங்களை வெற்றிடமாக்கி கேள்விக் குறியாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சூதாட்ட களத்தின் சாதகபாத தன்மைபற்றி எமதர்மனுக்கும் சித்திரகுப்தனுக்கும் இடையில் எழுந்த வாக்குவாதம் இருவருக்குமிடையில் முறுகலை தோற்றுவித்துள்ளதாக சர்வதேச விளையாட்டு கழகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேயர்கள் இதுவரை கேட்டது சொர்க்கம் (எப்.எம்) இன் விளைாட்டுச் செய்திகள்.

## செய்திச் சாரம்

“திருட்டுத்தனமாய் சொர்க்க வாசலில் இதுவரை காலமும் பம்மி இருந்து பம்மாத்துக் காட்டிய பயில்வான் பொலிசாரால் கைது”

“சித்திர குப்தனுக்கும் எமதர்மனுக்கும் இடையில் பாரிய முறுகல்”

“நரக தேசத்து மக்கள் யமதர்மனுக்கு எதிராக போர்க்கொடி”

“மலை ஆசாமி பயில்வான் எமதர்மன் மீது மேன்முறையீடு”

“கடந்த சில மணித்தியாலங்களாக பதற்றத்தில் உறைந்திருந்த சொர்க்க தேசம் தற்போது வழமைக்கு திரும்பி இருக்கிறது.”

நேரம் பிற்பகல் 12.30

நேயர்கள் இப்பொழுது முதல் இரண்டு மணிவரை “ மக்களின் குரல்” சமூக கண்ணோட்டத்தை கேட்கலாம். மக்களின் குரல் பரந்துபட்ட தளத்தில் நின்று கொண்டு மக்களின் உரிமைக்குரலாய் எட்டுத் திக்கும் ஒலிப்பது நீங்கள் அறிந்ததே.

இந்த வாரமும் கூட சமகால நிகழ்வுகளின் தொகுப்பாய் கருத்து பரிமாற்ற மாய் சொர்க்க தேசத்து மக்களிடம் அரும்பியிருக்கும் சில சந்தேகங்களை தீர்த்து வைக்கும் முகமாக கௌரவ எமதர்மன் அவர்களும் மலைச்சாமி பயில்வான் அவர்களும் எம் கலையகம் வந்து உள்ளனர்.

“வணக்கம் திரு எமதர்மன் அவர்களே!

“வணக்கம்”

வணக்கம் திரு மலைச்சாமி பயில்வான் அவர்களே!

“வணக்கம்”

“திரு பயில்வான் அவர்களே அனுமதி இல்லாமல் நரக தேசத்தில் இருந்து தலைமறைவாகி சொர்க்க தேசத்தில் வாசம் செய்தமைக்காக தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றீர். இந்த சந்தர்ப்பத்தில் உங்கள் அந்தரங்க காரியதரிசியைக் கொண்டு எமதர்மன் மீது மேன்முறையீடு செய்திருக்கின்றீர். முன் பின் முர ணான இச்சம்பவம் குறித்து எழுந்துள்ள கருத்தாடல்களுக்கு விளக்கம் தரும் வகையில் அதனுடைய பின்புலம் குறித்து சற்று விளக்க முடியுமா?

"தம்பி..."

"குத்துவது பின்னர் கொடைவது. கிண்டி கெழுங்கெடுப்பது, அடிச்சி நுங்கெடுப்பது இதெல்லாம் ஓங்க மீடியா வேல"

"அதுனால தான் இந்த மாதிரி நிகழ்ச்சியில கலந்துக்கிறது இல்ல" அதுனால பொறுத்திருந்து பாருங்க! எல்லாம் புரியும்

"சரி உங்களுடைய மேன்முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா?

"நிச்சயமாக"

"திட்டமிட்ட வகையில் இழைக்கப்பட்டிக்கும் தீங்கு குறித்து தெளிவாக மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. அது பிரதம நீதியரசரின் கவனத்தை ஈர்க்கும் என நம்புகிறேன்.

"இடையில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும்"

தேசம் விட்டு தேசம் தாவியரை சரியென்றும் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்றும் வாதாடுவதை நாகரிகமாக கருதுகின்றீரா?

நாகரிகம்....!

மம்....

பிறவிக் குணத்தை திடுமென மாற்றியமைக்கச் சொல்வது தான் உங்கள் ஊடாக தர்மமோ!

"திரு பயில்வான் அவர்களே எமதர்மன் மீது தங்களால் தொடுக்கப்பட் டிருக்கும் மேன்முறையீட்டின் அடிப்படை குறித்து " மக்கள் குரல்" நேயர்களுக்கு தெளிவுபடுத்த முடியுமா?

நிச்சயமாக...

" ஊரை ஏய்த்து உடல் வளர்க்கும் குள்ள நரிகளின் கூட்டத்தில் என்னைப் படைத்துவிட்டு பசுவின் குணத்தை என்னில் மட்டும் எதிர்பார்ப்பது எந்த விதத்தில் நியாயம்?

"குட்டக் குட்டக்குனிந்து திரானியற்று கிடக்கும் அடைக்கோழிகளை விட்டுவிட்டு குட்டும் மிடுக்கு சேவரை பழிப்பது நியாயம்தானா?

"என்மீது முடுக்கி விடப்பட்டிருக்கும் குற்றங்களை எல்லாம் உங்களால் பட்டியல் இடத்தான் முடியும்"

"அதனுடைய வலி எனக்கு மட்டும்தான் தெரியும்."நரக தேசத்தில் அனுபவித்த கொடுமைகளை எல்லாம் வெறுமனே வார்த்தைகளில் சொல்லி சிறுமை படுத்த விரும்பவில்லை.

என் குழுமத்தை சார்ந்த ஒருவர்கூட இல்லாத நரக தேசத்தில் தனிமையில் உழன்ற அவஸ்தைகளை காவியமாக பாடிவிடலாம்.

ஏன் எனக்கு மட்டும் இப்படியொரு கொடுமை. பார்த்து, பார்த்து பட்டணத்து நட்சத்திர விடுதிகளில் தின்று வளர்ந்த உடல் எண்ணெய்யில் விழுந்து கருகிய கொடுமையை நீங்கள் அறிய வாய்ப்பில்லை.

"விஷ ஜந்துக்களில் கிடந்து உழன்ற நிமிடங்களையும் நீங்கள் அறிய மாட்டீர்கள்"

"இதற்கெல்லாம் பதில் சொல்லத்தானே வேண்டும்"

"அதற்காகத்தான் இந்த மேன் முறையீடு"

" என் சமூக மக்களை ஏய்த்துப் பிழைத்ததாக என்மீது ஒரு குற்றச்சாட்டு"

"ஒப்புக்கொள்கிறேன்"

"நான் மட்டும் தான் அவர்களை ஏமாற்றினேனா?"

"அதன் பின்புலத்தை தேடிப்பார்க்கத்தானே வேண்டும்"

"மலைவாசிகள் ஏமாறப் பிறந்தவர்கள்"


"அவர்களை திட்டமிட்டு வேறு ஏமாற்ற வேண்டுமா?"

அந்த அடிப்படை புரியாமல் நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் எமதர்மன் மீது மேன்முறையீடு செய்யப்பட்டது தவறா?

"உள்ளுக்குள் ஒரே குடைச்சல்"

"என் சமூகத்தில் இருந்து மரணித்த பழனி தொடங்கி பாண்டிவரை எவரையும் இதுவரை நரகத்தில் காணவில்லை"

உள்ளுக்குள் விழுந்த ஆர்வம் திருட்டுத்தனமாய் சொர்க்க தேசத்தில் என்னை நுழையத்தூண்டிது.



என்னவொரு ஆச்சரியம். மலைவாசிகள் எல்லோரும் சொர்க்க தேசத்தில் அல்லவா "ஒய்யாரமாய் ஓடியாடித்திரிகிறார்கள்.

அப்போதுதான் சித்திர குப்தனின் கண்ணில் மண்ணை தூவிவிட்டு சொர்க்க தேசத்தில் பம்மினேன்.

இதைக் கண்டுதான் என்னை கொலை குற்றவாளிபோல கூண்டில் நிறுத்தியிருக்கிறார்கள் இந்த அறிவிலிகள்"

"நன்றி திரு பயில்வான் அவர்களே!"

"உங்களால் முன் வைக்கப்பட்ட சகல கருத்துக்களையும் தலைவர் எமதர்மன் செவிமடுத்திருக்கிறார்"

"இனி அவரின் விளக்கத்தை செவிமடுப்போம்"

"திரு எமதர்மன் அவர்களே தன் குழுமத்தில் உள்ள எவரையும் நரக வாசஸ்தலத்தில் கண்ணுற்றிராத பயில்வான் அவர்களை தேடும் முயற்சியின் விளைவாக விளைந்த குழப்பமாக இவற்றை எடுத்துக் கொள்ளலாமா?"

"நல்ல கேள்வி"

"மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் "புதிய தந்திரம்"

"பயில்வான் போன்ற குள்ள நரிகள் ஈரை பேனாக்கி பேனை பெருச்சாளி யாக்கும் கைங்கரியம் தெரிந்தவர்.

ஒரு குழுமத்தை ஏய்த்து பிழைத்த கொடும்பாவிக்கு சொர்க்கம் வானொலி வக்காளத்து வாங்குவதில் எனக்கு உடன்பாடில்லை.

மன்னிக்கவும் திரு எமதர்மன் அவர்களே!

"நகரத்தில் மலைவாசிகள் எவரேனும் இல்லை என்கிறார் பயில்வான்."

"இந்த நடைமுறையின் பின்னணி பற்றி அறியலாமா?"

"நிச்சயமாக.....

**"பிறந்தது முதல் நரகத்தில் உழலும் மலைவாசிகளுக்கு மீண்டுமொரு நரகம் தேவை இல்லை என்பது எம் அரசாங்கத்தின் கொள்கை"**

மலைவாசிகளின் இரத்தம் பருகிய காட்டேரி பயில்வானுக்கு இது குறித்து பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது?

கூலிப்பட்டாளங்களால் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்ட மலைவாசி களின் துயரம் தோய்ந்த ஒவ்வொரு நாள் சீவியமும் நரக தேச நடைமுறை யோடு ஒப்பிடும் போது துக்கமானது.

அவர்களை மீண்டும் நரகத்தில் இட்டு வதைக்க வேண்டிய அவசிய மிருப்பதாய் எனக்கு படவில்லை.

வாழும் காலமதில் அந்த பச்சை மண்ணை பிசைந்து குரங்காகவும் பிள்ளையாராகவும் பிடித்து விளையாடிய பயில்வான் போன்ற ஆசாமிகளுக்கே இவ்வளவு வருத்தமிருக்குமானால் பாவம் அந்த வெள்ளை உள்ளங்கள் இங்கேயாவது கொஞ்சம் வாழட்டுமே!

திரு எமதர்மன் அவர்களே உங்கள் மீதான மேன் முறையீடு பற்றி யாது கருதுகின்றீர்.

“பாவம் பூலோகத்தில் தன் மனைவி தன் அனுமதி இல்லாமல் குசுவி னாலும் மேன்முறையீடு செய்த பழக்க தோஷம் முட்டி மோதி தெளியட்டும் அந்த ஜடம்” பசப்புக்காட்டி பூலோகத்தில் மக்களை ஏய்த்துப் பிழைத்த “ பருப்பு” இங்கு வேகாது.

ஏதோ மேன் முறையீடாம் விசாரணையாம் வேடிக்கையாக இருக்கிறது பயில்வானின் பிதற்றல் வசமாக மாட்டிக் கொண்டதன் எதிர்வு கூறல் இவை எல்லாம் பயில்வானுக்கான தண்டனை முடிவாயிற்று. அதற்குள் எந்த பிரேரணைக்கும் இடம் கிடையாது. மீண்டும் மலையகத்தில் பிறந்து “ வாழும் காலத்தில் நரகத்தில் உழன்று” மீள்வதுதான் பயில்வானுக்கான சரியான தண்டனையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஓடி உழைத்து களைத்த உள்ளங்களின் உதிரத்தில் உயிர் பிழைத்த பயில்வான் போன்ற அட்டைகளும் பாட்டாளி வர்க்கத்தின் வலி உணரத்தானே வேண்டும் “ பிறந்து உழட்டும் அந்தப் பேய்பிறப்பு” தறி கெட்டுத் திரியும் தலைமை கூட்டத்தில் சுற்றித்திரிந்த பயில்வான் பாட்டாளி கூட்டத்தில் கொஞ்சம் பஞ்சம் பிழைக்கட்டும்.

என கண்ணில் ஒளி தெறிக்க உரத்து ஒலித்த எமதர்மனின் குரல் மக்களின் குரலை நிறைவுக்குக் கொண்டு வந்தது.

முதல் தடவையாய் பயில்வானின் கண்களில் பயம் முட்டியது. மனசு படபடத்தது...

கண்கள் இருண்டன.....

**“தகவலும் தொகுப்பும் எம்முடையது தீர்மானம் உம்முடையது” என்ற சொர்க்க எப்.எம். இன் தாரக மந்திரம் காற்றுடன் கலந்து வானலையை நிறைத்தது.**

**-ஜீவநதி-**



என்னை
ஆண்டவன் ஒரு கூழாங்கல்லாக,
இந்த அற்புதமான ஏரியில்
வீசியபோது... ஏரியின் மேற்புறத்தில்
எண்ணிலடங்காத வட்டவளையங்களை
உருவாக்கி சலசலப்பை ஏற்படுத்தினேன்...

ஆனால், ஆழம் மிகுந்த
அந்த ஏரியின் அடியில்
சென்று சேர்ந்தபோது
மிகவும் அமைதியாகி விட்டேன்...
- கலீல் ஜிப்ரான்

KODANGI
ISBN : 978-955-0634-01-9

*Printed :* Design Lab, Colombo 13. 0114 575 777, 077 53 83 13 9